உதயன்

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
28°c 26°c

பக்கம் 38 | சுடர்: 28 | கதிர்: 289 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 26, புதன் 11.09.2013

# அரசை தர்மசங்கடப்படுத்தாதீர்

## யாழ்ப்பாண பத்திரிகையாளர்களிடம் அமைச்சர் பஸில் நேற்று உருக்கம்

பஸிலின் செய்தியாளர் மாநாட்டு முழு விவரம் உள்ளே 2 ஆம் பக்கத்தில்

யாழ்ப்பாணம். செப்ரெம்பர் 11
போரின் போது காணாமற் போனவர்கள் தொடர்பாகக் கேள்விகளைக் கேட்டுத் அரசைத் தர்மசங்கடப்படுத்தாதீர்கள் என்று பத்திரிகையாளர்களிடம் உருக்கமாகக் கேட்டார் பொருளாதார மேம்பாட்டுத்துறை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.
வடமாகாண சபைத் தேர்தல் பரப்புரைக்காக யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளார் அமைச்சர். 'கிறீன் கிராஸ்' விடுதியில் நேற்றுக் காலை செய்தியாளர்களைச் சந்தித்தார்.
போரின் போது காணாமற் போனவர்கள் தொடர்பில் அவரிடம் ஊடகவியலாளர்கள் முக்கியமாகக் கேள்வி எழுப்பினர்.
"காணாமற்போனவர்கள் மற்றும் காணி அபகரிப்பு ஆகிய இரு விடயங்களும் தமிழ் மக்களின் மனங்களை நெருடிக் கொண்டிருக்கின்ற நிலையில் உங்களின் அபிவிருத்தி மக்களுக்கு எப்படி மகிழ்ச்சியை அளிக்கும்?" என்றார் செய்தியாளர் ஒருவர்.



"காணாமற்போனவர்கள் போன்ற சில விடயங்களை நீங்கள் எங்களிடம் கேட்காதீர்கள். அந்தந்தத் தரப்பினரிடமே கேளுங்கள். வேண்டுமென்றே அரசை தர்மசங்கடத்துக்கு உள்ளாக்கும் வகையில் காணாமற்போனோர் பிரச்சினை தொடர்பில் கேள்வி எழுப்ப வேண்டாம்" என்றார் பஸில்.
தெற்கிலும் காணாமற் போனவர்கள் பிரச்சினை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். "இராணுவத்தினரின் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் எங்கே என்று கேட்கிறார்கள். எனவே காணாமற்போனவர்கள் பிரச்சினையை அரசியலாக்காதீர்கள். பெற்றோரின் மனதை மேன்மேலும் புண்படுத்தும் வகையில் செயற்படாதீர்கள். பாதிக்கப்பட்ட பெற்றோரை ஆற்றுப்படுத்தும் நடவடிக்கைகளை நாம் செய்து வருகின்றோம்" என்றார் அமைச்சர் பஸில். (உ-5)

இலங்கைக்கு போர் கப்பல்கள் தமிழர்களின் நன்மைக்காகவே 10

மீண்டும் விரிவாக ஆய்வு செய்க 11

சச்சினுக்கு எதிரான தீவுகள் புதுவியூகம் 27

## வடக்கு இளைஞர்களுக்கு சயனைட் குப்பிகள் தயார்

### கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை சாடுகிறது அரசு

கொழும்பு. செப்.11
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை 'வடக்கு இளைஞர்களுக்கான சயனைட் குப்பி' என விமர்சித்துள்ள அரசு, அதை தோற்கடிப்பதற்கான போராட்டத்தில் இறங்கியுள்ளதாகவும் அறிவித்தது.
30 வருடகால போரின் மூலம் தமிழ்க் கூட்டமைப்பு எந்தவொரு பாடத்தையும் கற்றுக் கொள்ளவில்லை என்றும் தமிழ், சிங்கள மக்களை நிரந்தரமாகப் பிரிப்பதற்கே அது முயற்சிக்கின்றது என்றும் அரசு குற் றஞ்சாட்டியுள்ளது.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் செய்தியாளர் மாநாடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.
அமைச்சர்களான டலஸ் அழகப்பெரும, சுசில் பிரேமஜயந்த, பௌஸி ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். இதன் போது கூட்ட மைப்பின் தேர்தல் விஞ் ஞாப னம் தொடர்பில்

25

## ஜெனிவாவின் அடுத்த பொறி போர்க்குற்ற விசாரணையே

### நவிப்பிள்ளையே அறிவிப்பார் என்கிறது தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு, செப்.11
"சர்வதேச போர்க்குற்ற விசாரணையிலிருந்து இலங்கை அரசு தப்பமுடியாது என் பதே ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் அடுத்த பொறியாக அமையும். ஜெனிவாவில் இந்த அறிவிப்பை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையே விடுப்பார்."
இவ்வாறு தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதற்கான காரணங்களையும் தெளிவாக விளக்கியுள்ளது.
இலங்கையில் மீறப்படும் மனித உரிமைகளுக்கு எதிராக ஐ.நாவில் உலக நாடுகள் கண்டனங்களைத் தெரிவித்ததன் ஊடாக இந்த நாட்டின் ஆட்சி எவ்வாறு இருக்கின்றது என்பதை சர்வதேசம் அறிந்து கொள்ளும் என்றும் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.
இலங்கை அரசு சட்டம், ஒழுங்கைப் பேணுவதில் பொறுப்புக் கூறியே ஆகவேண்டும் என்று ஜெனிவாவில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 24ஆவது கூட்டத்தொடரில் வலியுறுத்திய நவநீதம் பிள்ளை, இலங்கையில் மனித உரிமைகள் தொடர்ந்தும் மீறப்படுவதற்கும், மனித

25



வடமாகாணத் தேர்தல் பரப்புரையில் ஈடுபட நேற்று யாழ். வந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க யாழ். ஆயர் இல்லத்தில் ஆயர் மேதகு தோமஸ் சவுந்திரநாயகம் ஆண்டகையை சந்தித்துப் பேசினார்.

## கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்துக்கு எதிராக வழக்கு

கொழும்பு.செப் 11
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு எதிராக இலங்கைச் சட்டத்தரணிகள் ஒன்றியம் நீதிமன்றம் செல்லவுள்ளது. ஒன்றியத்தின் இணைப்பாளர் சட்டத்தரணி கபில கமகே இதனைத் தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனம், இலங்கையின் அரசமைப்புக்கு எதிரானது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இந்த நிலையில் தேர்தல்களுக்கு முன்னதாக தாம் இந்த விடயத்தை நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லவிருப்பதாக அவர் கூறினார். (து)

## அனைத்துத் தேர்தல்களிலும் இனிமேல் இணைந்து போட்டி

### நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் கூட்டமைப்புடன் ஒப்பந்தம்



யாழ்ப்பாணம். செப்.11
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், நல்லாட்சிக்கான மக்கள் இயக்கமும் தொடர்ச்சியாகச் சகல தேர்தல்களிலும் இணைந்து போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளன. தேர்தல்களில் இணைந்து போட்டியிடுவதற்கும் அதற்குரிய வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்குமான உடன்படிக்கை ஒன்று நேற்றுமுன்தினம் இருதரப்புக்கும் இடையே கைச்சாத் திடப்பட்டுள்ளதாகக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்

25

## வவுனியாவில் இன்று ஜனாதிபதி பரப்புரை

வவுனியா. செப். 11
வடமாகாண சபைத் தேர்தலில் ஆளுந்தரப்புக்கு ஆதரவாக முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டத்தை இன்று புதன் கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வவுனியாவில் ஆரம்பித்து வைக்கிறார்.
ஜனாதிபதியின் வருகையை ஒட்டி நேற்றே வவுனியாவில்பாது

25

## ஜெனிவாவில் இனப்படுகொலையை விளக்கும் புகைப்படக் கண்காட்சி

கொழும்பு.செப் 11
ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 24ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில் ஐ.நா. முன்றலில் ஈழத்தமிழர்கள் மீது இலங்கை அரசு நடத்திய இனப் படுகொலையை விளக்கும் புகைப்பட கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.
லோகநாதன் மருதையாவினால் சேகரிக்கப்பட்ட புகைப்படங்களின் காட்சி எதிர்வரும் 15ஆம் திகதி வரையும் அதன் பின்னர் 23ஆம் திகதியி லிருந்து 27 ஆம் திகதிவரையிலும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.
இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் ஆகியோரின் புகைப்படங்களும் விமான குண்டுவீச்சினால் கொல்லப்பட்ட சடலங்களின் காட்சிகளும் இதில் இடம்பெற்றுள்ளன.
இனப்படுகொலையை விபரிக்கும் இப்புகைப்படங்களை ஐ.நா.மனித உரிமை பேரவை கூட்டத்தொடரில் கலந்து கொள்ள வந்திருக்கும் உலக நாடுகளின் பிரதிநிதிகளும் ஜெனிவாவில் உள்ள பொதுமக்களும் பார்வையிட்டு வருகின்றனர்.
இதேவேளை, இப்புகைப்பட கண்காட்சியை தடை செய்யுமாறு ஜெனிவாவில் உள்ள இலங்கை தூதரகம் ஜெனிவா

25

## மோசடி இல்லாத தேர்தலே உலக நாடுகளின் விருப்பம்

### யாழ். ஆயரிடம் ஆஸி. தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம். செப்.11
வடமாகாண சபைத் தேர்தல் மோசடி இல்லாமல் நீதியாக நடைபெறவேண்டும். அதுவே உலக நாடுகளின் விருப்பமும் எதிர்பார்ப்பும் என்று தெரிவித்தார் இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் அல்மா ரொபின்மூடி. யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ்

25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முடியும் வரையும் காணி கையளிப்பு இல்லை

## அமைச்சர் பஸில் நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.11
தேர்தல் முடியும்வரை மக்களின் காணிகளை மீளக் கையளிக்கும் எந்த நிகழ்வுகளும் இனி இடம்பெறாது என்று யாழ்ப்பாணத்தில் நேற்று தெரிவித்தார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.
தேர்தல் பரப்புரைக்காக யாழ்ப்பாணம் வந்துள்ள அமைச்சர் பஸில் செய்தியாளர்களிடம் பேசினார்.
வலி. வடக்கில் மக்களின் காணிகளை அரசு சுவீகரிப்பது குறித்து அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.
நேற்றிரவு தன்னிடம் பேசிய தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய காணி கையளிப்பு நிகழ்வுகளை செப்ரெம்பர் 21ஆம் திகதி வரை நிறுத்தி வைக்குமாறு கேட்டுக் கொண்டார் என்றும் அமைச்சர் கூறினார்.

**மஹிந்த அரசு காணிகளை எடுக்கவில்லை**

அந்தக் காணிகளை மஹிந்த அரசு எடுக்கவில்லை என்று தெரிவித்தார் அமைச்சர். "போர் காரணமாக அவசரகால நிலையின் கீழ் அந்தக் காணிகள் பெறப்பட்டன. குறித்த காணிகள் இந்திய அமைதிப் படையினர் இருந்த காலத்திலேயே எடுக்கப்பட்டன. 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் ஓர் அங்குலக்காணிகூட சுவீகரிக்கப்படவில்லை" என்றார் அமைச்சர்.
2009ஆம் ஆண்டு போர் முடி



வடைந்ததைத் தொடர்ந்து கைப்பற்றி வைத்திருந்த காணிகளை அரசு மீளக் கையளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.
அரசின் பொதுத் தேவைக்காக வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் காணிகள் சுவீகரிக்கப் படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். "தென்பகுதியில் காணிகளைச் சுவீகரிக்கும்போது எழும் விமர்சனங்களைவிட யாழ்ப்பாணத்திலும் சம்பூரிலும் காணிகளைச் சுவீகரிக்கின்றபோது பிரதேசவாத, இனவாத விமர்சனங்கள் எழுகின்றன" என்றார் அவர்.

**போர் துயரம்தான்**

எந்தக் காரணத்தை முன்னிட்டும் போர் குறித்து மகிழ்ச்சி அடைய முடியாது. அது எப்போதும் துன்பகரமானதுதான். ஒரு சிலரால் மேற்கொள்ளப்பட்ட விளைவே இந்தப் போர். போரால் கடந்த காலத்தில் ஏற்பட்ட வடுக்களை நீக்க வேண்டும். அத்தகைய ஒரு நிலைமை மீண்டும் உருவாகக்கூடாது. அதற்காக இந்த மாகாண சபைத் தேர்தலில் வடக்கு மக்கள் சரியான முடிவை எடுக்க வேண்டும்.
போரில் பறிபோன உயிர்களைத் தவிர ஏனைய அனைத்தையும் மீட்டுத் தருவோம் என்று ஜனாதிபதி ராஜபக்ஷ கூறியிருக்கிறார். அதற்கமைய வடக்கு - கிழக்கில் நட்டஈடு வழங்கி வருகின்றோம்.

**பாயும் புலிச் சின்னத்தைப் பார்த்ததும் பயம்**

போர் முடிந்து மக்கள் கதிர்காமர் முகாமில் இருந்போது 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான் அங்கு சென்றேன். அப்போது ஒரு தாயார் ஓடி வந்து எனது கையைப் பிடித்து வங்கியில் வைத்த தங்க நகைகளை மீட்டுத் தருமாறு கேட்டார்.
அதை நிரூபிக்க ஏதாவது ரசீது இருக்கிறதா என்று அந்தப் பெண்ணிடம் கேட்டேன். அவர் ஒரு துண்டை எடுத்து நீட்டினார். அதைப் பார்த்ததும் நான் அதிர்ந்து போய்விட்டேன். அதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. அதை உடனே என் பக்கத்தில் இருந்த வினோ எம்.பியிடம் கொடுத்து விட்டேன். ஏனென்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளுக்காகவே வாக்குக் கேட்டது. இப்போது புலிகளில்லை. எனவே புலிகள் கொடுக்க வேண்டிய பணத்தை அவர்கள்தான் கொடுக்க வேண்டும் - என்றார் பஸில்.

**அதிக இராணுவம்**

தேர்தலின்போதும் வடக்கில் அதிக இராணுவம் இருப்பதாக சில அரசியல் கட்சிகளாலும் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களாலும் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்த நிலையில் நீதியான தேர்தல் நடக்குமா என்று அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.
பதிலளித்த அமைச்சர், "இங்கு அழுத்தங்களை எதிர்நோக்கிக் கொண்டிருப்பது சுதந்திரக் கட்சியும் அதன் ஆதரவாளர்களும்தான். அரசியலுரிமை அற்ற கிராம அலுவலர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து செயற்படுகிறார்கள். அரச ஊழியர்களுக்கு அவர்கள் அழுத்தம் கொடுக்கிறார்கள்" என்றார்.

**விக்கியின் விலாசம்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் க.வி. விக்னேஸ்வரனின் பெயரை யாழ்.மாவட்ட வாக்காளர் பட்டியலில் காணக்கிடைக்க வில்லை என்று திடீரெனச் சொன்னார் அமைச்சர் பஸில்.
"அவரது பெயர் கொழும்பு தேர்தல் மாவட்டத்திலேயே இருக்கிறது. விக்னேஸ்வரனுக்கு அராலியில், தொண்டமானாற்றில் எத்தனை உவர் நீர் தடுப்பு அணையில் எத்தனை துருசுகள் இருக்கின்றன என்று தெரியுமா? ஆனால் எனக்குத் தெரியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று எண்ணியிருந்தால் இந்தப் பிரதேசத்தை சேர்ந்த ஒருவரையே முதலமைச்சர் வேட்பாளராக்கி இருக்க வேண்டும்" என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த)

## அரசியலா? அரச சேவையா? எதை விரும்புகிறார் சந்திரசிறி

### கபே அமைப்பு கேள்வி

கொழும்பு,செப் 11
வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்குத் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவது நிறுவன ஒழுங்கு விதிகளை மீறும் செயல் எனவும் அவர் அரசியல் அல்லது அரச சேவை என்பவற்றில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் 'கபே' இயக்கம் தெரிவித்துள்ளது.
'கபே' இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசார மேடைகளில் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உள்ளமை புதுமை மற்றும் கவலையளிக்கிறது. இது ஆரோக்கியமான விடயம் இல்லை என்பதால் கபே இயக்கம் இதனை வன்மையாகக் கண்டிக்கிறது.
அரசமைப்பின் 154 (ஏ) சரத்தில் ஆளுநர் மற்றும் அவருடைய கடமைகள் அதிகாரங்கள் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. ஜனாதிபதியால் வழங்கப்படும் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டியவர் என்பதுடன் அது நிறைவேற்றுக் கடமைகளாகும். மாகாண சபையில் நிறைவேற்று அதிகாரம் பெற்றுள்ள நபர் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி பிரசார நடவடிக்கையில் பங்குபற்றுவதால் அவர் சுயாதீனமான நபரல்லர்.
கௌரவ பதவி வகிக்கும் நபர் மாகாண சபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தேர்தலில் சுயாதீன நபராக இருக்க வேண்டியது முக்கியமானதாகும். ஆனால் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு இவர் உரமூட்டுகிறார்.
ஆளுநர் தனிப்பட்ட அரசியல் சிந்தனையைக் கொண்டிருக்க முடியும். ஆனால் அரசியலில் ஈடுபடுவது ஒழுக்கமான செயலல்ல. ஆளுநர் மக்கள் சேவையாளரே தவிர அரசியல் கட்சி சேவையாளர் அல்ல.
வட மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசியல் மேடைகளில் தோன்றுவதால் சந்திரசிறி தனது தனிப்பட்ட அரசியலை வெளிப்படுத்தியுள்ளார். இதே நடவடிக்கையில் வடமேல் மாகாண ஆளுநரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் மேடைகளில் தோன்றினார். ஆனால் அவருக்கு விடுக்கப்பட்ட அழுத்தங் களை அடுத்து அவர் தற்காலிக மாக விலகிக் கொண்டுள்ளார்.
வட மாகாண ஆளுநர் தனிப்பட்ட அரசியல் சிந்தனைக்கு மதிப்பளிக்கும் அதேவேளை, ஆளுநர் பதவிக்கு உள்ள கௌரவத்தை அவர் பாதுகாக்க வேண்டும் என கபே இயக்கம் கேட்டுக் கொள்கிறது- என்றுள்ளது. (த)

## சர்வாதிகார ஆட்சிக்கு முடிவுகட்ட ஐ.தே.கவுக்கு வாக்களியுங்கள்

### வடக்கு மக்களிடம் ரணில் கோரிக்கை

கொழும்பு, செப்.11
"சர்வதேச சமூகம் விரும்பாத சர்வாதிகார ஆட்சி நடத்தும் மஹிந்த அரசுக்கு எதிர்ப்பைக் காட்டவும்கடும் அழுத்தத்தை கொடுக்கவும் வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வடக்கு மக்கள் வாக்க ளிக்கவேண்டும். "இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார் எதிர்க் கட்சித் தலை வரும் ஐ.தே. கவின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.



சங்கானை பொதுச்சந்தை மண்டபத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
"நாட்டில் தமிழ், முஸ்லிம், சிங்களம் ஆகிய மூவின மக்களும் சம உரிமையுடன் சந்தோஷமாக வாழும் சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடிய ஒரேயொரு கட்சி ஐக்கிய தேசியக் கட்சி தான்.
தெய்வேந்திரமுனை தொடக்கம் பருத்தித்துறை வரை நான் இதையே மீண்டும் மீண்டும் கூறிவருகிறேன். ஆளுந்தரப்பு அரசியல்வாதிகள் மாதிரி மக்களை ஏமாற்றும் கருத்துகள் எதனையும் நான் கூறவில்லை. உண்மையைத் தான் கூறுகின்றேன்.
ஐக்கிய தேசியக் கட்சியினால் தான் இந்த நாட்டுக்கு விடிவு கிடைக்கும். சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். எனவே, வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றால் அது மஹிந்த அரசுக்குப் கடும் அழுத்தங்களைக் கொடுக்கும். நாட்டுக்குத் தீர்வு கிடைக்கும்" என்றார்.
யாழ்ப்பாணத்திற்கு சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று செவ்வாய்க்கிழமை ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக சங்கானை மற்றும் காரைநகர் பிரதேசத்திலும் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டார்.
அதன் பின்னர் மாலை யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்தை சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, டி.எம்.சுவாமிநாதன் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் வட மாகாணசபைக்கான முதலமைச்சர் வேட்பாளர் தி.துவாரகேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (த)

## இலங்கை ஆண்களில் 14.5 வீதத்தினர் பலாத்காரத்தில்

கொழும்பு,செப் 11
இலங்கையில் 14.5 சதவீதத்துக்கு அதிகமானோர் அல்லது 10 மனிதரில் ஒருவருக்கு மேற்பட்டோர் குறைந்தபட்சம் ஒரு தடவையாவது பெண் மீது வன்புணர்வு செய்ததை ஒப்புக் கொண்டனர் எனப் பெண்களுக்கு எதிரான வன்முறை என்னும் ஐ.நா ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது. இந்த ஆய்வில் ஆறு நாடுகளை சேர்ந்த 10 ஆயிரம் ஆண்கள் பங்கேற்றனர்.
பெண்களுக்கு எதிரான வன்முறை எவ்வளவு தூரம் பரவலாகக் காணப்படுகின்றது. அதற்கான காரணம் என்பவற்றை அறிவதற்காகப் பல நாடுகளை உள்ளடக்கி நடைபெற்ற முதலாவது ஆய்வு இதுவாகும்.
வன்புணர்வை ஒப்புக் கொண்டவர்களில் அரைவாசிக்குச் சற்று குறைவானோர் தாம் ஒரு தடவைக்கு மேல் இவ்வாறு செய்வதாகக் கூறினர். பெண்களுக்கு எதிரான பலாத்காரம் நாடுகளுக்கு இடையில் வேறுபட்டு காணப்பட்டது.
பப்புவா நியூகினியில் 10 பேரில் அறுவர் பெண்களைப் பலவந்தமாகப் பாலுறவுக்கு உட்படுத்தியதாகக் கூறினார். (த)

## இலங்கையைப் பிரிக்க உடன்படாது காங்கிரஸ்

### இணை அமைச்சர் நாராயணசாமி கூறுகிறார்

சென்னை,செப். 11
சிங்களவர்களும் தமிழர்களும் இலங்கை அரசமைப்புக்குக் கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டும். இலங்கையைப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கையில் காங்கிரஸ் கட்சிக்கு உடன்பாடு இல்லை என்று இந்திய மத்திய இணையமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.
இந்திய மத்திய அரசைப் பொறுத்தவரை ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை இலங்கையிடம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.
இலங்கைக்குப் போர்க் கப்பல்கள் வழங்குவதால் தமிழர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் எனில் அது குறித்து பிரதமர் மன்மோகன் சிங்கிடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்போம் என்றும் நாராயணசாமி கூறினார்.
சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் நாராயணசாமி, 'இலங்கைக்குப் போர்க் கப்பல்கள் வழங்குவது குறித்த ஒப்பந்தம் பல ஆண்டுகளுக்கு முன்பே கைச்சாத் திடப்பட்டது' என்பதைச் சுட்டிக்காட்டினார்.
'நாம் வழங்கப்போகும் போர்க் கப்பல்களைத் தமிழருக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடாது என இலங்கைக்குச் சொல்லியிருக்கிறோம். அப்படி இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக அந்தப் போர்க் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டால் அது குறித்து பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தெரிவிப்போம்' என்று அவர் மேலும் கூறினார். (த)

## துப்பாக்கி வெடித்ததில் படைச் சிப்பாய் சாவு

கொழும்பு,செப் 11
வெலிகந்த - சிங்கபுர இராணுவ முகாமில் சிப்பாய் ஒருவர் வைத்திருந்த துப்பாக்கி தவறுதலாக இயங்கி வெடித்ததில் அவர் உயிரிழந்துள்ளார்.
சிப்பாயின் வயிற்றுப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டு காயம் பட்டதால் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு உயிரிழந்துள்ளார்.
துப்பாக்கியைச் சுத்தம் செய்து கொண்டிருந்த வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.
மாவத்தகம பகுதியைச் சேர்ந்த திருமணமாகாத சிப்பாய் ஒருவரே உயிரிழந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (த)

## தங்கம் கடத்த முற்பட்ட கணவன்,மனைவி கைது

கொழும்பு.செப் 11
இந்தியாவின் கொச்சி நோக்கிப் பயணித்த விமானத்தில் தங்க பிஸ்கட்டுக்கள் மற்றும் தங்கக் கட்டிகள் கடத்த முற்பட்ட கணவன், மனைவி கைது செய்யப் பட்டுள்ளனர்.
கணவன் தனது மலவாசலிலும் மனைவி தனது காலிலும் வைத்து இவற்றைக் கடத்த முற்பட்டுள்ளனர். இவ்வாறு கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி 27 லட்சம் ரூபா என தெரிவிக் கப்படுகிறது.
சந்தேகநபர்கள் இருவரும் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தங்கத்தின் பெறுமதி கணிக்கப்படுவதாகவும் விமான நிலையச் சுங்க அதிகாரி லெஸ்லி காமினி தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அமைச்சர்களது கெட்டித்தனம் ஐ.நா. கூட்டத்தின் முடிவில் தெரியவரும்

## யாழ்ப்பாணத்தில் மனோ கணேசன்



நவநீதம்பிள்ளை அம்மையார் மேர்வினை மணம் முடிக்கவோ தேங்காய் திருவவோ இலங்கைக்கு வரவில்லை. மனித உரிமைகள் விடயங்களில் போருக்கு பின்னரான முன்னேற்றம் குறித்து ஆராயவே இலங்கைக்கு வந்தார். இந்த விடயங்களைக் கூடப் புரிந்து கொள்ளமுடியாத அமைச்சர்கள்தான் இங்குள்ளனர்.

இவர்களது புத்திசாதுரியம் ஜெனிவாவில் நடைபெற்றுவரும் மனித உரிமைகள் சபை மாநாட்டின் முடிவில் தெரியவரும்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணே சன்.

வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக மனோகணேசன் தேர்தல் பரப்புரையில் ஈடுபட் டார். இதன்போது தென்மராட் சிப் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:


இலங்கை அரசு தொடர்ந்தும் சர்வதேசத்தை ஏமாற்ற முடியாது.

தமிழ்மக்களது பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு சர்வதேச சமூகம் ஆர்வத்துடன் அவதானித்துக் கொண்டிருக்கிறது. வட மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறுவது நிச்சயம். ஆனால் அந்த வெற்றி அறுதிப் பெரும்பான்மையாக அமைய வேண்டும்.

ஜனாதிபதி ஒரு தலை சிறந்த நடிகர். உறுதிமொழிகளையும் வாக்குறுதிகளையும் வழங்குவதில் கெட்டிக்காரர். அவரே அவற்றைக் கண்டு கொள்ளாமல் விடுவதிலும் கை தேர்ந்தவர்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை இன்று சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது. நமது உணர்வுகளை நாடி பிடித்துப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இதனை நாம் உரியமுறையில் பயன்படுத்தி எமது உணர்வலைகளை வெளிப்படுத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து நிரூபிக்கவேண்டும்.- என்றார். (ஐ-2)



ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வடமாகாணசபைத் தேர்தலில் ஐ.தே.கட்சியின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் தி.துவாரகேஸ்வரனுக்கு ஆதரவாக நேற்று சங்கானைச் சந்தைப் பகுதியில் தேர்தல் பரப்புரை செய்தார். (ஐ-29)

# மாகாண சபை முறைமையை 87இல் ஏற்றிருக்க வேண்டுமாம்



அக்கராயன், செப்.11

இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம்உருவாக்கப்பட்டமாகாண சபை முறைமையை 87இல் ஏற்றிருந்தால் பெரும் அழிவுகளைத் தடுத்திருக்கலாம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி விவேகானந்தா நகரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

இன்று மக்களுக்கு நல்லதொரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அந்த வாய்ப்பைச் சரிவரப் பயன்படுத்தவேண்டும்.

கடந்த காலத்தில் தவறான வழிநடத்தல் காரணமாக நீங்கள் அவலங்களுக்கும் இன்னல்களுக்கும் உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

இன்று திடமான நிலையொன்று மெல்ல மெல்ல உருவாகி வருகிறது.

இதனைப்பயன்படுத்திநாம் முன் செல்ல வேண்டும். இது தான் யதார்த்தம். நாம் எதைச் சொல்லி வந்தோமோ அது நடந்திருக்கிறது. எதைச் சொல்லிக்கொண்டு இருக்கிறோமோ அது நடந்து கொண்டிருக்கிறது. இனி எமது மக்களுக்கு எது அவசியமானதோ அதை நாம் நடைமுறைப் படுத்துவோம். அதற்கு எமது மக்களின் ஆதரவும், பக்கபலமும் அவசியம்.

இலங்கை, இந்திய ஒப்பந்தம் மாகாண முறைமை என்பது எங்களுடைய எல்லா விதமான பிரச்சினையையும் தீர்ப்பதற்கான ஆரம்பப் புள்ளி. அதனை நாம் அன்றே பயன்படுத்தியிருந்தால் இன்றைய நிலை ஏற்பட்டிருக்காது-என்றார். (ஐ-18)

# அநாமதேயங்களுக்கு வாக்களித்து எமது வரலாற்றை மாற்றிவிடக்கூடாது

## கூட்டமைப்பு வேட்பாளர் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம், செப்.11

எமது வாழ்க்கையில் கேட்டறியாத பெயர்களில் பல அநாமதேயங்கள் சிங்களக் கட்சிகளிலும் சுயேச்சைகளாகவும் வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றன. இவர்கள் சிங்கள அரசின் கைக் கூலிகள் தலையாட்டிப் பொம்மைகள் பணத்திற்காகவும் அற்ப சொற்ப சலுகைக்காகவும் எதையும் காட்டிக் கொடுக்கத் துணியும் இனத் துரோகிகள். இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வட மாகாண சபை வேட்பாளருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்.

வடமராட்சி.திக்கத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டில் இயங்கும் எட்டு மாகாண சபை நிர்வாகங்களும் தலையாட்டிப் பொம்மை களாக இருக்கின்றன. அண் மையில் கிழக்கு மாகாண சபையில் உறுப்பினர்களுக்கும் ஆளுநருக்கும் இடையில் பலத்த மோதல்கள் இடம்பெற்றன.



இந்த விடயம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப் பட்ட போது ஆளுநர் என்னுடைய ஆள். நான் நியமித்தவர். அவர் சொற்படித்தான் நீங்கள் நடக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண முதலமைச்சரையும் உறுப்பினர்களையும் தலையில் தட்டிஅனுப்பி விட்டார் ஜனாதிபதி.

வடக்கிலும் ஒரு தலையாட்டி மாகாண சபை நிர்வாகத்தை உருவாக்க அவர் அதீத முயற்சி எடுக்கின்றார். அதற்கு தாங் களும் தமிழர்கள்தான் என்று கூறிக் கொண்டு இனத்தைக் காட்டிக் கொடுக்க தலைப்பட் டுள்ளனர் பலர். இதை மக்கள் நன்கு அறிவார்கள்.

தெரிந்தோ, தெரியாமலோ இப்படியான நயவஞ்சகர்களுக்கு நாம் வாக்களிப்போமானால் அது நமக்கு நாமே குழிபறித்துக் கொள்ளும் தற்கொலைக்குச் சமம்.

கடந்த 60 வருடங்களுக்கு மேலாக நாம் முன்னெடுத்து வரும் போராட்டங்கள் அனைத்தும் பொய்யாகிவிடும்.

எனவே நாம் அனைவரும் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து வடமாகாண சபையை ஓர் எதிர்க்கட்சி இல்லாத சபையாக்க வேண்டும்- என்றார். (ஐ-2-8)

# தம்பியும் செயற்படுவார் அண்ணன் வழியில்

## சங்கானையில் ரணில்

சங்கானை, செப். 11

மகேஸ்வரன் எம்மோடு இருந்த காலத்தில் எதைச் செய்தாரோ அதேபோன்று அவரது தம்பியும் இருப்பார். ஐக்கிய தேசியக் கட்சியும் உங்களோடு இருக்கும். இவ்வாறு தெரிவித் தார் ரணில் விக்கிரமசிங்க.

நேற்று தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் வந்த ரணில் சங்கானைப் பகுதியில் துவாரகேஸ்வரனை ஆதரித்து பரப்புரையில் ஈடுபட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாணம் கடந்த 30 வருடங்களாக அபிவிருத்தி, அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட பிரதேசமாகக் காணப்படுகிறது. இந்தப் பகுதியில் வாழும் மக்களாகிய நீங்கள் இன, மத பேதமின்றி சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டும் என்றே நாங்கள் விரும்புகின் றோம்.

வடமாகாண சபைத் தேர்தலில் எமது கட்சி சார்பாக நம்பிக்கைக்குரிய வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களை நீங்கள் ஆதரித்து வாக்களிக்க வேண்டும்.

இதன்மூலம் உங்கள் பிரச்சினைகளை நாம் தீர்த்து வைப்போம்- என்றார். (ஐ-29)

# வெளியாரைத் தெரிவுசெய்து வரலாற்றுத் தவறு இழைக்காதீர்

## ரெலோ இயக்கத் தலைவர் ஹென்றி மகேந்திரன்.

யாழ்ப்பாணம், செப்.11

"யாழ்ப்பாண மண்ணிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர மாற்றுத் தமிழ்க் கட்சி மற்றும் பேரினவாதக் கட்சிகளிலிருந்து யாராவது தெரிவு செய்யப்பட்டால் வரலாறு நம்மை மன்னிக்காது"

இவ்வாறு தெரிவித்துள்ளார் ரெலோ இயக்கத்தின் செயலாளர் நாயகமும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் எதிரணித் தலைவருமான ஹென்றி மகேந்திரன்.

யாழ்.வண்ணார் பண்ணை ஆறுகால்மடத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதா வது:

"வடமாகாண மண் அதிலும், குறிப்பாக யாழ். மண் வரலாற்று ரீதியாகத் தமிழையும், தமிழ் மக்களையும் உயிரென மதித்த பல தமிழ் அரசர்களாலும், பல தமிழ்த் தலைவர்களாலும் நீதி, நேர்மையுடன் ஆளப்பட்ட புனிதமான மண்ணாகும். எல்லாளன் பிறந்த மண்ணும் இது வாகும்.

அதேபோல் கடைசியாக சங்கிலியன் ஆண்ட மண் மட்டுமன்றி தமிழ்ப் பேசும் மக்களின் ஏக தலைவனான தந்தை செல்வா, அமிர்தலிங்கம், சிறிசபாரத்தினம், உமாமகேஸ்வரன், பத்மநாபா, ஏன் பிரபாகரன் போன்ற புனித தலைவர்கள் பிறந்து தமிழ் மக்களுக்காகப் போராடிய வரலாற்றுப் பெருமை மிக்க மண் இது.

இந்த உணர்வோடு நடைபெறவிருக்கும் வடமாகாண சபைத் தேர்தலில், வடமாகாண மண்ணிலிருந்து அதிலும் குறிப்பாக யாழ்.மண்ணிலிருந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைத் தவிர, வேறு கட்சிகளின் எந்தவொரு வேட்பாளர்களும் தெரிவு செய்யப்படக்கூடாது. அவ்வாறு தெரிவு செய்யப்பட்டால் வரலாறு எம்மை மன்னிக்காது

நாம் தமிழ்த்தேசியத்துடன் என்றும் இணைந்தேயுள்ளோமென்பதையும் எத்தகைய மாயைகளுக்கும் எந்தச்சந்தர்ப்பத் திலும் பலியாகமாட்டோம் என்பதையும் வடக்குத் தேர்தலில் நாம் மீண்டும் நிரூபிக்க வேண்டும்.

இதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அணி திரண்டு நாம் கூட்டமைப்பின் பெரு வெற்றியை இந்தத் தேர்தலில் உறுதிப்படுத்த வேண்டும்-என்றார். (ஐ-30)

# மக்களுக்காக தயங்காது செயற்படுவோம்

மக்கள் எம்மை நம்பிப் புள்ளடி இடுவார்களானால் நாங்கள் அவர்களுக்காகத் தயங்காமல் செயலாற்றுவோம். இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயக ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் தில்லைமோகன்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;



போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பாக நாம் மக்களுக்கு சேவையாற்றி வருகிறோம். அகிம்சையே எங்கள் ஆயுதம். இதைக் கொண்டு இந்த நாட்டில் இனியொரு குழப்பம் வராதவாறு அரசியல் செய்வோம்.

இதன் மூலம் எங்கள் பிரச்சினைகளை சர்வதேசம்வரை கொண்டு சென்று வாதிடமுடியும்.

வாழப் பிறந்த எந்த ஒரு மனிதனும் அரசியலால் அகாலமரணம் அடையக் கூடாது. 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த அரசுக்கு அழுத்தம் கொடுத்து, அமைதியை எம் மக்கள் அனுபவிக்க வாய்ப்பளிப்போம்.-என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் 31 வருட அனுபவம் மக்களின் தேவையை உணர்த்தியது

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முல்லை வேட்பாளர் சிவநேசன்

சந்திப்பு: தி. அமுதன்



பவான் என்று மக்களால் அறியப்பட்ட புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவர் கந்தையா சிவநேசன். இவர் முல்லைத்தீவைப்பிறப்பிடமாகக் கொண்டவர். 1982 ஆம் ஆண்டிலிருந்து அரசியலில் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகிறார். இலங்கை - இந்திய ஒப்பந்த காலம் வரையில் புளொட் இயக்கத்தில் ஆயுதப் போராளியாகப் பங்கெடுத்தவர்.

கல்விப் பொதுத்தராத உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி வாய்ப்பைப் பெற்றபோதிலும், அந்தச் சந்தர்ப்பத்தை தவற விட நேர்ந்தது. பின்னர் இந்தியாவில் அரசியல் கல்வியைத் தொடர்ந்துள்ளார். அத்துடன் ஆயுதப் புரட்சி காரணமாக சிறிது காலம் மாலைதீவு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்திருக்கின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக இவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் வடமாகாண சபைத் தேர்தல் வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

போராட்டவரலாற்றைக்கொண்ட பவானுடனான நேர் காணல் இங்கே பிரசுரமாகிறது.

*கே: அதிகாரங்கள் பிடுங்கப்பட்ட மகாணசபையில் போட்டியிட நீங்கள் முடிவு செய்தமைக்கான காரணம் என்ன?*

ப: இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் எங்கள் தலைவர் உமாமகேஸ்வரனுடன் மிக நெருக்கமாக பணியாற்றியிருக்கின்றேன். அன்று எமது தலைவர் இந்த மாகாண சபையில் அதிகாரங்கள் இல்லை என்று தெரிவித்திருப்பினும் அதனை ஏற்றுக் கொள்வதற்கான காரணங்களையும் முன்வைத்திருந்தார். இந்தியாவிடமிருந்து நாம் விடுபட வேண்டும். மாகாண சபை அதிகாரங்கள் போதாவிட்டாலும் எங்களுக்கென்று ஓர் அலகு இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இன்று போரில் நாங்கள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் எதுவுமே இல்லாத நிலையில்தான் இருக்கின்றோம். இவ்வாறானதொரு நிலையில் மாகாண சபையை ஆரம்பக் கட்டமாக எடுத்துக் கொள்வோம். அத்துடன் இந்த மாகாணசபையை நாங்கள் பரீட்சித்துப் பார்க்கவுமில்லையே.

எனவே வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பெறுவதற்கு முயற்சிப்போம். எது எப்படியிருந்த போதிலும் 13 ஆவது திருத்தத்தினூடாக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை என்பது தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வாகாது என்பதில் தெளவாக இருக்கின்றோம்.

*கே: மாகாண சபை உங்கள் கைகளில் வந்தால் நீங்கள் என்ன நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பீர்கள்?*

ப: எங்களுடைய தாயகத்தை நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருக்கின்றோம். எங்களுக்கென்று ஒரு நிலப்பரப்பு இருக்கும் போதுதான் நாங்கள் ஆட்சி செய்ய முடியும். மக்களுக்குத் தேவையானவற்றை செய்து கொடுப்பது ஒருபுறம் இருக்க நாங்கள் எங்கள் எல்லைகளைப்பாதுகாப்பதை முதலாவதாகச் செய்ய வேண்டும்.

முக்கியமாக காணி, பொலிஸ் அதிகாரங்கள் எங்களுக்கு நிச்சயம் தேவை. ஆனால் இவற்றை பிடுங்க இலங்கை அரசு நினைக்கின்றது. இருந்தும் இவை ஒருபுறம் இருக்க இந்தியாவில் அடுத்து ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடக்க இருக்கின்றது. தமிழ் நாட்டின் அழுத்தங்களை இந்தியாவின் மத்திய அரசு எதிர்கொண்டிருக்கின்றது. இதனால் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை இந்திய மத்திய அரசு எடுக்க வேண்டிய இக்கட்டு நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

இதனால் தமிழ் நாடு திருப்திப்படக் கூடிய வகையிலான தீர்வை ஈழத் தமிழருக்கு முன்வைப்பதற்கு அல்லது மாகாணசபைமுறைமையை அர்த்தமுள்ளதாக்குவதற்கு இந்தியா நிச்சயம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

*கே: மாகாணசபை உங்கள் கைக்கு வந்தால், அரசினால் போடப்படுகின்ற முட்டுக்கட்டைகளை உங்களால் எவ்வாறு தவிர்க்க முடியும்?*

ப: நாங்கள் எங்கள் அதிகாரங் களுக்காகப் போராடத்தான் வேண்டும். அதற்குரிய அமைப்பாக இந்த மாகாண சபையைப் பயன்படுத்த முடியும். தடைகளைத் தகர்பதற்கு போராடியாக வேண்டிய நிலையிலேயே நாங்கள் இருக்கின்றோம். நாங்கள் அதனைச் செய்வதற்கும் தயாராக இருக்கின்றோம்.

*கே: மாகாணசபைக்கு உங்களை மக்கள் ஏன் தேர்வு செய்ய வேண்டும் என்று நினைக்கின்றீர்கள்?*

ப: அரசியல் விடயங்களிலும் சரி போராட்ட விடயங்களிலும் சரி 31 வருட அனுபவத்தைப் பெற்றிருக்கின்றேன். எனவே எங்கள் மக்களுக்கு என்ன தேவை என்பதை உணர்ந்திருக்கின்றேன். எனவே என்னை மக்கள் தேர்வு செய்வார்கள் என்று நம்புகின்றேன்.

*கே: தற்போது வடபுலத்திலுள்ள இராணுவ அழுத்தங்களின் மத்தியில் உங்களது பரப்புரை பணிகளை முன்னெடுக்க முடிகின்றதா?*

ப: இராணுவ அழுத்தங்கள் இன்று நேற்று எமக்கு வந்ததல்ல. இந்த அழுத்தங்கள் காரணமாகவே நாங்கள் போராடவும் புறப்பட்டோம். மேலும் எங்களது கட்சி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்து செயற்பட்டாலும் தமிழ் மக்களின் நிலங்களைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளையே செய்து வந்தது. அத்துடன் எந்தத் தேர்தல்களிலும் நாங்கள் தனித்தே போட்டியிட்டிருக்கின்றோம். அரசைச் சார்ந்து நின்றது கிடையாது.

எத்தகைய அழுத்தங்கள் சவால்களுக்கும் முகம் கொடுத்து வெற்றி பெறும் தற்துணிவு எங்களுக்கு இருக்கின்றது.

# மாகாண அதிகாரம் முழுவதும் வடக்கில் நிலை நாட்டப்படும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சர்வேஸ்வரன்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால், அது மாகாணசபையின் அதிகாரத்தை வடக்கில் நிலைநாட்டும் என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். இதனால் தான் அரசு நிலைகுழப்பிப் போயுள்ளது. செய்வதறியாது தவிக்கிறது அரசு.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சர்வேஸ்வரன் தெரிவித்தார். அண்மையில் புத்தூரில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது.

இந்திய -இலங்கை ஒப்பந்தத்தினுடைய முதலாவது விடயம் இலங்கை ஒரு பல்லின நாடு என்பதாகும். இரண்டாவது விடயம் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் பூமி என்பது.

நாம் தந்தை செல்வாவின் காலத்திலிருந்தே வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்று வலியுறுத்தி வந்துள்ளோம். இந்த ஒப்பந்தத்தில் தாயகம் என்ற வார்த்தைக்குப் பதிலாக வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் பூமி என்று எழுதப்பட்டுள்ளது.

இது வரலாற்றுரீதியாக நிரூபிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுமுள்ளது.

இதன் அடிப்படையிலேயே பதின்மூன்றாவது திருத்தம் கொண்டுவரப்பட்டு மாகாண சபை முறைமையும் உருவாக்கப்பட்டது. இதுவே இன்று பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணத்தின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால் அது அந்த அதிகாரத்தை நிலைநாட்டும் என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும்.

இதனைச் செய்வதற்கு நாங்கள் முயற்சிப்போம். அப்போது அரசு என்ன செய்கிறது என்பதையும் நாங்கள் பார்த்துக் கொள்வோம்.

எனவே இந்தத் தேர்தல் எமது போராட்டத்தின் அடுத்த கட்ட நகர்வை நோக்கி திரும்பியுள்ளது. இதனை தமிழ் மக்கள் கருத்தில் கொண்டு வாக்களிக்க வேண்டும்- என்றார். (ஐ)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகா மீதும் விசாரணை தேவை

## வலியுறுத்துகிறார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், செப்.11

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மட்டுமல்ல மனித உரிமை மீறல்களுக்கு மூல காரணமான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் சர்வதேச போர்க் குற்ற விசாரணைகளை எதிர்கொண்டேயாகவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அளவெட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவை ஆதரித்திருந்தனர். அப்போதிருந்த சூழ்நிலையால் அவர்கள் அந்த முடிவை எடுக்க வேண்டியிருந்தது. பொன்சேகா, புலிகளின் தலைவர்கள் எவரும் சரணடையவில்லை என்றும் காணாமற்போனவர்கள் என்று எவரும் இல்லையென்றும் கூறுகின்றார்.

உண்மையில் நாங்கள் கோருகின்ற சர்வதேச விசாரணையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாத்திரமல்ல போரைக் கொண்டு நடத்திய பொன்சேகாவும் விசாரிக்கப்பட வேண்டியவர்தான்- என்றார். (ஐ-5)

# பட்டதாரிகளது சம்பளத்தில் வடக்கில் தேர்தல் பரப்புரை

## பாதிக்கப்பட்டவர்கள் தட்டிக்கேட்க வேண்டும் என்கிறார் சரவணபவன்



பயிலுநர்களாக உள்வாங்கப்பட்ட பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கவும், அவர்களுக்கு சம்பளம் வழங்கவும் ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசதரப்பினர் அந்தப் பணத்தை தேர்தல் பரப்புரைகளுக்கும், பதாதைகளுக்கும், போஸ்டர்களுக்கும் தேர்தல் காலத்தில் லஞ்சம் கொடுக்கவும் செலவிடுகின்றனர்.

பட்டதாரி பயிலுநர்கள் எல்லோரும் இணைந்து டக்ளஸ் தேவானந்தாவிடம் இதனைத் தட்டிக் கேட்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

கொக்குவில் பாரதி சனசமூக நிலைய திடலில் நடைபெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணசபைகள் சர்வரோக நிவாரணி எனக் கூறும் டக்ளஸ்தேவானந்தா வடக்கில் பொலிஸ் நியமனங்களைப்பெற்றுத் தரும்படி மத்திய அரசிடம் மண்டியிடுவது ஏன்? அப்படியானால் மாகாண சபைகளுக்கு உரித்தான அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும் என்பதை இவர் எதிர்க்கிறார் என்றே கொள்ள வேண்டும்.

யாழ்ப் பாணம் வந்துள்ள அமைச்சர் பஸில்ராஜபக்ஷ கூறுகின் றார், டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளின் பேரில் ஐயாயிரம் இளைஞர்களுக்கு பொலிஸ் நியமனம் பெற்றுக் கொடுக்கப் போவதாகக் பத்தாயிரம் பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்கப் போகிறோம் என்று கூறுகின்றார்.

பதின்மூன்றாவது திருத்தத்தின்படி பொலிஸ், காணி அதிகாரங்கள் மாகாண சபைக்கு உரித்தானவை. இதன்படி பொலிஸ் நியமனங்களை வழங்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்கே உரித்தானது. இதை இவர்கள் அறியாமல் பிதற்றுகின்றனர்.

இதேவேளை பஸில் ராஜபக்ஷ முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் யாழ். மக்களின் காணிகளை அரசு அபகரிக்கவில்லை என்றும், இந்திய அமைதிப் படையினரே தமிழர்களின் காணிகளை ஆக்கிரமித்து வைத்திருந்தனர் என்றும் அதைத்தான் தாம் இப்பொழுது விடுவித்துக்கொண்டிருக்கின்றனர் என்றும் கூறுகிறார்.


இந்திய அமைதிப் படை இங்கு இருந்த போது பஸில் எங்கே இருந்தார்? அவருக்கு உண்மை தெரியுமா? இந்திய அமைதிப் படையினர் வெளியேற்றப்பட்டபின் எமது மக்கள் மீண்டும் தத்தமது சொந்த இடங்களில் குடியேறினர். ஆனால் இப்பொழுது எமது காணிகளை ஆக்கிரமித்து ஆடம்பர மாளிகையும், ஜனாதிபதிக்கு உல்லாச ஓய் விடமும், படையினருக்கு நிரந்தர வீடுகளையும், சிங் களக் குடியேற்றங்களையும் ஏற்படுத்திக்கொண்டு கதை விடுகிறார் பஸில்.

வடக்கில் தனித் தமிழ் அரசு அமைந்துவிடும் என மஹிந்த அரசு அஞ்சுகின்றது.

வடமாகாணசபையின் தேர்தல் முடிவுகளையும் நமது தமிழ் தேசிய உணர்வையும் சர்வதேசம் மிகவும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது. இந்தத் தேர்தல் ஒரு கருத்துக் கணிப்பாகவும் அமைந்துள்ளது.

இதனை மனதில் கொண்டு மக்கள் கட்டாயமாக வாக்களிக்க வேண்டும். நமது விடிவுக்காக, நமது உறவுகள் செய்த தியாகத்திற்காக நாம் அர்ப்பணிப்புடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும்.- என்றார். (ஐ-02)

> “இப்பொழுது எமது காணிகளை ஆக்கிரமித்து ஆடம்பர மாளிகையும், ஜனாதிபதிக்கு உல்லாச ஓய்விடமும், படையினருக்கு நிரந்தர வீடுகளையும், சிங் களக் குடியேற்றங்களையும் ஏற்படுத்திக்கொண்டு கதை விடுகிறார் பஸில்.

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்ட
தமிழரசுக் கட்சி வேட்பாளர்
இரத்தினலிங்கம் ஜெயசேகரன்
(வர்த்தக சங்கத் தலைவரும் சமூக சேவையாளரும்)

X 6
தமிழன் என்ற தேசிய இனத்தின் சுயகௌரவம் கிடைக்க
இல. 6 ஐத் தெரிவுசெய்து வெற்றிபெற வையுங்கள்
யாழ்ப்பாண வர்த்தக சங்கம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்ட
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழரசுக் கட்சி

X 13
துணிச்சல் மிக்க இளம் சட்டத்தரணி
கே.சஜந்தன்
இருப்பதைக் காப்போம்! இழந்ததை மீட்போம்!
சுயாட்சி வெல்ல வாக்களிப்போம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடமாகாணசபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

எமது உயிரை உடைமைகளை உரிமைகளை
நாமே பாதுகாக்க...
4
கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்
B.A Hons (Pol Sc), M.A., Ph.D விரிவுரையாளர்
இலங்கைத் தமிழரசுக் கட்சி
X

வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்

தமிழ் மண் காப்போம்! தாயகம் மீட்போம்!!
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையிலான ஐந்து கட்சிகளின் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்வோம்
எம்.கே.சிவாஜிலிங்கம்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்.
9
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
X

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

-யாழ் மாவட்டம்-
வட மாகாணசபைத் தேர்தல் - 2013
"எல்லா வகையிலும் அடக்கி ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் அனைத்து உரிமைகளையும் யாசித்து பெறமுடியாது, போராடித்தான் வென்றெடுக்க முடியும்" என துணிச்சல் மிக்க போராளியாக....

திருமதி. அனந்தி சசிதரன் (எழிலன்)
பிரதம முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம் - கிளிநொச்சி
இணைப்பாளர், காணாமல்போனோர் உறவினர்கள் சங்கம்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
X 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் 11/09/2013

# ஏ-9 வீதியில் ஒரு மணிநேரத்தில் 280 வாகனங்கள் பறக்கின்றன

## கணக்கெடுப்பு நடத்தினார் பஸில்

யாழ்ப்பாணம், செப்.11

நான் இந்த மேடையில் அமர்ந்திருந்த ஒரு மணி நேரத்தில் ஏ-9 வீதியில் 280 வாகனங்கள் பயணித்தன. அமைதிச் சூழல் ஏற்பட்டதால்தான் இந்தச் சுதந்திரம் உங்களுக்கு கிடைத்தது.

இவ்வாறு தெரிவித்தார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று உங்கள் பகுதிகளில் வீதிகள் புனரமைக்கப்பட்டு விட்டன. இவ்வாறான அபிவிருத்தி போர்க் காலத்தில் நடைபெறவில்லை. அமைதிச் சூழல் ஏற்பட்டதால்தான் நீங்கள் அபிவிருத்தியை அனுபவிக்க முடிகிறது.

இன்னும் சில மாதங்களில் ரயில் யாழ்ப்பாணம் வரை வந்து செல்லும்.

நீங்கள் ஆளும் தரப்புக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்தால், ஏனைய மாகாணங்களைப் போன்று நீங்களும் எல்லா வசதிகளையும் அனுபவிக்க முடியும்.

வடக்கு அபிவிருத்தி தொடர்பில் இன்னும் பல திட்டங்களை நாம் செயற்படுத்த இருக்கின்றோம்.

இதற்கு உங்கள் ஒத்துழைப்பு எமக்குத் தேவை. எனவே நடைபெறும் தேர்தலில் ஆளும் தரப்பை நீங்கள் ஆதரிக்க வேண்டும்- என்றார். (ஐ-288)



வடக்கு ஆளுநர் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் பங்கேற்பது விதி மீறல் என்று குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்ட போதும், ஊடகங்கள் சுட்டிக்காட்டிய போதும் பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்பதை அவர் இன்னும் நிறுத்தவில்லை. சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் இன்னிசைக் கச்சேரி தேர்தல் பரப்புரை மேடையாகியது. அங்கே வேட்பாளர்களுடன் ஆளுநரும் காணப்பட்டார். (ஐ)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இளையோரைச் சீரழிப்பதில் இராணுவமே முக்கிய பங்காளி

## விக்னேஸ்வரன் கடும் குற்றச்சாட்டு

தமிழ்பிரதேசங்களில்இளைய சமுதாயத்தை சீர்குலைத்து சமுதாய உணர்வுகளை மழுங்கடிக்கச்செய்யும் முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது. இதில் இராணுவத்தினரே முக்கிய பங்காளிகளாகச் செயற்படுகின்றனர். இவ்வாறுதெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரன்.



அண்மையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத் தமிழர்கள் இயற்கையாகவும் பாரம்பரியமாகவும் கல்வித்துறையில் சிறந்து விளங்கினர்.

இலங்கை ஆங்கிலேயாரால் ஆளப்பட்ட போது யாழ்ப்பாணத்தில் கல்விப் பீடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. வெள்ளையர்கள்கூடக் கல்வி அபிவிருத்திக்குத் தடை போடவில்லை. அப்போதுதான் நம்மவர்களான சேர்.பொன். இராமநாதன், முத்துக்குமாரசாமி ஆகியோர் சர்வதேச அரங்கில் முதலாவதாகப் பட்டம் பெற்ற இலங்கையர்கள் என்ற சரித்திரத்தைப் படைத்தனர்.

நாடு சுதந்திரம் அடைந்த பின் தென்னிலங்கையில் பேரினவாதிகளுக்கு இது ஒரு பெரிய சவாலாகவும், எரிச்சலாகவும் இருந்தது. எப்படியாவது தமிழர்களின் வளர்ச்சியைத் தடுக்க வேண்டும். உயர் பதவிகளில் இருந்து தமிழர்களை விரட்டியடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் தனிச்சிங்களச் சட்டத்தை கொண்டுவந்தனர். கல்வித் துறையையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. தரப்படுத்தல் என்ற பெயரில் எமது பிள்ளைகள் பல்கலைக்கழ கம் செல்வதற்கும் தடை போட்டனர்.

அன்று எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடத்தினார்கள் என்பதற்காக இன்று பழிவாங்கப்படுகின்றனர். இளைஞர்கள் மீண்டும் உணர்வுபூர்வமாக ஒன்றுபட்டு இணைந்து செயற்பட ஆரம்பித்துவிடுவார்களோ என சிங்கள அரசு இன்றும் கூட அஞ்சுகின்றது.

தமிழ்பிரதேசங்களுக்கு மது, மாது மற்றும் போதைப் பொருள்களை தங்கு தடையின்றி தாராளமாகக் கிடைக்கச் செய்து எமது இளைஞர் சமுதாயத்தின் உணர்வுகளையும் சிந்தனைகளையும் மழுங்கடிக்கச்செய்யும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் இராணுவத்தினரே முக்கிய பங்காளிகளாக முன்நின்று செயற்படுகின்றனர்.

அரசின் அடிவருடிகளும் சுயநல அரசியல் தலைமைகளும் இதற்குத் துணை போகின்றன. இவ்வாறானதிட்டமிட்டசமுதாயச்சீரழிவில்இருந்து எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இவற்றை எல்லாம் சீர் செய்வதற்கு நம்மைநாமே ஆளும் ஆட்சிமுறை உருவாக்கப்பட வேண்டும்.-என்றார். (ஐ-2)

# சலுகைகள் தொடங்கிவிட்டன பதுக்கப்பட்டதெல்லாம் வருகின்றன

## அரசின் நடவடிக்கை குறித்து சுரேஷ் எம்.பி.விமர்சனம்

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், பிரதேச அபிவிருத்திக்கும் என சர்வதேச நாடுகளால் வழங்கப்பட்ட அன்பளிப்புப் பொருள்களும், 2012ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்களும் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக அரச களஞ்சியசாலைகளில் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை அமைச்சர்கள் இப்போது வழங்க ஆரம்பித்துவிட்டனர். இன்னும் சில நாள்களில் ஜனாதிபதியும் இந்தப் பொருள்களை ஏதோ தாமே கொடுப்பது போல் வழங்கி வாக்குப் பிச்சை கேட்பார். இதை மக்கள் நன்கறிவர்.



இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

தென்மராட்சியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சலுகைகள் தொடங்கி விட்டன. விளையாட்டு உபகரணங்களும்,உதவிப்பொருள் வழங்குவதும் இப்போது நடைபெறுகின்றன. இந்தப் பொருள்கள் எல்லாம் நியாயபூர்வமாக நமக்குக் கிடைக்க வேண்டியவை. இவை கடந்த ஒரு வருடமாக அரச களஞ்சிய சாலைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பொருள்கள்.

நாம் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் சிறுபான்மையினர் அல்லர். நாம் ஓர் அங்கீகரிக்கப்பட்ட தேசியஇனத்தினர். இன்றைய அரசு,தமிழ்த்தேசியஇனத்தை இல்லாதொழிக்கும்நடவடிக்கைகளைத் தீவிரமாகச் செயல்படுத்துகின்றது.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்கின்றது. முன்பு கிழக்கு மாகாணத்தில் 4 வீதமாக இருந்த சிங்களவர்கள் இப் போது 22 வீதமாக அதிகரித் துள்ளனர். வடக்கிலும் அத்தகைய சூழலை உருவாக்க முனைகின்றனர். இது நமது சொந்த மண். இந்த மண்ணில் இருந்து தமிழர்களை விரட்டியடித்து விடமுடியாது.

இந்தியவீட்டுத்திட்டம், நோர்வே வீட்டுத்திட்டம், சீனப்பாதை, இந்தியாவின் ரயில் பாதை எனப் பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

இவற்றில் ஏதாவது ஒரு திட்டம் இலங்கை அரசின் சுயமான திட்டம் என்று இருக்கின்றதா? ஒன்றுகூட இல்லை. இந்த அரசு தமிழர்களுக்கு எதையுமே சுயமாகச் செய்யாது. இதனால் தான் ஒன்றுபட்ட இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஆட்சி முறையைக் கேட்கின்றோம்.

இதற்கு ஒரு முதல் அத்திபாரமாக மாகாணசபைத் தேர்தல் அமையும். தமிழ் இனம் தனித்துவமான ஓர் இனம். தனியான அரசியல், கலாசார, பொருளாதார பாரம்பரியங்களைக் கொண்ட இனம். நாம் தொடர்ந்தும் இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழ முடியாது என்ற செய்தியை சர்வதேசத்திற்குச் சொல்ல வேண்டும் - என்றார். (ஐ-2)













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டிக் கொடுப்போருக்கும் உணர்வாளர்களுக்குமான போர் இது

யாழ்ப்பாணம், செப்.11
இணக்க அரசியல் ஒன்றும் எமக்குப் புதிதல்ல. இதனால் நாம் ஏமாற்றப்பட்டமைதான் உண்மை. எனவே இணக்க அரசியலைப் பற்றி எவரும் எமக்கு சொல்லித்தர வேண்டிய அவசியம் இல்லை.
இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் கஜதீபன்
வடமராட்சியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:
இணக்க அரசியல் மூலம்தான் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என்றால் எப்போதோ அந்தத் தீர்வு கிடைத்து, நாம் பொன் விழாவும் கொண்டாடியிருக்க வேண்டும்.
தந்தை செல்வநாயகம் அன்றையஅரசுகளுடன்பேசிபண்டா செல்வா, டட்லி செல்வா ஒப்பந்தங்களைச் செய்தார். பின்னர் எமது தலைவர்கள் உப சபா நாயகர்களாகவும், அமைச்சர்களாகவும்கூட இருந்தனர்.
திம்பு முதல் நோர்வே வரை பல பேச்சுக்களை நடத்தினர். பின்னர் தலைவர் சம்பந்தன் தலைமையில் இந்த அரசு டன் 18 மாதங்கள் தொடர்ச்சியான பேச்சுகள் நடத்தப்பட்டன. எப்போதுமே ஆட்சியில் இருந்தவர்கள் தமிழர் களுக்கு எதையும் கொடுக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவே இருந்துள்ளனர்.
இப்போதும் தமிழர்களின் உரிமைகளைப் பறித்துக் கொண்டு எம்மை இந்த மண்ணில் இருந்து விரட்டி விடலாம் என்று பகல் கனவுடனேயே உள்ளனர்.
இவைதான் இணக்க அரசியலின் பலாபலன்கள்.
மண் மீதும், மக்கள் மீதும் பாசம் இல்லாதவர்கள்தான் இன்று இணக்க அரசியலைப் பற்றிப் பேசி அவர்களுடைய சுய நன்மைகளுக்காக நம்மை விலை பேசுகின்றனர்.
வடக்குத் தேர்தல் என்பது தமிழ்த் தேசியத்தை மாற்றானுக்கு காட்டிக் கொடுப்பவர்களுக்கும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களுக்கும் இடையிலான போட்டி. நாம் இப்போது இழக்காமல் இருப்பது நமது தமிழ் உணர்வை மட் டுமே. எனவே தன்மானத் தமிழரின் பூமியை அடகு வைப்பவர்களுக்கு இங்கு இடமில்லை என்பதை நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலின் மூலம் உலகுக்கு உணர்த்துவோம்- என்றார். (ஜ-2-8)

# இணக்கப்பாட்டு அரசியல் மூலம் தமிழ்த் தேசியத்துக்கு விளக்கம்

## தன்னிலை மறந்த ஆளும் தரப்பு வேட்பாளர் கூறுகிறார்

அக்கராயன், செப்.11
தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் ஒவ்வொரு தமிழர்களும் பாதுகாக்கப்பட வேண்டும். நிலம் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழர்கள் சகல வளங்களையும் பெற்றுச் சமத்துவமாகவும் சகோதரத்துவத்துடனும் வாழக் கூடிய சுய நிர்ணய உரிமையை பேணி வளர்க்க வேண்டும். இணக்க அரசியல் மூலம்தான் இவை சாத்தியம்.
இவ்வாறு கூறினார் ஆளும் தரப்பு கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் பிரகலாதன்.
கிளிநொச்சி விவேகானந்தா நகர் கிராமத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது.
தமிழ்த் தேசியம் என்பது சாதி, மத,பிரதேச பாகுபாடுகள் அற்ற, வர்க்க விரிசல்கள் அற்ற, ஏழை பணக்கார பிரிவுகள் அற்ற ஆணாதிக்கத்தை நீக்கி பெண் சமத்துவத்துடன் வாழக்கூடிய அரசியல் சமூக பொருளாதார கல்வி கலை, கலாசார விழுமியங்களைப் பேணி வாழக் கூடிய வடிவம்.
உலகமயமாக்கல் வேகத்துக்கேற்ப உரிமைகளையும், வரலாற்றுரீதியான பூர்வீக இடங்களையும் அடையாளங்களையும் நிலை நிறுத்தக் கூடியது.
இதனை வலியுறுத்தி சாதிப் பாகுபாடு பார்க்காத கட்சி என்றால் அது எங்கள் கட்சிதான்.
தமிழ்த் தேசியத்தை பாதுகாக்கின்றவர்கள் நாங்கள்தான்.
தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் ஒவ்வொரு தமிழனும் பாதுகாக்கப்பட வேண்டும். நிலம் பாதுகாக்கப்பட வேண்டும்.
தமிழர் கள் சகல வளங்களையும் பெற்று சமத்துவமாகவும் சகோ தரத்துவத்துடனும் வாழக் கூடிய சுய நிர்ணய உரிமையை பேணி வளர்க்க வேண்டும். இதற்கு நாம் தேர்தலில் வெற்றி பெற வேண்டும்.
இணக்க அரசியல் மூலம் தமிழர்களின் உரிமைகளைப் பெற்று சுதந்திரமாக தமிழர்களை வாழவைப்போம். அதற்காகவே தேர்தலில் போட்டியிடுகிறோம்- என்றார். (ஜ-18)

# திறந்தவெளிச் சிறையை உடைத்து சுதந்திரத்துக்காக ‘வீடு’ செல்வோம்

## கோருகிறார் வேட்பாளர் ஆனல்ட்



யாழ்ப்பாணம், செப்.11
வடமாகாண மக்களாகிய நாம் இன்றும் ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள்ளேயே அடைக்கப்பட்டுள்ளோம். இந்தச் சிறைச்சாலையை உடைத்துக் கொண்டு வெளியேவர வேண்டுமானால் வடமாகாண சபை ஆட்சியை தமிழர்கள் வென்றெடுக்க வேண்டும்.
இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரான இம்மானுவேல் ஆனல்ட்.
வடமராட்சி திக்கத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் ஒரேஒரு தமிழ் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு களம் இறங்கியுள்ளது. ஏனைய 18 கட்சிகளும் சுயேச்சைகளும் பணத்திற்கு விலைபோகும் ஏவலாளிகள்.
எமது தமிழ் மண்ணில் வந்து வாக்குக் கேட்க இவர்களுக்கு என்ன அருகதை இருக்கின்றது? இவர்கள் யார்? காலம் காலமாக நம்மைக் காட்டிக் கொடுத்துப் பிழைப்பு நடத்துபவர்கள் இவர்களே.
இன்று எம்மிடம் வந்து வாக்குப் பிச்சை கேட்பவர்களிடம் ஒன்றைக் கேட்கின்றேன்.
நாம் நமது தமிழ் சின்னத் தில் தென் பகுதியில்போய் வாக்கு கேட்டால் ஒரு சிங்கள வராவது வாக்குப் போடுவரா? காரணம் அவர்கள் பௌத்த வாதம் கொண்ட சிங்கள இன உணர்வாளர்கள்.
ஒருவர்கூட வாக்கு போடமாட்டார்கள். வாக்கு கேட்கவும் விடமாட்டார்கள்.
ஆனால் சொந்தக் காலில் நின்று வாக்கு கேட்கும் தகுதி இல்லாத இங்குள்ள சில பச்சோந்திகள், சிங்களக் கட்சிகளின் வெற்றிலைச் சின்னத்தை தலையில் தூக்கி வைத்துக் கொண்டு எமது மக்களின் வாக்குகளை சூறையாட முயல்கின்றனர்.
இதே எட்டப்பர் கூட்டத்திற்கு மாகாண சபைத் தேர்தலின் மூலம் நல்லதொரு பாடத்தைப் புகட்ட வேண்டும். நாம் அனைவரும் நமது தமிழர்களின் தாயகச் சின்னமான வீட்டுக்கு வாக்களித்து அரசின் கைக் கூலிகளை விரட்டியடிக்க வேண்டும்- என்றார். (ஜ-2-8)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தினரால் பறிக்கப்பட்ட காணிகளை மீட்டுக்கொடுக்க வேட்பாளர் முன்வர வேண்டும்

## யாழ்.மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 11

வடக்கில் இராணுவத்தினரால் பறிக்கப்பட்டுள்ள மக்களது காணிகள் மற்றும் மக்களது வாழ்விடங்கள் அனைத்தையும் அவர்களிடம் இருந்து மீட்டுக் கொடுக்க வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை யாழ்.மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் விடுத்துள்ளது.

வடமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு பொதுமக்கள் சார்பாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

♦ இடம்பெயர்ந்து இதுவரை மீளக் குடியமர்வு செய்யப்படாத மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியேற்ற உடனடி நடவடிக்கை எடுப்பதுடன் மீள்குடியமர்வு செய்யப்பட்ட மக்களுக்கு முழுமையான அடிப்படை வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

♦ காணிகள் இல்லாத மக்களுக்கு காணிகளைப் பெற்றுக் கொடுத்து அவர்களுக்கான நிரந்தர உறுதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும்.

♦ மீனவர்களால் தொழில் மேற்கொள்ள முடியாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களில் கட்டுப்பாடுகளை நீக்கி மீனவர்கள் சுதந்திரமாக தொழில் செய்வதற்கான வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

♦ கரையோரப் பகுதியில் வாழ்ந்து வரும் மக்களது காணிகளை விரைவாக அளவீடு செய்துஅவர்களுக்குரிய இலக்கங்களை பெற்றுக் கொடுத்து நிரந்தர உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

> காணாமல் போன உறவுகளுக்காக ஏங்கித் தவிக்கும் உறவுகளுக்கு உரிய பதிலை உடனடியாக அளிக்க வேண்டும்.

♦ நடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களையும் இந்திய இழுவைப் படகுகளின் வருகையினையும் நிறுத்தி தேசிய மீனவ கொள்கையின் மூலம் நிரந்தர மீனவத் தொழில் ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

♦ காணாமல் போன உறவுகளுக்காக ஏங்கித் தவிக்கும் உறவுகளுக்கு உரிய பதிலை உடனடியாக அளிக்க வேண்டும். அரசியல் கைதிகளாய் தடுத்து வைத்திருப்பவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

♦ போர்க் காலத்தில் கணவர் இறந்து. கடத்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட குடும்ப தலைமைத்துவப் பெண்களுக்கான சமூக பொருளாதார கலாசார மேம்பாடுகளை ஏற்படுத்த வேண்டும்.

♦ போரின் பின்னர் அதிகரித்துக் காணப்படும் சமூக, கலாசாரச் சீர்கேடுகள் மற்றும் போதைப் பொருள் பாவனைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

♦ கிராமிய மட்டத்தில் பாதிக்கப் பட்டுள்ள விவசாயிகளுக்கான சந்தை வாய்ப்பை உறுதி செய்து அவர்களின் உற்பத்தி நிலையை அதிகரிக்கக்கூடிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

♦ அபிவிருத்தி என்ற போர்வையில் வடக்கின் விளைநிலங்கள் அபகரிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். ஆகிய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-14)

# பட்டதாரிப் பயிலுநர்களை இணைத்து இன்று கூட்டம்

யாழ்ப்பாணம் செப் 11

யாழ். மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பட்டதாரிப் பயிலுநர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டங்கள் யாழ் மாவட்ட பிரதேச செயலகத்துக்கு சமீபமாக நடைபெற எற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஓய்வு பெற்ற அரச உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை குறித்த கூட்டம் ஏன் பிரதேச செயலகங்களுக்கு வெளியில் கூட்டப்படுகின்றது என்றும் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பட்டதாரிப் பயிலு நர்களுடன் ஏன் இந்தக் கூட்டம் ஏற்பாட செய்யப்பட்டுள்ளது என்பதையிட்டும் சந்தேகங்கள் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-86)

# ஐ.ம.சு.கூட்டமைப்பு அலுவலகத்தில் சமுர்த்தி முகாமையாளர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம் செப் 11

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கான சந்திப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடமாகாணத்துக்கான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

பிரதேச செயலகங்களில் இருந்து தலா ஒரு முகாமையாளர், ஒரு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் என யாழ்ப்பாண செயலகத்துக்கு வரும்படி சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ் மாவட்ட இணைப்பாளரால் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த அலுவலர்கள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்குச் சென்ற பின்னர் அவர்களை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அலுவலகத்துக்குச் செல்லுமாறு இனைப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.

அங்கு நடைபெற்ற கூட்டத்தில் குறித்த அலுவலர்களுடன் தென்னிலங்கையில் இருந்து வருகைதந்த அலுவலர்களும் கலந்து கொண்ட கூட்டம் இடம் பெற்றுள்ளது. (ச-86)

# சித்திரமும் வடிவமைப்பும் செய்முறைப் பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் 2012/2013 கல்வியாண்டுக்கான சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிக்கான செய்முறைப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என்று யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் நடைபெறவிருப்பதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டு பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இந்த மாதம் ஆரம்பமாகின்றது திருவையாறு நீர்ப்பாசன திட்டம்

கிளிநொச்சி, செப்.11

கிளிநொச்சி திருவையாறு கிராமத்தில் நீர்ப்பாசனத் திட்டம் இந்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக திருவையாறு கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் கடந்த 1967 ஆம் ஆண்டு தொடக்கம் 1987 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் இந்தப் பகுதி மக்கள் விவசாயச் செய்கையை மேற்கொண்டு வந்தனர். கடந்த போரின் பின்னர் இந்த ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் செயலிழந்து காணப்பட்டது.

தற்போது இதனை மீளவும் செயற்படுத்தும் நோக்குடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்துக்கென புதிய 6 பெரிய நீர் இறைக்கும் இயந்திரங்கள் பொருத்தப்படவுள்ளதுடன் சுமார் 30 கிலோ மீற்றர் நீளமான கொங்கிறீட் வாய்க்கால்களும் அமைக்கப்படவுள்ளன.

> நீர்ப்பாசனத் திட்டத்துக்கென புதிய 6 பெரிய நீர் இறைக்கும் இயந்திரங்கள் பொருத்தப்படவுள்ளன.

இதன் மூலம் இந்தப் பகுதியில் வாழும் சுமார் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடையவுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

இந்த வேலைத்திட்டம் இந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டு ஒன்றரை வருட காலத்தில் நிறைவடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)



கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம் விடுமுறையின் பின்னர் திறக்கப்பட்டபோது மாணவர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில்.... (க-18)

# இயங்க ஆரம்பித்தது அலுவலகம்

முல்லைத்தீவு மாவட்ட அரச மரக் கூட்டுத்தாபன அலுவலகம் ஒட்டுசுட்டான் பகுதியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

மீள்குடியமர்வின் பின்னரான காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்துக்கான அரச மரக் கூட்டுத்தாபன அலுவலகம் செயற்படத் தொடங்கிய போதும் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் நீண்ட காலமாக இயங்காத நிலையில் காணப்பட்டது. இதனையடுத்து முல்லைத்தீவு மாவட்டத்துக்கான அரச மரக் கூட்டுத்தாபன அலுவலகம் ஒட்டுசுட்டான்- மாங்குளம் வீதியில் அண்மையில் செயற்பட ஆரம்பித்துள்ளது. (க-6)

# தேசிய கல்வியியற் கல்லூரியின் இந்து மாநாடு வெள்ளியன்று

நெளுக்குளம், செப். 11

வவுனியாவில் இந்து மாநாடு இடம்பெறவுள்ளது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி நடத்தும் இந்து மாநாடு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கல்லூரியின் பலநோக்கு மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு பீடாதிபதி க.பேர்ணாட் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ். கே.யோகநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக மருத்துவர் த.முத்துலிங்கம், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா. இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பவானி முகுந்தன் ஆகியோரும் . சிறப்பு விருந்தினர்களாக இந்து சமயத்துறை விரிவுரையாளர் பொன்.ஜெயரூபன் , மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் ஆகியோார் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(க-402)

# முரண்பாடுகளை ஏற்படுத்தவே தம்புள்ளயில் விக்கிரகம் உடைப்பு

## இந்து மகா சபை கண்டனம்

வலி. வடக்கு செப 11

தம்புள்ள காளி கோயில் விக்கிரகம் உடைக்கப்பட்டமைக்கு இந்து மகா சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த ஆலயத்திலிருந்த விக்கிரகம் இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டமை தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்து மகா சபை தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அண்மைக்காலமாக நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள இந்துக் கடவுள்களின் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டு வருகின்றன.



இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தி அதன் மூலம் தாங்கள் எதிர்பார்க்கும் இலக்கு ஒன்றை அடைவதற்காகவே இவ்வாறாக இந்துக் கடவுள்களின் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டு வருவதாகவே இந்து மகா சபை கருதுகின்றது.

பொதுமக்களின் வழிபாட்டிடங்களை அரசியல் சகதிக்குள் கொண்டு செல்லாமல் அவற்றை சுதந்திரமாக இயங்க அனுமதிக்க வேண்டும்.

ஆன்மிக நெறியில் மக்கள் நல்வழிப்படுத்தப்படும் போதே அவர்களின் மனங்களில் மாற்றங்கள் ஏற்படும். மக்களை நல்வழிப்படுத்தும் மத வழிபாட்டுத் தலங்கள் மீது இவ்வாறான காடைத்தனம் மேற்கொள்ளப்படுவது மக்களை திசை திருப்பி வன்முறை உணர்வுக்குள் தள்ளுவதாகவே முடியும். இந்த நிலை ஏற்பட எவரும் துணை போகக்கூடாது.

தம்புள்ள காளி கோயிலில் இடம்பெற்றது போன்ற ஒரு செயற்பாடு இனிமேல் எந்தவொரு ஆலயத்திலும் இடம் பெறக்கூடாது. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இந்து கலாசார திணைக்களமும் அதனுடன் இணைந்த அமைச்சும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோனியா காந்திக்கு மருத்துவமனை ஊழியர்கள் மூலம் அழைப்பாணை

## நியூயோர்க் நீதிமன்றம் உத்தரவு

நியூயோர்க், செப்.11

அமெரிக்க மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு அந்த மருத்துவமனையின் ஊழியர்கள் மூலம் அழைப்பாணையை வழங்குமாறு நியூயோர்க் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

1984ஆம் ஆண்டு நடந்த சீக்கியர்களுக்கு எதிரான கலவரத்தில் தொடர்புடையவர்களை சோனியா காந்தி பாதுகாத்தார் என்று அமெரிக்காவில் தொடரப்பட்ட வழக்கிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதி கோரும் சீக்கியர்கள் அமைப்பின் சார்பில் தொடரப்பட்ட வழக்கில் சோனியாவிற்கு அழைப்பாணை வழங்க ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், பலத்த பாதுகாப்புடன் அமெரிக்காவில் சிகிச்சை பெறும் அவரிடம் அழைப்பாணையை வழங்குவது கடினம் என்று மனுதாரர்கள் தரப்பில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட நியூயோர்க் நீதிமன்ற நீதிபதி சோனியா காந்தி சிகிச்சை பெற்று வரும் புற்றுநோய் சிகிச்சை மைய ஊழியர்கள் அல்லது அவரது பாதுகாப்பு பணியில் உள்ள அதிகாரிகள் மூலம் அவருக்கு அழைப்பாணை வழங்க உத்தரவிட்டுள்ளார்.

சோனியாவிடம் அழைப்பாணை வழங்கப்பட்டதை மருத்துவமனை ஊழியர்கள் அல்லது அவரது பாதுகாவலர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் நீதிபதி அறிவுறுத்தி உள்ளார்.

சிகிச்சை முடிந்து இந்த வார இறுதியில் சோனியா நாடு திரும்புவார் என்று தகவல் வெளியான நிலையில் அமெரிக்க நீதிமன்றத்தின் இந்த உத்தரவு அவருக்கு புதிய நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது. (ற)

# இலங்கைக்கு போர் கப்பல்கள் தமிழர்களின் நன்மைக்காகவே

## சுதர்சன நாச்சியப்பனின் புதிய விளக்கம் இது

சென்னை, செப்.11

முன்னர் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இலங்கைக்குப் போர்க்கப்பல்கள் வழங்கப்படுகின்றன. இலங்கையுடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்தால் இலங்கைத் தமிழர்களுக்கு உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதில் சிரமங்கள் ஏற்படும் என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்.

புதுடில்லியில் இருந்து சென்னை வந்திருந்த சுதர்சன நாச்சியப்பன் விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

"இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்ள வேண்டும் என்பது இலங்கைத் தமிழர்களின் விருப்பம். அதன்மூலம் தமக்கு நன்மைகள் கிடைக்கும் என்று நம்புகின்றனர். எனினும் பொதுநலவாய மாநாடு குறித்து இந்திய மத்திய அரசு இதுவரை இறுதி முடிவு எடுக்கவில்லை.



இலங்கைக்குப் போர்க்கப்பல்கள் வழங்குவது என்பது முன்னரே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம். அதனடிப்படையிலேயே தற்போது போர்க்கப்பல்கள் வழங்கப்படவுள்ளன. இந்திய அரசு போர்க்கப்பல்களை வழங்காது விட்டாலும் இலங்கைக்கு வேறு நாடுகள் வழங்கியே தீரும். சீனா இலங்கையுடன் நெருக்கமான உறவைப் பேணி வருகின்றது. இலங்கையுடன் மோதல் போக்கைக் கடைப்பிடிக்க முடியாது.

இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. இலங்கையில் விரைவில் வடமாகாண தேர்தல் நடைபெறவுள்ளது. தற்போது இலங்கையுடன் மோதல் போக்கை கையாண்டால் நலத்திட்டங்களை செயற்படுத்த முடியாமல் போவதுடன், அங்கு வாழும் தமிழர்களுக்கான உரிமைகளை பெற்றுத் தருவதில் சிரமம் ஏற்படும்" என்று தெரிவித்தார் நாச்சியப்பன். (ற)

# டில்லி மாணவி பாலியல் வன்புணர்வு வழக்கு நால்வரும் குற்றவாளிகளே; நீதிமன்றம் தீர்ப்பு

புதுடில்லி, செப்.11

புதுடில்லி கடந்த டிசெம்பர் 13 ஆம் திகதி ஓடும் பஸ்ஸில் கல்லூரி மாணவி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு உயிரிழந்த சம்பவத்தில் சந்தேக நபர்கள் நால்வரும் குற்றவாளிகளே என்று நீதிமன்றம் தீர்மானித்துள்ளதுடன், இறுதித் தீர்ப்பை இன்று வழங்குவதாகவும் அறிவித்துள்ளது.

"சந்தேக நபர்கள் நால்வர் மீதும், கடத்துதல், வன்புணர்வு, கொலைக் குற்றம், துன்புறுத்துதல், ஆதாரங்களை மறைத்தல் ஆகிய 13 பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து குற்றங்களும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நால்வரும் குற்றவாளிகளே என்று நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. அவர்களுக்கான தண்டனை குறித்த இறுதித் தீர்ப்பை நாளை (இன்று) நீதிமன்றம் வழங்கும்" என்று நீதிபதிகள் நேற்றைய விசாரணைகளின் முடிவில் அறிவித்தனர்.

புதுடில்லியில் கடந்த டிசெம்பர் மாதம் ஓடும் பஸ்ஸில் துணை மருத்துவக் கல்லூரி மாணவி 6 பேர் கொண்ட கும்பலால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு உயிரிழந்தார். அந்தச் சம்பவத்தில் தொடர்புடைய ஒரு குற்றவாளி 17 வயதானவன் என்பதால் அவனது வழக்கை சிறார் நீதிமன்றம் விசாரித்து 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. முக்கிய குற்றவாளி ஒருவன் சிறையிலேயே தற்கொலை செய்து கொண்டான். மற்றைய 4பேரும் குற்றவாளிகளே என்று தற்போது நிரூபணமாகியுள்ளது.

குற்றவாளிகளுக்கு அதிகபட்சமாக தூக்கு தண்டனை வழங்க வேண்டும் என மாணவியின் பெற்றோர் கூறுகின்றனர். "சிறுவனுக்கு 3 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது எங்களுக்கு கவலை அளித்தது. சட்டத்தின் மீது எங்களுக்கு நம்பிக்கை அற்றுப் போனது. இன்றைய தீர்ப்பில் குற்றவாளிகளுக்குத் தூக்கு தண்டனை வழங்கினால்தான் எமது மனம் ஆறுதலடையும். அதற்கென பிரார்த்திக்கிறோம்" என்று கண்ணீருடன் கூறுகின்றனர் அவர்கள். (ற)

## உத்தர பிரதேச கலவரத்தால் 7 மாநிலங்களுக்கு ஆபத்து

முசாபர் நகர், செப்.11

உத்தரபிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கலவரம் 7 பிற மாநிலங்களுக்கு பரவும் ஆபத்து காணப்படுகின்றது என்று இந்திய உளவுத்துறை எச்சரித்துள்ளது. பீகார், ராஜஸ்தான், ம.பி., கர்நாடகா, அரியானா, ஜம்மு -காஷ்மீர் உட்பட ஏழு மாநிலங்களிலேயே பரவும் அபாயம் உள்ளது என்றும் உளவுத்துறை எச்சரித்துள்ளது. (ற)

TNA Tamil National Alliance தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
தேர்தல் பரப்புரை

பரப்புரைக் கூட்டமும் வேட்பாளர் அறிமுகமும்

இடம் : மாவத்தை விளையாட்டுக்கழக அரங்கு- அராலி
காலம் : நாளை (12.09.2013) வியாழக்கிழமை மாலை 4.00 மணி

தலைவர் :
கௌரவ ஈ. சரவணபவன் (நாடாளுமன்ற உறுப்பினர்)

சிறப்புரைகள் :
கௌரவ இரா. சம்பந்தன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ மாவை.சேனாதிராசா (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ க.வி. விக்னேஸ்வரன் (முதலமைச்சர் வேட்பாளர்)
கௌரவ சுரேஷ் பிரேமச்சந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ எம்.கே. சிவாஜிலிங்கம் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

யாழ்.பிரபல இசைக்கலைஞர்களின் இசை நிகழ்ச்சி
அன்புடன் அழைக்கின்றோம்.

TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் விரிவாக ஆய்வு செய்க

## ஐ.நா. குழுவை அழைக்கின்றது சிரியா

டமாஸ்கஸ், செப்.11
சிரிய அரசால் இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் இடங்களில் ஐ.நா. குழுவினர் மீண்டும் சோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சிரியாவும், ரஷ்யாவும் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் சிரிய வெளியுறவுத் துறை அமைச்சர் அல்-மோல்லம் மற்றும் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் லாவ்ரோவ் ஆகியோருக்கு இடையே நடைபெற்ற ஆலோசனைகளின் முடிவிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் லாவ்ரோவ், "சிரியாவில் நிலவும் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதையே ரஷ்யா தொடர்ந்து வலியுறுத்தும். சிரியா மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், அது அமைதி முயற்சிகளை அடியோடு அழித்துவிடும். அத்துடன் சிரியா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பயங்கரவாதம் தலைதூக்க வழிவகை செய்துவிடும். இரசாயனத் தாக்குதல் நடைபெற்றதாகக் கூறப்படும் இடங்களில் ஐ.நா.குழுவினர் மீண்டும் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார்.

### அசாத் எச்சரிக்கை

சிரியா மீது இராணுவத் தாக்குதல் நடத்த முடிவு செய்தால் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டுப்படையினர் ஒவ்வொரு தாக்குலுக்கும் பதில் தாக்குதலை சந்திக்க வேண்டியிருக்கும் என்று அந்நாட்டு ஜனாதிபதி பசார் அல் அசாத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிரியா மீதான இராணுவ நடவடிக்கைக்கு அமெரிக்க நாடாளுமன்ற ஒப்புதலை அமெரிக்க ஜனாதிபதி கோரியுள்ள நிலையில், முதல் முறையாக பத்திரிகையாளர்களைச் சந்தித்த அசாத், "பதில் தாக்குதல் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். அது சிரிய அரசிடமிருந்துதான் வரவேண்டும் என்று அவசியமில்லை" என்று தெரிவித்துள்ளார்.

### ஒபாமா தீவிர பிரசாரம்

சிரியா மீது ராணுவ நடவடிக்கைக்கு முழு ஆயத்தமாகியுள்ள அமெரிக்க அதிபர் ஒபாமா, அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் முயற்சியில் கடந்த இரண்டு நாள்களாக ஈடுபட்டு வருகின்றார்.



அதேவேளை சிரியா விடயத்தில் தாக்குதல் நடத்துவதை விட, தாக்குதல் நடத்தாமல் இருப்பதுதான் பேராபத்தாக முடியும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி கருத்துத் தெரிவித்துள்ளார்.(ற)

## நான்கில் ஒரு ஆண் பாலியல் வன்முறைகளில்



ஜெனிவா, செப்.11
ஆசியாவில் நான்கில் ஒரு ஆண், பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுகின்றார் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையொன்று கூறுகின்றது.

ஆசியாவில் உறவுகளுக்கு இடையிலான பாலியல் வன்முறைகள் பொதுவான ஒரு விடயமாகக் காணப்படுகின்ற அதேவேளை, பத்தில் ஒரு ஆண் மனைவி அல்லாத ஒருவரை பாலியல் வன்முறைகளுக்கு ஆளாக்குகின்றனர் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
"ஆறு ஆசிய நாடுகளின் ஆயிரத்திற்கும் அதிகமான ஆண்களுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையிலேயே இந்த முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. நான்கில் ஒரு ஆண் பெண்கள் மீதான பாலியல் வன் முறைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதுடன், குறைந்தது ஒரு பாலியல் குற்றத்தில் ஈடுபட்டதை அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். பாலியல் பலாத்கார பாதிப்பு வீதம் நாடுகளுக்கு நாடு வேறுபடுகின்றன. அதிகளவு பாலியல் பலாத்காரம் இடம்பெறும் நாடாக பப்புவான நியூகினி பதிவாகியுள்ளதுடன், இந்தோனேஷியா இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எவ்வாறு பரவியுள்ளது மற்றும் அதற்கான காரணங்கள் என்ன, என்பவை குறித்தே இந்தப் பன்னாட்டு ஆய்வு முதல் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (ற)

## சுலவேசியில் நிலநடுக்கம்

சுலவேசி, செப்.11
இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவு கோலில் 5.7 ஆக பதிவான இந்த நில நடுக்கத்தால் எந்தவித பாதிப்பும் இல்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து 135 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தென்மேற்கு கோரோன்டாலோ நகரில், 46 கிலோ மீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.(ற)



கௌதாமாலாவில் ஆற்றுப்பாலத்தில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 43 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 80 பேருடன் தலைநகர் கௌதமாலா சிட்டியை நோக்கி திங்கட்கிழமை சென்று கொண்டிருந்த பஸ் 600 அடி உயரமான ஆற்றுப்பாலத்தில் பயணித்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுக்குள் பாய்ந்தது. அதில் 3 குழந்தைகள் உட்பட 43 பேர் உயிரிழந்துடன், 30க்கும் அதிகமானோர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். (ற)

## கலிபோர்னியா காட்டுத் தீ: பெரும் வனப் பகுதி சேதம்

நியூயோர்க், செப்.11
அமெரிக்காவின் கிழக்கு சான் பிரான்ஸிஸ்கோவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ மேலும் பல இடங்களுக்கு பரவி வருகின்றது என்று தகவல்கள் கூறுகின்றன. கலிபோர்னியாவில் உள்ள மலைப்பகுதியில் இரண்டுநாள்களுக்கு முன்னர் ஏற்பட்ட தீ, இதுவரை 3 ஆயிரத்து 7 ஏக்கர் வனப்பகுதிகளை நாசமாக்கியுள்ளது என்று கூறப்படுகின்றது. தீயைக் கட்டுப்படும் முயற்சிகளில் ஏராளமான தீயணைப் படையினர் ஈடுபட்டுள்ள போதும் தீ வேகமாகப் பரவி வருகின்றது என்று கூறப்படுகின்றது.

அதையடுத்து அந்தப் பகுதியில் இருந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப் படுத்தப்பட்டுள்ளன. (ற)

## பட்டப் பகலில் அதிரடிக் கொள்ளை

### பரிஸில் 2.6 மில்லியன் டொலர் வைரங்கள் பறிபோயின

பரிஸ், செப்.11
பட்டப் பகலில் ஆங்கிலத் திரைப்படப் பாணியில் சுமார் 2.6 மில்லியன் டொலர் மதிப்புள்ள வைரக்கற்களும், கைக்கடிகாரங்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இந்த அதிரடிக் கொள்ளை பிரான்ஸில் நடைபெற்றுள்ளது.

முகமூடி அணிந்த கொள்ளையர் குழுவொன்று பிரான்ஸ் தலைநகர் பரிஸில் உள்ள நகைக் கடை ஒன்றின் கண்ணாடிக் கதவுகளை காரைக் கொண்டு மோதி உடைத்தது. காரில் இருந்து குதித்த கொள்ளையர்கள் ஓரிரு நிமிடங்களில் விலைமதிப்புள்ளகற்களை-யும், கைக்கடிகாரங்களையும் அள்ளிக் காருக்குக் போட்டுக் கொண்டு அதிரடியாக வெளியேறினர்.

நகைக் கடையில் இருந்தவர்கள் சுதாகரிப்பதற்கு முன்னதாக அந்தக் கார் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டது.

இதே போன்று பல கொள்ளைச்சம்பவங்கள் பிரான்ஸில் இடம்பெறுவது வழமை எனக் கூறப்படுகிறது. கடந்த ஜூலை மாதம் தான் 136 மில்லியன் டொலர் மதிப்புள்ள நகைகள் கேன் நகரில் உள்ள ஒரு விடுதியில் இருந்து கொள்ளையடிக்கப்பட்டன.

ரோஜா சிறுத்தைகள் என்ற குழுவே இதைச் செய்திருக்க வேண்டும்என்றசந்தேகம்வெளியிடப் பட்டுள்ளது. இந்தக் குழு 1999 ஆம்ஆண்டுமுதல்உலக அளவில் 300 கொள்ளைகளை நடத்தியிருக்கிறது .(ற)

## இந்திய எழுத்தாளர் கொலை: இருவர் பொலிஸாரால் கைது

காபூல், செப்.11
ஆப்கனில் இந்தியப் பெண் எழுத்தாளர் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஆப்கன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆப்கனில் வசித்த இந்தியப் பெண் எழுத்தாளர் சுஷ்மிதா பானர்ஜி கடந்த வியாழக்கிழமை தலிபான்களின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஆப்கன் பொலிஸார் குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் தாம் சுஷ்மிதா மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதை



ஒப்புக் கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளர்.

சுஷ்மிதா தனது வீட்டுக்கு இணைய இணைப்பைப் பெற்றிருந்தமையாலும், தலிபான் அமைப்பினருக்கு எதிரான கருத்துக்களை எழுதி வந்ததாலுமே அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்று கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளனர்.(ற)

## ஆக்கியவனை அழித்த ஹெலி

நியூயோர்க், செப்.11
தன்னியக்கம் மூலம் இயங்கும் விளையாட்டு ஹெலிகொப்டர் ஒன்றை வடிவமைத்து இயக்கிப் பார்த்த இளைஞர் அந்த விளையாட்டு ஹெலி மோதியே உயிரிழந்த பரிதாப சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் புரூக்ளின் நகரை சேர்ந்தவர் 19 வயதுடைய ரோமன் பிரோசெக். இவர் கட்டுமானம், பொறியியல் மற்றும் கட்டட கலை குறித்து படித்து வந்தார். இவருக்கு 'ரிமோட்' மூலம் இயங்கும் பொம்மை விமானங்கள், ஹெலிஹொப்டர்கள் மிகவும் பிடிக்கும். அதனால் அவ்வாறான விளையாட்டு உபகரணங்களை வடிவமைத்து சோதித்துப் பார்ப்பது தான் அவரது பொழுதுபோக்கு.

அண்மையில் அவ்வாறான விளையாட்டு ஹெலி ஒன்றை அமைத்துப் பார்க்க வேண்டும் என்று அவருக்குத் திடீரென ஆசைஏற்பட்டது. உடனே அந்த வேலைகளில் இறங்கினார் பிரோசெக். அவர் எதிர் பார்த்ததை விட அழகாக வடிவமைத்து விட்டார் ஹெலிகொப்டரை. மகிழ்ச்சியுடன் அதை எடுத்துக் கொண்டு புரூக்ளின் நகரில் உள்ள கோல்வெர்ட் பூங்காவுக்குச் சென்றார்.

சோதனை ஓட்டம் தொடங்கியது. பிராசொக் நினைத்தது போல் அது அற்புதமாகப் பறந்தது. அதைப் பார்க்கக் கூட்டமும் கூடியது. தூரத்தே நின்று அவர் ஹெலிகொப்டரை இயக்க அவர் நினைத்த விதங்களில் பறந்து வித்தை காட்டியது அந்த ஹெலிகொப்டர். ஆனால் கொஞ்சநேரத்திலேயே ஹெலியின் போக்கு மாறியது. யார் என்னைக் கட்டுப்படுத்துவது எனது திறமையைப் பார் என்பது போல் தன் இஷ்டத்துக்குப் பறக்கத் தொடங்கியது ஹெலி.




பிரோசெக்கின் கட்டுப்பட்டை மீறி கொஞ்சத்தூரம் சென்ற ஹெலிகொப்டர், என்ன நினைத்ததோ தெரியாது. அவரை நோக்கி அசுர வேகத்தில் வரத் தொடங்கியது. பிரோசொக் நடப்பதைக் கிரகிக்க முன்னரே அதேவேகத்தில் அவரின் தலையில் மோதி அடங்கியது ஹெலிகொப்டர்.

இரத்த வெள்ளத்தில் வீழ்ந்த பிரோசொக்கை அங்கிருந்தவர்கள் அவசர அவசரமாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் அதற்கு முன்னரே அவர் இறந்து விட்டார். இந்தச் சம்பவம் [illegible] சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (ற)

## பாக். ஜனாதிபதியாக மம்மூன் பதவியேற்பு

இஸ்லாமாபாத், செப்.11
பாகிஸ்தானின் 12ஆவது ஜனாதிபதியாக மம்மூன் ஹூசைன் பதவியேற்றுக் கொண்டார். இஸ்லாமாபாத்தில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் பாகிஸ்தான் தலைமை நீதிபதி இப்திகார் அகமது சௌத்ரி மம்மூன் ஹூசைனுக்குப் பதவி பிரமாணம் செய்து வைத்தார். பதவியேற்பு நிகழ்வில் பாகிஸ்



தான் பிரதமர் நவாஸ் செரீப், முன்னாள் ஜனாதிபதி அசிப் அலி சர்தாரி மற்றும் அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
11/09/2013


# After A/Level



FREE Pendrive
for all Diplomas

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமாக்கள்

DiTec INTERNATIONAL — Diploma in Information Technology — Free Text Books — Duration : 4 months

DiCA — Diploma in Computerized Accounting — Free Text Books — Duration : 5 months

DiE — Diploma in English — Grammar | Spoken | Comprehension — Free Text Books — Duration : 4 months

DiSE — Diploma in Software Engineering — Free Text Books — Duration : 6 months

DiBM — Diploma in Business Management — Free Text Books — Duration : 4 months

DiWE — Diploma in Web Engineering — Free Text Books — Duration : 6 months

DiHN — Diploma in Hardware & Networking — Free Text Books — Duration : 3 months

3 சர்வதேச தரம்வாய்ந்த மேலும் டிப்ளோமாக்கள் முற்றிலும் இலவசம்

மேலதிக விபரங்களுக்கு
<Fullname> Space <Course> Space <Address>
SMS to this Number 077 990 56 11

புதிய பிரிவுகள்
2013.09.14
காலை 9 மணி

ESOFT — Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS -JAFFNA
No.137, K.K.S Road, Jaffna | Tel : 021 222 4142
HOTLINE : 077 309 9 308
50 நாடளாவிய கிளைகள்


## ஆனைக்கோட்டை நாவலடி வீதி திருத்தப்படுமா?

ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியில் இருந்து பிரிந்து செல்லும் நாவலடி வீதி நீண்ட காலமாக திருத்தியமைக்கப்படாததால் பெரிய கிடங்கும் கல்லுமாக காணப்படுகின்றது. இதனால் அவ் வீதியிலுள்ள எண்ணெய் உற் பத்தியாளர் தமது உற்பத்திப் பொருள்களை கொண்டு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதனை விட வாகனங்கள் செல்லும் போது வீதியில் கிடங்குகளில் விழுந் தொழும்பிச் செல்ல வேண்டியுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபையுடன் அந்தப் பகுதி மக்கள் பல தடவைகள் மனுக்கள் கொடுத்தும் எடுத்துக் கூறியும் இது வரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(ந-100)


DIPLOMA IN ENGLISH
ஆங்கில மொழியில் பூரண பயிற்சி




நீங்கள் எங்கு சென்றாலும் ஆங்கில மொழியினை கற்கமுடியும் ஆனால் எங்களிடம் மட்டுமே பேசமுடியும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை.

மொழியைக் கற்பித்தலுக்கான விசேட
ENGLISH LAB

எமது ஆங்கிலப் பாடநெறியில் இணைபவர்கள் துரித வேகத்தில் கற்பிக்கப்பட்டு மொழியினை சரளமாக பேசுவதற்காக சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட வகுப்பறைச்சூழல், நவீன கற்பித்தல் முறை.

UNIVERSITY OF CAMBRIDGE / CITY & GUILDS / TOEIC /ISO 9001-2008

பாடநெறியினை சிறப்பாகப் பூர்த்தி செய்பவர்களுக்கு அனைத்து நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச சான்றிதழ்கள்

10000 ற்கும் அதிகமான மாணவர்கள் பயின்ற பாடநெறிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

சனி/ஞாயிறு (1.00 -3.30 P.M) 14.09.2013

திங்கள்/புதன் [ 4.00 - 6.00 P.M ] 16.09.2013

IELTS/A1,A2,B1,B2 / FRENCH / DEUTCH பாடநெறிகள் பதிவுகள்

E-CITY
College of English & IT Skills Development
இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோவில் அருகில்)
0774924166 / 0773400418 / 0770610271 / 0212217106



### ஓட்டோ விற்பனைக்கு

தனிப்பட்டவரின் பாவனையிலுள்ள 200-XXXX தொடரிலக்கமுடைய ஓட்டோ விற்பனைக்குண்டு.
தொடர்பு: 075 046 6389 (31593) (3.11.6)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Nissan sunny 18-xxxx இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 026 6137 (31596) (7.6.3)

### கால்களை பராமரியுங்கள்

லாவா வைத்தியசாலை
Tel :021-2224333
கிரமமான சோதனை இன்மையால் நாட்பட்ட நோய்களின் விளைவாக கால்களை இழக்கவேண்டி வரலாம்!
கால்களின் நரம்புப்பாதிப்பினை அறிந்து கொள்ள கணினி மயப்படுத்தப்பட்ட பரிசோதனையும் வைத்திய ஆலோசனையும்.
Foot Care Centre
Lava Hospitals
LH Your Health, Our Priority
No 75,temple road.Jaffna

### காசாளர் தேவை

யாழ் நகரில் நவீனமயப்படுத்தப்பட்ட, பிரபல புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள காசாளர் (ஆண்) உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
*Rasi Collection*
இல. 199, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (சி/11959) (7.6.3)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## விநாசித்தம்பி காசிலிங்கம்
(No:1, மதுபானசாலை -முன்னாள் பங்காளர்)
திதி: பூர்வஷஷ்டி

தோளிலே சுமந்து
தொட்டிலிலே ஆட்டி
பாடசாலை செல்லவைத்து
நற்கல்விதனைப் புகட்டி
நாங்கள் பயன் பெறமுன்பே
எங்களுக்குப் பயன்தர
தெய்வத்துடன் இணைந்த
எங்கள் தந்தையாம் அப்பாவே
உங்களைத் தெய்வமாய் வணங்கி நிற்கும்
உங்கள் பிள்ளைகள்.

உங்களை என்றும் மறவோம் அப்பா.

No:64/4 A, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

(31654)(10,16,14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாராயம் விற்றவருக்கு ரூ. 10,000 அபராதம்

யாழ்ப்பாணம், செப்.11

சட்டவிரோதமாக சாராயம் விற்றவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மற்றொருவர் தான் நிரபராதி என்று வாதிட்டதனால் அவரைப் பிணையில் விடுவித்து அவருக்கு எதிராக வழக்கு முன்னெடுக்கப்படுகிறது.

நயினாதீவு, 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இராமன் இராமச்சந்திரன் என்பவரே குற்றத்தை ஒப்புக் கொண்டதனால் அவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-4)



யாழ்.பிரதம தபாலகத்துக்கு முன்பாகவுள்ள பண்ணைச் சந்தியில் சுற்றுவட்டம் அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (ச-135)

## வல்லிபுரம் வீதியை புனரமைத்துத் தரவும்

### பக்தர்கள் வேண்டுகோள்

வடமராட்சி, செப். 11

மந்திகை-முறாவில்-வல்லிபுரம் வீதி மோசமாகப் பழுதடைந்துள்ளதால் அந்த வீதியைத் திருத்தியமைத்துத் தருமாறு வல்லிபுரக்குறிச்சி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வல்லிபுரக் கோயில் பெருந்திருவிழா ஆரம்பமான நிலையில் இந்த வீதி திருத்தப்படாமையால் குறித்த வீதி ஊடாக வல்லிபுரக் கோயிலுக்குச் சென்று வரும் பக்தர்களும் , வாகனங்களும் பெரும்சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது.

இந்த வீதியைத் தாமதமின்றித் திருத்தி அமைத்து வல்லிபுரக் கோயிலுக்குச் சென்றுவரும் பக்தர்களின் சிரமங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-8)



## நாகதம்பிரானுக்கு வருடாந்த உற்சவம்

வடமராட்சி, செப்.11

சரித்திரப் பிரசித்தி பெற்ற நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாக வுள்ளது.

இந்த ஆலயத்தின் முக்கிய உற்சவமான கப்பல் திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், வேட்டைத் திருவிழா 21 ஆம் திகதி சனிக்கிழமையும், 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும், 23 ஆம் திகதி திங்கட்கிழமை சமுத்திர தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

இந்த உற்சவம் தொடர்பாக மருதங்கேணி பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உற்சவ காலத்தில் பருத்தித்துறையில் இருந்து விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்படுவதுடன், குடி தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளையும் பக்தர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-8)

# உரப் பசளை விநியோகம் 25 வீதத்தால் குறைப்பு

### இயற்கைப் பசளையைப் பாவிக்க ஊக்குவிப்பு

அச்சுவேலி, செப்.11

நெற் பயிர்ச் செய்கைக்கான மானிய உரப்பசளை விநியோகம் 25 வீதம் குறைக்கப்படவுள்ளது. சேதனப் பசளையின் பாவனையை ஊக்கப்படுத்தி கட்டாயம் இயற்கையான பசளை வகைகளை பயிர்ச் செய்கையில் பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியே உரப்பசளை விநியோக அளவு குறைக்கப்படவுள்ளது.

> “ மானிய உரப் பசளைக்கு கிலோ ஒன்றுக்கு ஏழு ரூபா வீதம் அறவிடப்படுகின்றது. 50 கிலோ உரப்பசளை மூடை 350 ரூபாவுக்கு வழங்கப்படுகின்றது.

நெற் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்துவதற்கு மூன்று கட்டங்களாக இரசாயன உரப் பசளைகள் விவசாயிகள் மேற்கொள்ளும் நெற்பயிர்ச்செய்கை நிலப் பரப்பளவுக்கு அமைய வழங்கப்படுகின்றது. மானிய உரப் பசளைக்கு கிலோ ஒன்றுக்கு ஏழு ரூபா வீதம் அறவிடப்படுகின்றது. 50 கிலோ உரப்பசளை மூடை 350 ரூபாவுக்கு வழங்கப்படுகின்றது.

செயற்கையில் இரசாயனக் கலவைகளைக் கொண்ட உரக் கலவையால் விளை நிலங்களில் ஏற்படும் இரசாயனத் தாக்கம், அதனால் ஏற்படும் பக்க விளைவுகள், அதனால் நிலத்தடி நீரில் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் நிலைமைகளினால் இலைகள் மற்றும் குப்பை இயற்கையான கழிவுகள் மற்றும் கால்நடைகளின் கழிவுகளை கொண்ட சேதனப் பசளைகளை பயன்படுத்துவதற்கு விவசாயிகள் ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.

அதனாலேயே மானிய உரப் பசளை விநியோக அளவு 25 வீதத்தால் குறைக்கப்படவுள் ளது என்று கூறப்படுகின்றது. (ச-11)

## மாதங்கள் பல கடந்தும் நிறைவு பெறாத வடிகால்

### குருநகர் மக்கள் விசனம்



குருநகர், செப்.11

குருநகர், கடற்கரை வீதியூடாக குருநகர் புதுமை மாதா ஆலயத்துக்குச் செல்லும் வீதியின் மத்தியில் அமைந்துள்ள வடிகால் வேலைகள் இதுவரை நிறைவு செய்யப்படவில்லை. அதனால் இந்த வீதியூடான போக்குவரத்து தடைசெய்யப்பட்டு காணப்படுகிறது. இந்த வடிகால் திருத்தும் பணி பல மாதங்களாக நீடிப்பதனால் மக்களுக்கு அசௌகரியங்களையும், உயிராபத்தையும் ஏற்படுத்தக் காரணமாகியுள்ளது. எனவே இந்த வடிகாலைப் பூரணப்படுத்த யாழ்.மாநகரசபை உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குருநகர் மக்கள் கோரியுள்ளனர். (ச-51)

## வடமராட்சி அபிவிருத்திக்கு சரவணபவன் எம்.பி. நிதி

வடமராட்சி, செப். 11

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள் , விளையாட்டுக் கழகங்களின் அபிவிருத்திக்கு என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் யாழ். மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் 9 இலட்சத்து 85 ஆயிரத்து 200 ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு 6 லட்சத்து 75 ஆயிரத்து 200 ரூபாவும்; கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம்ரூபாவும், மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவுக்கு 60 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. (ச-8)

## பருத்தித்துறை சுகாதாரப் பிரிவில் ஆறு டெங்கு நோயாளர்கள்

### வாரம் ஒரு தடவை புகையூட்டல்

வடமராட்சி, செப்.11

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த மாதம் 6 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

புலோலி தெற்கு, புற்றளைப் பகுதியில் ஐவரும், கூவில் பகுதியில் ஒருவருமே டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



இவர்கள் அனைவரும் கொழும்பிலிருந்து வந்தவர்களாவர் என்று கூறப்படுகின்றது.

இவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதுடன் புற்றளை, கூவில் பகுதியில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை, பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வளவில் டெங்கு குடம்பிகள் உற்பத்தியாகாமல் தடுக்கும் நோக்குடன் வாரம் ஒரு தடவை வைத்தியசாலை வளவு முழுவதும் புகையூட்டப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-8)


## அகலிப்பு நிறைவடைந்த பாதைகளில் வீதிக் கடவைகள்

வடமராட்சி, செப். 11

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வீதி அகலிப்புப் பணிகள் நிறைவடைந்த பாதையில் வீதிக் கடவைகள் மற்றும் போக்குவரத்துக்கான சமிக்ஞைகள் கொண்ட மஞ்சள் கோடுகள் வரையப்பட்டுள்ளன.

இந்தப் பிரதான வீதியில் நெல்லியடி தொடக்கம் கட்டப்பிராய் வரையான வீதியிலேயே மஞ்சள் கோடுகள் வரையும் பணி வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அகலிப்புப் பணி நிறைவடையாத பருத்தித்துறை தொடக்கம் நெல்லியடிவரை கல்வியங்காடு தொடக்கம் யாழ்ப்பாணம் வரையான வீதியில் மஞ்சள் கோடுகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை வரையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-8)



## அஞ்சல் தினத்தையொட்டி விழிப்புணர்வு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.11

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

சர்வதேச அஞ்சல் தினம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளதால் அதனை முன்னிட்டு யாழ்.பிரதம தபாலகம் விழிப்புணர்வு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்துள்ளது.




இதில் சகல தபாலகங்களிலும் சிரமதான நடவடிக்கைகளும், அஞ்சல் பெட்டிகளுக்கு வர்ணம் தீட்டுதல் உட்பட உத்தியோகத்தர்களுக்கு இடையே போட்டிகளும் நடத்தப்படவுள்ளன. அத்துடன் அன்றைய தினம் உத்தியோகத்தர்கள். ஊழியர்களால் இரத்ததானம் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும். (வ-14-17)

## உடுத்துறை மகா வித்தியாலயத்துக்கு காவலாளியை உடன் நியமியுங்கள்

### கோருகின்றனர் பெற்றோர்

வடமராட்சி, செப். 11

உடுத்துறை மகாவித்தியாலயத்துக்கு காவலாளி ஒருவரை நியமிக்குமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கில் மூலாதாரப் பாடசாலையாக உள்வாங்கப்பட்டு ஏபி தரத்துக்கு தரமுயர்த்தப்பட்ட குறித்த பாடசாலைக்கு கல்வி அபிவிருத்தி நிறுவனம் மற்றும் கல்வி அமைச்சினால் பல்வேறு பௌதிக வளங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆண்கள், பெண்கள், ஆசிரியர்களுக்கான விடுதிகளைக் கொண்ட இந்தப் பாடசாலையையும், அதன் பௌதிக வளங்களையும் பாதுகாக்க காவலாளி ஒருவர் அவசியமாகும். அதனால் இந்தப் பாடசாலைக்கு காவலாளி ஒருவரை உடன் நியமித்து பாடசாலையைப் பாதுகாக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பெற்றோர் கல்வித் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் 11/09/2013

# அரசின் உத்தரவாத விலையில் நெல்லை விற்க முடியாதநிலை

## வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்வதால் அம்பாறை விவசாயிகள் பெரும் சிரமம்



அம்பாறை, செப்.11

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மல்வத்தை மற்றும் அதனை அண்டிய பிரதேச விவசாயிகள் தமது சிறுபோக அறுவடை நெல்லை அரச உத்தரவாத விலையில் விற்பனை செய்ய முடியாது திண்டாட்ட நிலைக்குள்ளாகியுள்ளனர்.

மல்வத்தை, மல்லிகைத்தீவு, வளத்தாப்பிட்டி, மஜீத்புரம் முதலான பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகளே தமது சிறுபோக அறுவடை நெல்லை விற்பனை செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தமது இக்கட்டான நிலைமை குறித்து பிரதேச விவசாயிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரும், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளருமான செல்லையா இராசையாவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

இதனையடுத்து மல்வத்தை மற்றும் அயல் பிரதேச விவசாயிகள் தமது சிறுபோக நெல்லை நெற்சந்தைப்படுத்தும் சபை மூலம் உத்தரவாத விலையில் விற்பனை செய்ய முடியாது திண்டாடும் நிலையை தவிசாளர் இராசையா, அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.விமலநாதனின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

மேலதிக அரச அதிபர் விமலநாதனை அவரது அலுவலகத்தில் சந்தித்த அவர், ஏற்கனவே அம்பாறையிலுள்ள நெற் சந்தைப்படுத்தும் சபை களஞ்சிய நிலையத்தில் குறித்த விவசாயிகள் நெல்லை விற்பனை செய்யும் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்த முறை சிறுபோக நெல்லை சம்மாந்துறை களஞ்சியத்திற்கு எடுத்துச் சென்றே விற்பனை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதனால் கூடிய தூரம் சம்மாந்துறைக்கு எடுத்துச் செல்வது மட்டுமன்றி பல நாள்கள் வரிசையில் காத்திருந்து அவலத்துக்குள்ளாகும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

அதனால் வழக்கம்போல் அம்பாறை களஞ்சியத்தில் நெல்லை விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட வேண்டும். அல்லது நெற்சந்தைப்படுத்தும் சபையின் நடமாடும் நெல் கொள்வனவு நிலைய வசதியை மல்வத்தைப் பிரதேசத்தில் ஏற்படுத்த ஆவன செய்யுமாறும் மேலதிக அரச அதிபரிடம் அவர் வலியுறுத்தினார்.

இந்த விடயம் தொடர்பாக அரச அதிபரின் கவனத்துக்கும் கொண்டு வந்து தாம் நடவடிக்கை எடுப்பதாக மேலதிக அரச அதிபர் விமலநாதன், தவிசாளர் இராசையாவிடம் உறுதியளித்தார். (ச-30)

> இந்த முறை சிறுபோக நெல்லை சம்மாந்துறை களஞ்சியத்திற்கு எடுத்துச் சென்றே விற்பனை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ஒலுவில் கடற்கரையில் அதிகளவான மீன்கள்

## மகிழ்ச்சியில் மீனவர்கள்




அம்பாறை,செப்.11

அம்பாறை, ஒலுவில் துறைமுகத்தை அண்டிய கடற்பிரதேசத்தில் திங்கட்கிழமை மாலை அதிகளவான மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன.

கருங்கண்ணி ,வெண் பாறை வகை மீன்களே அதிகம் பிடிபட்டுள்ளன. சுமார் நான்கு மாத கால இடைவெளிக்குப் பின்னர் இவ்வாறு அதிகளவான மீன்கள் கரைவலை மூலம் பிடிக்கப்பட்டுள்ளன என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

ஒலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருடைய கரைவலையிலிருந்து ஒரு கிலோ எடையுடைய சுமார் 1,000 மீன்கள் பிடிபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பின் தங்கிய பாடசாலைக்கு தண்ணீர்த்தாங்கி அன்பளிப்பு



மட்டக்களப்பு,செப்.11

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயப் பிரிவிலுள்ள ஆயித்தியமலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு குடிதண்ணீர் தாங்கி அன்பளிப்புச் செய்யும் வைபவம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

கஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்தப் பாடசாலையைச் சேர்ந்த 240 மாணவர்களும் 14 ஆசிரியர்களும் நீண்ட காலமாக குடிதண்ணீரின்றி மிகுந்த சிரமத்தை எதிர்கொண்டு வந்தனர்.

அதனை நிவர்த்திக்கும் விதமாக அக்ஸஸ் எனப்படும் பொறியியல் நிர்மாண நிறுவனத்திடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து அந்த நிறுவனம், 2 ஆயிரம் லீற்றர் கொள்ளவுள்ள குடிதண்ணீருக்கான தாங்கியை அன்பளிப்புச் செய்தது.

இந்தப் பாடசாலைக்குத் தேவையான குடிதண்ணீரை வாரத்தில் இரு தடவைகள் இலவசமாக வழங்குவதற்கு ஆயித்தியமலைப் பொலிஸாரும், மண்முனை மேற்குப் பிரதேச சபையினரும் இணக்கம் தெரிவித்துள்ளதாக பாடசாலை ஆசிரியர் ரீ. செல்வகுமார் தெரிவித்தார். (ச)

# சிகரெட், கஞ்சா வைத்திருந்த 4 பேர் கைது



அம்பாறை,செப்.11

அம்பாறை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் சட்டவிரோத சிகரெட்டுக்களையும் கஞ்சாவையும் வைத்திருந்ததாகக் கூறப்படும் 4 பேரை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஒலுவில், கடற்கரை வீதியில் கஞ்சா வைத்திருந்ததாகக் கூறப்படும் ஒருவரையும், அட்டாளைச்சேனை, 8 ஆம் பிரிவில் சட்டவிரோத 22 சிகரெட்டுக்களை வைத்திருந்ததாகக் கூறப்படும் வர்த்தகர் ஒருவரையும்; ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை அட்டாளைச்சேனை பிர தேசத்தில் 10 கிராம் கஞ்சாவை வைத்திருந்ததாகக் கூறப்படும் ஒருவரையும், ஒலுவில் பிரதேசத்தில் சட்டவிரோத சிகரெட்டுக்களை வைத்திருந்ததாகக் கூறப்படும் ஒருவரையும் சனிக்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.(ச)

# இலுப்படிச்சேனையில் நெல் களஞ்சியசாலை

மட்டக்களப்பு,செப்.11

மட்டக்களப்பு,ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இலுப்படிச்சேனையில் நெல்கொள்வனவு களஞ்சியசாலையொன்று நிர்மாணிக்கப் பட்டு வருகின்றது.

சுமார் ஒரு கோடி தொண்ணூறு லட்சம் ரூபா செலவில் இந்த அரச நெல் கொள்வனவு களஞ்சிய சாலை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

பிரதேச விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்வதும் அதனைக் களஞ்சியப்படுத்தல் போன்ற செயற்பாடுகளும் புதிய நெல் கொள்வனவு களஞ்சிய சாலையில் ஆரம்பிக்கப்படும் என்று ஏறாவூர்ப்பற்று, செங்கலடி பதில் பிரதேச செயலர் நவரூபரஞ்சனி முகுந்தன் தெரிவித்தார்.

இந்தப் பிரதேச விவசாயிகளின் நீண்டகாலத் தேவையாக இருந்த இந்த நெல் கொள்வனவு களஞ்சியசாலை கட்டட வசதி தமக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதம் என்று மக்கள் கூறுகின்றனர்.(ச)

# வர்த்தகரின் வீட்டில் பொருள்கள் திருட்டு

அம்பாறை,செப்.11

அம்பாறை,கல்முனை பிரதேச வர்த்தகரொருவரின் வீட்டில் சுமார் நான்கரை கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிகாலை திருடப்பட்டுள்ளன.

கல்முனைக்குடி , 08ஆம் பிரிவிலுள்ள வர்த்தகரின் வீட்டில் இருந்து பணம், நகை, உட்பட பல பொருள்கள் உள்ளடங்கலாக சுமார் நான்கரை கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

குடும்பத்தினர் உறக்கத்தில் இருந்த வேளை வீட்டினுள் நுழைந்த திருடர்கள் வீட்டு அலுமாரியை உடைத்து பல பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து கல்முனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-10)



மழையுடன் வீசிய சூறைக்காற்றால் பாதிக்கப்பட்ட கரடியனாறு கிளினிக் நிலையத்தை சிரமதானத்தின் மூலம் மக்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

# சட்டவிரோதமாக மதுபானம் விற்ற பெண் மாட்டினார்



மட்டக்களப்பு,செப்.11

சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் பெண்ணொருவரை கல்முனை பொலிஸார் திங்கட்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.

ஏற்கெனவே 45 மதுப் போத்தல்களை விற்பனைக்காக தன் வசம் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் குறித்த பெண் கைது செய்யப்பட்டதுடன் அவருக்கு எதிராக வழக்கும் இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறான நிலையில் சட்டவிரோதமாக மதுபானம் விற்ற குற்றத்துக் ாக திங்கட்கிழமை அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தப் பெண் தனது வாடிக்கையாளர் ஒருவருக்கு மதுபானத்தை விற்றுக் கொண்டிருந்தபோது திடீரென சுற்றி வளைத்த பொலிஸார் அந்தப் பெண்ணை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 24,500 பேர் விதவைகள்

## ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு



மட்டக்களப்பு,செப்.11

இலங்கையில் ஆகக் கூடுதலான விதவைகளைக் கொண்ட மாவட்டம் மட்டக்களப்பு. கடந்த காலப் போராலும்,இயற்கை இடர்களினாலும் 24,500 பேர் விதவைகளாக வாழ்விழந்துள்ளனர் என்று பொருளாதார பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

விதவைகளுக்கு விமோசனம் அளிக்கும் திட்டத்துக்காக இந்திய அரசு எமக்கு சுமார் 100 மில்லியன் ரூபாவைத் தந்துதவியது. அந்த உதவியினூடாக மட்டக்களப்பில் போரால் பாதிக்கப்பட்டு கணவன்மாரை இழந்த 40 வயதுக்குட்பட்ட சுமார் 800 விதவைகளுக்கு வாழ்வழிக்கின்ற பணியை நாம் ஆரம்பித்திருக்கின்றோம். எனினும் அவை பெரிய முதலீடுகள் அல்ல.

இப்பொழுது நான் பொறுப்பு வகிக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பொருளாதார வளத்தைத் தேடிக் கொள்ளக் கூடிய மிகப் பெரும் திட்டங்களை ஆரம்பித்திருக்கின்றோம். சுயதொழிலை ஆரம்பிப்பதாக இருந்தால் தொழில்நுட்ப உதவியோடு ஏனைய தேவையான அத்தனை வசதிகளையும் செய்து தர என்னுடைய அமைச்சு தயாராக உள்ளது.

[illegible] தேசத் [illegible] நிகழ்ச்சித் திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்குத்தான் அதிகளவில் நிதி வழங்கப்பட்டது. மட்டக்களப்புக்குக் கிடைத்த நிதியில் அரைவாசிகூட ஏனைய மாவட்டங்களுக்குக் கிடைக்கவில்லை.

மட்டக்களப்பில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் பிரச்சினைகளை எவ்வாறெல்லாம் தீர்க்க முடியுமோ அதற்காக நான் எனது அமைச்சினூடாக இரவு பகலாகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றேன்.-என்றார். (ச)

> கணவன்மாரை இழந்த 40 வயதுக்குட்பட்ட சுமார் 800 விதவைகளுக்கு வாழ்வழிக்கின்ற பணியை நாம் ஆரம்பித்திருக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாத் தொடரில் அரசுக்கு காத்திருக்கிறது கடும் அழுத்தம்

## எச்சரிக்கிறது ஐக்கிய தேசியக்கட்சி

கொழும்பு,செப்.11

'ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள ஐ.நா. மனித உரிமைக் கூட்டத் தொடரில் அரசுக்கு எதிராகக் கடும் அழுத்தங்கள் ஏற்படப் போகின்றன. இதற்கு அரசும் அமைச்சர்களுமே காரணம்.'

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தவிசாளரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான கே.வேலாயுதம்.

இனவாதத்தைத் தூண்டி விட்டு மக்களைக் கூறுபோடுவதற்கு முயற்சிக்கும் இந்த அரசுக்கு வாக்குரிமை என்ற ஆயுதத்தின் மூலம் மக்கள் தக்கபதிலடி வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்க்கிழமை இராஜகிரியவிலுள்ள அதன் தொழிற்சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னியில் தமிழ் மக்களை அழிப்பதற்கு முக்கிய காரணமாக இருந்த சரத்பொன்சேகா, தற்போது காணாமல் போனவர்கள் என எவரும் இல்லை என்று உளறுகிறார்.

காணாமற்போனவர்கள் என எவரும் இல்லை என்றால் அவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி ஏன் ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும்? காணாமல் போன சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதால்தானே அது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு அரசு குழு நியமித்துள்ளது.

தமிழர்களும்,முஸ்லிம்களும் இந்த நாட்டின் இரண்டாம் தரப் பிரஜைகள் எனக் கூறிய சரத் பொன்சேகாவுக்கு உண்மை என்னவென்று புரியாதது புரி யாத புதிராகவே இருக்கின்றது. உண்மையை மூடி மறைக்க எவரும் முயற்சிக்கக் கூடாது. இவர்களின் முகத்திரை விரைவில் கிழிபடும்.

நுவரெலியாவில் நடைபெற்ற அரசின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின்போது தேர்தல் சட்டவிதிகள் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன. அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளன.

பொது மக்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கி அவர்களைக் கூட்டத்திற்கு அழைத்துச் செல்கின்றனர். இது ஒரு வகையில் லஞ்சமாகக் கருதப்பட வேண்டியது அரசு தரப்பினர் இவ்வாறான பிழைகளைச் செய்து வருகின்றார்கள்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ளது.

நவநீதம்பிள்ளையை அன்போடு வரவேற்றவர்கள், நவநீதம்பிள்ளை சென்றதும் அவரது செயற்பாடுகள் குறித்து வசைபாடி வருகின்றனர்.

சர்வதேச அழுத்தங்களுக்கு அரசினதும் அதன் அமைச்சர்களினதும் தூரநோக்கற்ற செயல்களே காரணமாகும்.

எனவே, நடைபெறும் மாநாட்டில் இலங்கை அரசுக் கெதிராக பல அழுத்தங்கள் ஏற்படப்போகின்றன.- என்றார். (ச-சி)

### நாணயங்களை வைத்திருந்த கொரிய நபர் கைது



கொழும்பு,செப்.11

பெருமளவான வெளிநாட்டு நாணயங்களை வைத்திருந்த கொரிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேகநபர் சுற்றுலா விசாவில் வெள்ளிக்கிழமை இலங்கை வந்துள்ளார். குறித்த நபர் ஞாயிற்றுக்கிழமை இரவு சென்னைக்கு புறப்படத்தயாராகி இருந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, தங்க பிஸ்கட்களுடன் இந்தியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள சுங்க அதிகாரிகளினாலேயே அவர் சென்னைக்கு புறப்படும் போது கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

### சி.ஐ.ஏ. உளவுப் பிரிவு இலங்கை வருகை

கொழும்பு,செப்.11

சர்வதேச போதைப்பொருள் கடத்தல் குறித்து விசாரணை நடத்த அமெரிக்காவின் சி.ஐ.ஏ. உளவுப் பிரிவு இந்த வாரம் இலங்கைக்கு பயணம் செய்யவுள்ளது.

அண்மையில் கொள்கலன் ஒன்றில் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

பிரபல தாதாக்களில் ஒருவரான தாவூத் இப்ராஹிமினது நிறுவனத்தால் பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்குப் போதைப் பொருள் அனுப்பி வைக்கப்பட்டது. போதைப் பொருள் கடத்தல் சம்பவம் குறித்து சி.ஐ.ஏ. உளவுப் பிரிவு ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கையில் இது தொடர்பில் விசாரணை நடத்தும் பொலிஸ் அதிகாரிகளையும் சி.ஐ.ஏ. அதிகாரிகள் சந்திக்கவுள்ளனர்.

பாகிஸ்தான் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளும் இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளனர்.

### 18 வயதுக்கு மேற்பட்டோரை விலக்குவதற்கு இடைக்காலத் தடை

கொழும்பு,செப்.11

களுத்துறை பிரின்சஸ் கிறிஸ் அநாதைகள் சிறுவர் இல்லத்திலிருக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளை அந்த இல்லத்திலிருந்து விலக்குவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடைவிதித்துள்ளது.

அந்த இல்லத்திலிருக்கும் 18 வயதிற்கும் மேற்பட்டோரை விலக்குமாறு களுத்துறை நீதிவான் நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட உத்தரவை உடனடியாக ரத்துசெய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த சிறுவர் இல்லத்தில் இருக்கின்ற இரண்டு பிள்ளைகள் தாக்கல் செய்த மனுவை ஆராய்ந்த போதே மேன்முறையீட்டு நீதிமன்றம் இவ்வாறு திங்கட்கிழமை இடைக்காலத் தடையை விதித்துள்ளது. (ச)



சீனாவின் பிரதிப் பிரதமரும் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியஸ்தர்கள் சபையின் அங்கத்தவருமான லியூ யுங்ஷான் திங்கட்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினார். (ச)

### ஆதிகால மனிதர்களின் கற்சிலை கண்டுபிடிப்பு

ஹப்புத்தளை,செப்.11

ஹல்துமுல்ல பகுதியில் ஆதி மனிதர்களால் உருவாக்கப்பட்ட கற்சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிலை கிரிமெட்டிய, நிதன்கலமலையில் உருவாக்கப்பட்டுள்ளது.

களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்பொருள்துறை பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின்போது இந்தச் சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இயற்கையாக அமையப்பெற்ற கற்பாறையொன்றின் தோற்றத்தைப் பயன்படுத்தி இந்த சிலை உருவாக்கப்பட்டுள்ளது என்று பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்தார். (ச)

### பாடசாலை மாணவர்கள் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துவதற்கு தடை

கொழும்பு,செப்.11

பாடசாலை மாணவர்கள் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதைத் தடைசெய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரையை கல்வி விவகாரம் குறித்த விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு செய்துள்ளது.

பாடசாலை வகுப்பறைகளில் பயன்படுத்தக் கூடிய தொழில்நுட்பக் கருவிகளைத் தவிர்ந்த ஏனைய, தொழில்நுட்ப சாதனங்கள் பாடசாலைக்குள் எடுத்துச் செல்லக் கூடாது. இவ்வாறு அதிநவீன தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்துவதன் மூலம் மாணவர்களின் குணவியல்புகள் பாதிக்கப்படுகின்றன.

இந்த விடயம் குறித்து பெற்றோரும் ஆசிரியர்களும் கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

> ” தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்துவதன் மூலம் மாணவர்களின் குணவியல்புகள் பாதிக்கப்படுகின்றன.



### சிறு வயதுத் திருமணங்கள் இலங்கையில் அதிகரிப்பு

#### யுனிசெப்பின் ஆய்வில் தகவல்

கொழும்பு,செப்.11

இலங்கையில் சிறுவயது திருமணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன என்று யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

போதிய அறிவின்மை, குடும்பப் பொருளாதார சூழல் போன்றவையே இதற்கான காரணங்கள் என்று யுனிசெப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரீசா ஹொஸைனி தெரிவித்தார்.

சிறுவயதில் திருமணம் முடித்த 71 பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வொன்றில் அவர்களில் 30 வீதமானவர்கள் 18 வயதுக்கு முன்னதாகவே கர்ப்பம் தரித்துள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

சிறுவயதுத் திருமணங்களால் மன உளைச்சல், சுகாதாரச் சீர்கேடு மற்றும் சிசு உயிரிழப்புகள் போன்றன அதிகரிப்பது மட்டுமன்றி, அவர்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகரிக்கும் என்று இலங்கைக்கான யுனிசெப் வதிவிடப் பிரதிநிதி சுட்டிக்காட்டுகிறார்.



யுனிசெப்பின் ஆய்வு, மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று, ஏறாவூர்பற்று ஆகிய பிரதேச செயலக நிர்வாகப் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பாடசாலை மாணவர்கள் இடைவிலகல் அதிகமாகக் காணப்படும் பிரதேசங்களிலே சிறுவயது திருமணங்களும் அதிகம் காணப்படுகின்றன என்று யுனிசெப் தெரிவித்துள்ளது.

தமது பிரதேசத்தில் பாடசாலை இடைவிலகலுக்கும் சிறுவயது திருமணங்களுக்கும் தொடர்புகள் உள்ளன என்று குறித்த பிரதேச செயலக அதிகாரிகளும் ஏற்றுக் கொள்கின்றனர். (ச)

### தேர்தலில் அரச உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் கண்காணிப்பு

#### மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானம்

கொழும்பு,செப்.11

மாகாண சபைத் தேர்தலில் அரச உத்தியோகத்தர்கள் செயற்படும் விதம் தொடர்பில் கண்காணிப்பதென் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அரச உத்தியோகத்தர்கள் பக்கச்சார்பின்றி தேர்தல் சட்டத்தை நடைமு றைப்படுத்த வேண்டியது அவசியம் என்று ஆணைக்குழுவின் சட்டப் பிரிவு செயலர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

[illegible] முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்கின்றனரா? என்பது தொடர்பிலும் ஆராயப்படும் என்று அவர் தெரிவித்தார்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத் [illegible] வழக்கை மேற்கொள்ள வேண்டிய பொலிஸார் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் காலத்தில் பொலிஸார் செயற்பட வேண்டிய விதம் தொடர்பிலான ஆலோசனைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்கனவே வழங்கியுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலுக்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் 65 வீதம் பூர்த்தியடைந்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கு மாகாணசபைத் தேர்தலும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும்

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவது குறித்து ஆராய்வதற்கென அரசினால் உருவாக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இருந்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க வெளிநடப்புச் செய்திருக்கிறார். இவர் ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் தெரிவுக் குழுவுக்கு நியமிக்கப்பட்ட ஒரே ஒரு உறுப்பினர் என்பது தெரிந்ததே. அந்தக் கட்சியின் செயலாளரும் அவரே.

மாகாண சபைத் தேர்தலுக்கு-குறிப்பாக வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு-முன்னதாக 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள ஐந்து அதிகாரங்களை அகற்றுமாறு, ஹெல உறுமய கட்சி அரசிடம் வலியுறுத்தி இருந்தது. அதனை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் அரசு வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவது ஹெல உறுமயவுக்குப் பெரும் சீற்றத்தை உண்டாக்கி உள்ளது.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் உள்ள பிரிவினைக்கு வகை செய்யும், வழிவிடும் சரத்துக்களை அரசு அகற் றினால் மட்டுமே தெரிவுக்குழுக் கூட்டத்தில் தமது கட்சி பங்குபற்றும் என்று ஜாதிக ஹெல உறுமய முன்னரே அறிவித்திருந்தது. ஆனால் அதனை நடைமுறைப்படுத்தாமல் தெரிவுக் குழு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கூட்டப்பட்டது.

அமைச்சர் நிமால் சிறிபாலா டி சில்வா தலைமையில் அமைக்கப்பட்ட தெரிவுக் குழுவில் பத்தொன்பது பேர் அங்கம் வகித்தாலும் நாடாளுமன்றின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ் மக்களின் முதன்மைசார் அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஜனதா விமுக்தி பெரமுனவும் அதனைப் பகிஷ்கரித்துள்ளன. மொத்தத்தில் அரசின் அங்கத்துவக் கட்சிகளே தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க-அவர் சார்ந்த ஜாதிக ஹெல உறுமய-தெரிவுக் குழுவில் இருந்து விலகியமைக்கு உள்ளார்ந்த காரணங்கள் உண்டு எனக் கொள்ளலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரிவினைவாதம் மற்றும் ஈழம் நிலைப்பாட்டுக்கு முதன்மைத் துவமும் முக்கியத்துவமும் கொடுத்துள்ளது என்ற கருத்தைப் பரப்பி, வடக்கு மாகாண சபைத் தேர்தலை நிறுத்துவதற்கான ஓர் உத்தி என இதனைக் கொள்ளலாம்.

மீண்டும் ஒரு போருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறைகூவல் விடுத்துள்ளது. மீண்டும் தமிழ் மக்களை நந்திக் கடலுக்கு அழைத்துச் செல்லப் பார்க்கிறது-

ஆகையால் பிரிவினைவாதத்துக்கு எதிரான சிங்கள மக்களும், போர்க் காலத்தில் தீவிரவாதத்தை எதிர்த்த அமைப்புகளும், இராணுவத்தினரும் உடனடியாக உஷார் அடைய வேண்டும்-என்று இனவாதத்தைக் கக்கி உள்ளார் அமைச்சர் சம்பிக்க.

வடக்கைத் தனிநாடாக மாற்ற வேண்டும். புலிகள் இயக்கம் ஒரு விடுதலை அமைப்பு. போரில் எழுபதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் நிராயுதபாணிகளாக இறந்தனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அனைத்துலகத்தினருக்குப் பொய்களைக் கூறுகின்றனர்-என்றும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

கூட்டமைப்பினர் வெளியிட்டுள்ள விஞ்ஞாபனத்தில் நாட்டின் சமாதானத்துக்கும் அபிவிருத்திக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவற்றை ஊகித்தே நாம் மாகாண சபை முறையை எதிர்த்தோம்-என்றும் அவர் சாடியுள்ளார்.

மொத்தத்தில், வடக்கு மாகாண சபைத் தேர்தலை எந்த வகையிலேனும், எதனைக் கூறியேனும் நிறுத்துவதற்கு அரசாங்கத்தை-ஜனாதிபதியைத் தூண்டும்-உள்நோக்கத்தைக் கொண்டது என்பதனையே, தெரிவுக் குழுவில் இருந்து ஜாதிக ஹெல உறுமய தற்போது வெளியேறியமையும் அதன் தொடர்பில் ஊடகவியலாளர் மாநாடு நடத்தியமையும் புலப்படுத்துகிறது.

அரசாங்கம் அதிகாரங்கள் மிக்கது என்பதனால், அதனைத் தமது நிலைப்பாட்டுக்கு இழுத்து வருவதற்கு, தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிப்பதனை ஒரு கருவியாக ஜாதிக ஹெல உறுமய பயன்படுத்த முனைந்துள்ளதை அப்பட்டமாக வெளிப்படுத்தி உள்ளது அந்தக் கட்சி.

அரசாங்கத்துக்கும் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முழு விருப்பமும் இருந்ததில்லை. அதனைத் தள்ளி வைத்து மாகாண சபைகளுக்கு உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை கபளீகரம் செய்ததன் பிற்பாடு, வேண்டுமானால் தேர்தலை நடத்துவதே அதன் உள்ளார்ந்த நோக்கமாக இருந்தது. அனைத்துலக நாடுகள் தனது அந்த யுக்தியை சிவந்த கண்களுடன் பார்ப்பதனை உள்ளூர அறிந்தும் தெரிந்தும் கொண்டே, தேர்தலை நடத்துவதற்குக் கால்களைப் பின்னிப் பின்னி முன் நடந்து கொண்டே வடக்குத் தேர்தல் குறித்து அறிவித்தது.

இப்போது அந்தப் பொறுப்பை, கைங்கரியத்தை எப்போதுமே தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் விடயங்களில் சன்னதம் ஆடும் ஹெல உறுமயவிடம் கைமாற்றி இருக்கலாம். அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை மாற்றுவதற்கு குறித்த தெரிவுக்குழு தகுந்த மேடை, களம் என்று அரசும் அதன் தலைவர்களும் கண்டுபிடித்திருக்கக் கூடும். இரகசியம் எப்போதோ ஒரு நாள் பரகசியமாவது தவிர்க்க இயலாத ஒன்றல்லவா?

# பொதுநலவாய மாநாடு; தீவிரமடையும் எதிர்ப்பலைகள்

● செந்தூரன்

தமிழரின் குருதி தோய்ந்த இலங்கைத் தீவில் எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி பொது நலவாய நாடுகளின் தலை வர்கள் மாநாட்டை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.இலங்கை அரசு - கடந்த 2009 ஆம் ஆண்டில் இடம் பெற்ற இறுதிக்கட்டப் போரில் ஒன்றரை இலட் சம் தமிழர்களைக் கொன்று குவித்தது. இப்பொழுது தன் மீது படிந்து கிடக்கும் அழிக்க முடியாத இரத்தக் கறையைத் துடைப்பதற்கான ஏற்பாடாகவே பொது நலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தத் திட்டமிட்டு வருகின்றது. தமிழர் பாதுகாப்பு இயக்கமும், தமிழீழத்திற்கான மாணவர் போராட்டக் குழுவும் இணைந்து, இலங்கை அரசு பொதுநலவாய மாநாட்டை நடத்த அனுமதிக்கக்கூடாது என்ற முழக்கத்தோடு செப்டம்பர் 7 ஆம் திகதியன்று சென்னையில் பன்னாட்டு இளைஞர் மாநாட்டை நடத்தின. இம் மாநாட்டில் பல்வேறு மாணவர் இயக் கங்களைச் சேர்ந்த மாணவர்களும் இளைஞர்களும் அரசியல் தலைவர்களும் எழுத்தாளர்களும் தமிழ் உணர்வாளர்களும் கலந்து கொண்டு மாநாட்டு கோரிக்கைகளுக்கு வலுச் சேர்த்தனர்.

தமிழினப் படுகொலை நடந்த இலங்கை மண்ணில் பொதுநலவாய மாநாட்டை நடத்தக் கூடாது எனவும், அப்படி மீறி நடைபெற்றால் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு அது எத்தகைய பின்னடைவை ஏற்படுத்தும் என்பதை விளக்கியும், இலங்கையில் நடக்கும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்கேற்கக் கூடாது என்பதை வலியுறுத்தியும் தமது கருத்துகளைப் பதிவு செய்தனர். மாநாட்டில் பங்கேற்ற அனைத்து அரசியல் தலைவர்களும், மாணவப் போராட்டங்களின் முக்கியத் துவம் குறித்துப் பேசினர்.

சிங்கள அரசின் இனப்படுகொலையை ஆதரித்து ஈழத் தமிழர்களின் அரசியல் வேட்கையை அழிக்கத் துடிக்கும் இந்திய அரசைக் கண்டிக்கும் முகமாகவும், அதைத் தடுத்து நிறுத்த ஈழப் போராட்டத்தில் களம் இறங்கியுள்ள, உலகெங்கும் பரவி வாழும் தமிழ் இளைஞர்கள் ஒன்றிணைந்து நிற்கின்றோம் என்பதை இந்திய அரசுக்கு எடுத்துச் சொல்வதே இந்த மாநாட்டின் நோக்கமாக இருந்தது.

இம்மாநாட்டில் 700 க்கும் மேற்பட்ட மாணவர்களும் நூற்றுக்கணக்கான இளைஞர்களும் தமிழ் உணர்வாளர்களும் பங்கேற்றனர். 2013 மார்ச் மாதம் சுடர்விடத் தொடங்கிய மாணவப் போராட்டங்களின் பேரெழுச்சியின் தொடர் நிகழ்வாக இம்மாநாடு அமைந்திருந்தது. இந்த மாநாட்டின் தொடர்ச்சியாக இலங்கைப் புறக்கணிப்பு கோரிக்கையை வலியுறுத்தி இன்னும் பல்வேறு வடிவங்களில் உலகெங்கும் பரவி வாழும் தமிழ் மாணவர்களும் இளை ஞர்களும் இப்போராட்டங்களை முன்னெடுப்போம் என்று உறுதி பூண்டனர்.

### மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

இலங்கை அரசு, ஒன்றரை இலட்சம் தமிழர்களைக் கொன்று குவித்த சிங்கள இனவெறி அரசு, போருக்குப் பின்னாலும்,தமிழர் வாழ்விடங்களில் இலட்சக்கணக்கான சிங்கள இராணுவத்தினரை நிறுத்தி வைத்திருக்கும் இராணுவ சர்வாதிகார அரசு; தமிழர்களின் இந்து , இஸ்லாமிய,கிறிஸ்தவ மத அடையாளங்களை அழித்த பௌத்த மதவெறி அரசு; தமிழர்களின் தாயகப் பகுதியான வடகிழக்கை சிங்களமயமாக்கும் நோக்கத்தில் வேகமாக சிங்களவர்களைக் குடியேற்றிவரும் இனவழிப்பு அரசு; இலங்கை அரசின் இந்த இனக்கொலைக் குற்றங்களை மூடி மறைக்கவே பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை கொழும்பில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று இம்மாநாடு கருதுகின்றது. பாதிக்கப்பட்டத் தமிழர்களுக்காக நீதியின் பக்கம் நிற்காமல், இலங்கையில் இம்மாநாட்டினை நடத்த முன்னின்று ஏற்பாடு செய்து, இந்திய அரசு மீண்டும் ஒருமுறை தமிழர்களுக்கு துரோகம் செய்துள்ளது. இது மிகுந்த வருத்தமளிக்கிறது.

1971-ஆம் ஆண்டின் சிங்கப்பூர் சாற்றுரையில் இனம், நிறம், மதம் , அரசியல் நம்பிக்கைகள் என எவ்வித பாகு பாடுமன்றி அனைவருக்கும் சமநீதி என் பது பொதுநலவாய அமைப்பின் அடிப்படை விழுமியங்களாக ஏற்றுக்கொள் ளப்பட்டுள்ளது. இவையனைத்தையும் இலங்கை அரசு காலில் போட்டு மிதித்துள்ளது. 1961 முதல் 1994 வரை வெள் ளை நிறவெறி பிடித்த தென் ஆப்பிரிக்கா பொதுநலவாய அமைப்பிலிருந்து விலக்கி வைக்கப்பட்டதும், பர்வேஷ் முஷாரப் இராணுவ ஆட்சியின்போது பாகிஸ்தான் இடைநீக்கம் செய்யப்பட்டதும், இப்போதும் கூட இராணுவ ஆட்சியால் ஜனநாயகம் மறுக்கப்படுவதற்காக விலக்கி வைக்கப்பட்டிருப்பதுமான முன்னுதாரணங்கள் இருக்கின்றன.

1) 1971 சிங்கப்பூர் சாற்றுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ள பொதுநலவாய அமைப்பின் அடிப்படை விழுமியங்களைக் காலில் போட்டு மிதித்து கொண்டிருக்கும் சிங்கள பௌத்த பேரினவாத இலங்கையில், பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை நடத்தக்கூடாது என பொதுநலவாய அமைப்பு நாடுகளையும் குறிப்பாக இந்திய அரசையும் இம்மாநாடு கோருகின்றது.

2) ஒன்றரை இலட்சம் தமிழர்களைக் கொன்று குவித்து இன்றும் கட்டமைப்பு ரீதியாகவும், பண்பாட்டுரீதியாகவும் தமிழ் இன அழிப்பை மேற்கொண்டு வரும் இலங்கையை பொதுநலவாய அமைப்பில் இருந்து நீக்க வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகின்றது

3) ஏழு கோடி தமிழ் நாட்டுத் தமிழர்களின் சனநாயக கோரிக்கைகளை ஏற்று, இந்திய அரசு பொதுநலவாய மாநாட்டை கொழும்பிலிருந்து வேறொரு பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் நாட்டின் தலை நகரத்துக்கு மாற்றும்படி கேட்க வேண்டும். இடமாற்றம் இல்லையென்றால் கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் கூட்டத்தை இந்தியா புறக்கணிக்க வேண்டும். கனேடிய பிரதமர் இம்மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாக எடுத்துள்ள முடிவு பாராட்டுக்குரியது. இதைப் போன்று இந்திய பிரதமரும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ள கூடாது என இம்மாநாடு கோருகின்றது.

4) 2008-2009ஆம் ஆண்டு இலங்கைப் போரில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனக் கொலைக் குற்றங்கள் ஆகியன குறித்து சுயாதீன பன்னாட்டு விசாரணை ஒன்றை நிறுவ வலியுறுத்தி பொதுநலவாய அமைப்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

5) இன்றும் இலங்கையில் இராணுவமயமாக்கலாலும், சிங்களமயமாக்கலாலும் இன அழிப்புக்கு உள்ளாக்கப்படும் தமிழர்களைக் காக்கும் பொருட்டு தமிழர்களின் தாயகப்பகுதியான இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கில் சர்வதேச நாடுகளின் கண்காணிப்பில் ஒரு இடைக்கால சிவில் நிர்வாகத்தை நிறுவ சர்வதேச நாடுகள் ஆவன செய்ய வேண்டும் என இம்மாநாடு கோருகின்றது.

6) கடந்த 60 வருடங்களாக சிங்கள பௌத்த பேரினவாத இலங்கை அரசினால் இன அழிப்புக்குள்ளாகப்படும் ஈழத் தமிழர்கள் சனநாயக அடிப்படையில் தங்களுக்கான அரசியல் தீர்வினைத் தேர்ந்தெடுக்கும் வண்ணம் , இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழும் ஈழத் தமிழர்களிடையே ஓர் பொது வாக் கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என இம் மாநாடு கோருகின்றது.




பன்னாட்டு இளைஞர் மாநாட்டில் 700 க்கும் மேற்பட்ட மாணவர்களும் நூற்றுக்கணக்கான இளைஞர்களும் தமிழ் உணர்வா ளர்களும் பங்கேற்றனர். 2013 மார்ச் மாதம் சுடர்விடத் தொடங்கிய மாணவப் போரா்ட்டங்களின் பேரெழுச்சியின் தொடர் நிக்ழ்வாக இம்மாநாடு அமைந்திருந்தது.

7) இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடைபெற்றால், அதில் இந்திய பிரதமர் கலந்து கொள்ளக் கூடாது என வலியுறுத்தி தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்ற தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும்.மேலும், ஏற்கனவே சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான பொருளாதார தடை கோரும் தீர்மானத்தினை தமிழகத்திலும் இந்தியாவிலும் நடைமுறைப்படுத்த தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும் என இம்மாநாடு கோருகின்றது என்பனவே இந்த மாநாட்டில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனக்குத் தானே கொலையாளி



சாமிளா சிவகுமாரன், உளவளப்பிரிவு
யாழ் பிராந்திய சுகாதார சேவைகள்

தற்கொலை என்பது ஒருவர் தன்னைத்தானே கொலை செய்யும் நோக்குடன் மேற்கொள்ளும் நடவடிக்கை ஆகும். பல்வேறுபட்ட காரணிகள் ஒருவரின் தற்கொலை முயற்சிக்குக் காரணமாக உள்ளன. குறிப்பாக, சமூக பொருளாதார மற்றும் மருத்துவக் காரணிகள் அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன. தற்கொலை எமது நாட்டின் இறப்பு வீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் மிக முக்கிய காரணிகளில் ஒன்றாகும்.

**தற்கொலைக்கு இட்டுச்செல்லக்கூடிய ஆபத்தான காரணிகள்**

வேலையின்மை, மது.போதைப் பொருளுக்கு அடிமையாதல், மனச்சோர்வு, பண நெருக்கடி, சமூகத் தால் ஒதுக்கப்படுதல், சமூக ஆதர வற்ற நிலை, சமய நோக்கற்ற நிலை, நம்பிக்கையற்ற தன்மை, அபிவிருத்தியை நோக்கி நகரும் சமூகப் பொருளாதார கலாச்சார மாற்றங்களுக்கேற்ப தமது வாழ்க்கை முறையையும் மாற்றியமைக்க எல்லோரும் ஏதோ ஒருவகையில் முயன்று கொண்டிருக்கிறார்கள். இவ்வாறன சூழ்நிலையில் பலர எதை எவ்வாறு செய்வதென்று தெரியாது மற்றவர்களுடன் போட்டிபோடுவதாக நினைத்துக்கொண்டு தமது வரவுக்குமீறிய கடனைப்பெற்று பின்னர் அதனை மீளச்செலுத்த முடியாமல் கடினப்படுவதும், திட்டமிடப்படாத செலவுகளினால் பண நெருக்கடிகளுக்குள்ளாவதும், வியாபாரத்தில் எதிர்பாராத வீழ்ச்சி நட்டம் ஏற்படுவதால் அதனை தொடாந்து நடத்திசெல்ல முடியாத சூழ்நிலைக்குள் தள்ளப்படுவதும், மற்றும் பணக்கொடுக்கல் வாங்கலில் ஏற்படும் ஏமாற்றங்கள் என்பன இன்றைய சூழ லில் அதிகரித்துவரும் சவாலாக உள்ளன.

இது தவிர ஒருவரது சமூக அந்தஸ்துக்குப் பாதகம்ஏற்படும்வகையில்இடம் பெறும் சம்பவங்கள் உதாரணமாக இளவயதுக் கர்ப்பம், திருமணத்திற்கு முன்னரான கர்ப்பம் , நம்பியவரால் ஏமாற்றப்படுதல், இன்று அதிகரித்து வரும் தற்கொலைகளுக்கு முக்கிய காரணிகளாக இருக்கின்றன.

தற்கொலை என்பது மிக நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஒரு வழி முறையாகவே தற்கொலை எண்ண முடையோரால் பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் ஒன்றுக்குமேற்பட்ட பிரச்சனைகள் ஒரே நேரத்தில் தோன்றி ஒருவரை மன அழுத்தத் திற்குள்ளாக்கும் சூழ்நிலைகளில் அவருக்கான ஆதரவு மற்றும் சரியான வழி காட்டல் கிடைக்காமல் போகும் சந் தார்ப் பங்களிலேயே அவர் தன்னைத் தான் மாய்த்துக் கொள்ளும் முடிவுக் குத் தள்ளப்படுகிறார்.

ஒருவரை மன அழுத்தத்துக்குள்ளாக்கும் சூழ்நிலைகளில் அவருக்கான ஆதரவு மற்றும் சரியான வழிகாட்டல் கிடைக்காமல் போகும் சந்தர்ப்பங்களிலேயே அவர் தன்னைத் தானே மாய்த்துக் கொள்ளும் முடிவுக்குத் தள்ளப்படுகிறார்.

உண்மையிலே தற்கொலை என்பது ஒரு தீர்வு அல்ல. மாறாக மேலும் பல பிரச்சனைகளையே உருவாக்கும் என்பதுதான் உண்மை. ஒருவர் தற்கொலை செய்து கொண்டால் அவருடைய குடும்பத்துக்கு மேலும் துன்பமான சூழ்நிலையே உருவாகும். மேலும் அவர்தான் குடும்பத்தில் பணம் சம்பாதிப்பவராக இருப்பாரானால் அவரது குடும்பம் பெரும் பண நெருக்கடியை எதிரநோக்க வேண்டியிருக்கும். இது தவிர குடும்பத்தினர் ஆறாத மன வடுவுக்குள்ளாவார்கள். இதனால் குடும்பத்தில் உள்ள ஏனையவர்களும் தற்கொலை முயற்சியில் ஈடுபட வாய்ப்புகள் அதிகமாகும்.

எமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாழ்க்கையானது. ஒரு சந்தரப்பமே. அதில் எல்லோரும் நூறு வயதுவரை வாழ்வதில்லை எனவே எமக்குக் கொடுக்கப்பட்ட இவ்வரிய சந்தரப்பத்தை நாமே அழித்துக்கொள்வது எவ்வளவு முட்டாள்தனமான செயல். எல்லோருக்கும் வாழ்க்கையில் தோல்விகளும், இயலாமைகளும் வருவது இயல்பானதே ஆனால் ஒவ்வொருவரும் அவற்றை கையாளும் முறையிலேயே வாழ்வின் வெற்றி தங்கியுள்ளது. எமக்கு இயலாமை ஏற்படுகின்றபோது எமக்கடுத்திருப்பவரின் உதவியை நாடுவதால் நாம் ஒருபோதும் குறைந்துவிடப் போவதில்லை. எமக்கு நெருக்கடியான சூழ்நிலைகளில் ஒருபோதும் மௌனமாக இருக்கக்கூடாது. மாறாக பொருத்தமானவாகளுடன் மனம் விட்டுப் பேசுவதன் மூலமே நாம் தீர்வைப் பெற முடியுமென்பதை புரிந்துகொள்ள வேண்டும். இன்று பல உளவளத் துணையாளாகள் தமது தன்னல மற்ற சேவையைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். எனவே நெருக்கடியான சூழ்நிலைகளிலிருந்து ஆரோக்கியமாக வெளிவருவதற்கு அவர்களை அணுகுவது பொருத்தமானதாக இருக்கும். தற்கொலை எண்ணமுடைய அல்லது தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட ஒருவருக்கு ஆற்றுப்படுத்தல்மற்றும் தேவைப்படின் உளமருத்துவச் சிகிச்சை மிக முக்கியமயனதாகும். தகுந்த சிகிச்சை எடுக்கத் தவறும்பட்சத்தில் விளைவுகள் மோசமானதாகவே இருக்கும். இவ்வாறான எண்ணத் துடன் ஒருவரை அடையாளம் கண்டால் அலட்சியமாக இருந்துவிடக்கூடாது. அவருக்கு ஆதரவான நம் பிக்கை கொடுக்கக்கூடிய வழிகளைக் கண்டறிந்து வழிப்படுத்துவது சமூகத்திலுள்ள ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

# வன்முறை எண்ணம் தோன்ற வானிலை மாற்றமே காரணம்

கே.என். ராமசந்திரன்

அண்மையில், பார்க்லியிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எட்வர்ட் மிகுவல் என்ற விஞ்ஞானியின் தலைமையிலான ஆய்வர் குழு, வளிமண்டல வெப்பநிலை உயர்வு, மனிதர்களின் நரம்பு சார்ந்த உடற் செயலியல் நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்ப டுத்தி, உலகில் போர் நிகழும் வாய்ப்புகளை அதிகமாக்கும்' என்று கூறியுள்ளது

ஆம், வளி மண்டலத்தில் கரியமில வாயு போன்ற வாயுக்கள் நிறைவதால், உலகளாவிய சூழல் வெப்பநிலை அதிகரித்து பல வகையான விபரீத விளைவுகளை உருவாக்கும்.

சாதாரணமாகவே கோடை காலத்தில் வெயில் சுட்டெரிக்கும்போது, அல்லது அலுவலக அறையில் குளிரூட்டி பழுதாகி புழுக்கம் வதைக்கின்றபோது, அல்லது பயணிகள் நிரம்பி வழிகின்ற பஸ் அல்லது ரயில் பெட்டிக்குள் சிக்கிக் கொண்டு மூச்சு விடக்கூட முடியாமல் திணறுகின்றபோது, அல்லது வீதிப் போக்குவரத்து நெரிசலில் மாட்டிக் கொண்டு காரை நகர்த்த முடியாமல் தவிக்கின்றபோது, இதுபோன்ற நேரங்களில், எல்லாருக்குமே நிதானம் தவறி மனதில் எரிச்சலும் கோபமும் பொங்கியெழும். சம்பந்தா சம்பந்தமில்லாமல் எரிந்து விழுவது, கெட்ட வார்த்தைகளால் திட்டுவது, சின்ன விடயத்துக்குக்கூட வரிந்து கட்டிக்கொண்டு மல்லுக்கு நிற்பது, காது கிழியும்படி வாகனங்களின் சப்தம் எழுப்பியை அலற விடுவது போன்றவை அத்தகைய மன நிலை யின் வெளிப்பாடுகள். மிகுவல் குழு வினரின் ஆய்வு முடிவு, பருவ நிலை மாறுபாடுகளால் உலகளாவிய வளி மண்டல வெப்பநிலை உயர்வதற்கும் மனிதர்களின் உடல் நலம் மற்றும் மனநலக் குலைவுகளுக்குமிடையில் ஒரு நேரான இணைப்பு இருப்பதாகக் கூறுகிறது. சூழல் வெப்பநிலை உயரும் போது மனித மனங்களில் வன்முறை எண்ணங்கள் தோன்றுவதும் அதிகமாகிறது. அவ்வாறு ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதை அந்த ஆய்வர்களால் குறிப்பிட்டுச் சுட்டிக் காட்ட முடியவில்லை.

சூழல் வெப்பநிலை உயரும்போது தனி நபர்களின் நரம்பு மண்டலம் சார்ந்த உடலியக்கவியல் நடவடிக்கைகளில் தாக்கமுண்டாவதாக ஆய்வுக் குழுவினர் கருதுகின்றனர்.

இந்த ஆய்வுக் குழு கி.மு. 8000 முதல் உலகின் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்த சண்டை சச்சரவுகளையும் வன்முறைகளையும் ஆராய்ந்து, முக்கியமான பல நூறு வன்முறை சம்பவங்களைப் பகுப்பாய்வு செய்து, பல்லாயிரம் தரவுகளைப் பதிவு செய்துள்ளது. அவற்றுக்கும் பருவ நிலை மாற்றங்களுக்குமிடையில் ஏதாவது நேர் கோட்டுப் பொருத்தம் தென்படுகிறதா என புள்ளியியல் தத்துவங்களின் அடிப்படையில் ஆய்வு செய்திருக்கிறார்கள்.



சில ஆயிரம் வாக்காளர்களிடம் விசாரணை செய்து அடுத்து எந்தக் கட்சி ஆட்சி அமைக்கும் என்று அறிவிப்பதைப் போன்ற செயல்முறைதான் இது. எனினும் இதை அறிவியல் அங்கீகரிக்கிறது. பெரும்பாலான சமயங்களில் அத்தகைய சோதிடங்கள் பலித்தும் விடுகின்றன.

2050-ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய வளிமண்டல வெப்ப நிலையில் இரண்டு செல்சியஸ் டிகிரி வரை உயர்வு ஏற்படக்கூடும் என அனுமானம் செய்கிற விஞ்ஞானிகள், அது கோடை கால சராசரி வெப்ப நிலை உயர்வு [illegible] மழைப் பொழிவு போன்ற விளைவுகளை ஏற்படுத்தலாம் என ஊகிக்கிறார்கள். அது மட்டுமின்றி தற்காலத்தில் இனம், மதம், சாதி, கட்சி சார்ந்த சச்சரவுகள் பரவலாக நிகழ்ந்து கொண்டிருக்கிற நாடுகளில், குறிப்பாக வெப்ப மண்டல நாடுகளில், உள்நாட்டுக் கலகம், புரட்சி போன்ற சச்சரவுகளின் எண்ணிக்கை 50 சதவீதம் வரை உயரக்கூடும் எனவும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனினும் பருவ நிலை மாற்றத் துக்கும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரிப்பதற்கும் ஓர் இணைப்பு உள்ளதாக அவர்களால் சுட்டிக்காட்ட முடிந்த போதிலும், எந்த நாட்டில், எந்தப் பகுதியில், எந்தவிதமான சச்சரவு எப்போது வெடிக்கும் என்று சொல்லக்கூடிய வகையில் ஒரு விதி அல்லது கோட்பாட்டை அவர்களால் உருவாக்க முடியவில்லை. ஆனால், பாதகமான பருவ நிலை மாற்றத்துக்கும் வன்முறை உணர்வுகள் தூண்டப்படுவதற்குமிடையில் ஒரு காரண காரிய இணைப்புள்ளது என்பதை அனுபவம் சார்ந்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

வன்முறை என்பதில் கொலை, களவு, கற்பழிப்பு போன்ற தனி நபர் குற்றங்களும் குழுக்களுக்கிடையிலான சச்சரவுகளும் அடங்கும். மிகுவல் ஆய்வுக்குழு உலகின் பல பகுதிகளிலும் நிகழ்ந்த 27 வன்முறைச் சம்பவங்களைப் பகுப்பாய்வு செய்த பின்னர், அதிகரித்த வறட்சி, சராசரியைவிட கூடுதலான ஆண்டு வெப்பநிலை போன்ற பாதகமான பருவநிலை மாற்றங்கள் அந்தச் சச்சரவுகளுக்கு ஒரே மாதிரியான தூண்டு விசையாக அமைந்தன என்று முடிவு செய்தது. மனிதர்களின் நரம்பு சார்ந்த உடலியக்கவியல் செயல்பாடுகளில் ஏற்பட்ட தாக்கம் மட்டுமின்றி, விவசாயம் பொய்த்தது போன்ற பொருளாதாரச் சீர்குலைவுகளும், பருவநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்பட்டுச் சச்சரவுகளுக்கு வித்திட்டிருக்கக்கூடும்.

வளர்ச்சியில் பின்தங்கியுள்ள நாடுகளில் வாழும் மக்களில் பெரும்பான்மையினர் உணவுக்கும் வருவாய்க்கும் உள்நாட்டு விவசாய உற்பத்தியையே நம்பியிருக்கின்றனர். அதீதமான வறட்சி அல்லது பெருமழைப் பொழிவு விவசாய உற்பத்தியைப் பாதித்து வருவாயைக் குறைக்கும். அதன் காரணமாக மக்களிடம் விரக்தியும் ஏமாற்றமும் தோன்றி வன்முறைச் சம்பவங்களுக்கு வழிகோலும் என மிகுவல் கருதுகிறார்.

பண்டைய காலத்தில் மாயன் மற்றும் சீன சாம்ராஜ்யங்களின் வீழ்ச்சி முதல், அண்மைக்காலத்தில் இந்தியாவிலும் ஆஸ்திரேலியாவிலும் அதிகரித்த குடும்பச் சண்டைகள், அமெரிக்காவிலும் தான்சானியாவிலும் அதிகரித்த கொலைகளும் குற்றங்களும், ஐரோப்பாவிலும் தெற்காசியாவிலும் அதிகரித்த இனக்கலகங்கள், பிரேசிலில் மக்கள் அரசு நிலங்களை ஆக்கிரமித்தமை, வெப்ப மண்டல நாடுகள் எல்லா வற்றிலுமே குடும்ப மற்றும் சொத்துத் தகராறுகள் அதிகரித்தது என்பன வரையான பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் மிகுவல் குழுவினரால் பகுப்பாய்வு செய்யப் பட்டிருக்கின்றன. அவற்றின், அடிப்படையிலேயே பருவ நிலை பாதிப்புகளுக்கும் மனித சமூகச் சச்சரவுகளுக்குமிடையில் ஒரு தொடர்பு இருப்பதாக மிகுவல் ஆய்வுக் குழுவினர் முடிவு செய்தனர்.

எதிர்காலத்தில் வெப்பநிலை உயர்வுக்கு காரணமாக வேறு பல பாதக விளைவுகளுடன், உள்நாட்டுக் கலகங்களும் இனப்படுகொலைகளும், ஏன் மூன்றாவது உலகப் போரும் கூட மூளலாம் என்ற சாத்தியக் கூறும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. உலகளாவிய வெப்பநிலை உயர்வைத் தடுத்து நிறுத்த வேண்டிய கட்டாயமும் அவசியமும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இன்றைய தினம் புது முயற் சிகளில் வெற்றி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளால் பெருமை யடைவீர்கள். நல்ல நண்பர்களைச் சந்திப் பீர்கள். வெளி வட்டாரத் தில் மதிக்கப்படுவீர்கள். உத்தி யோகத்தில் மதிக்கப்படுவீர்கள்

**இடபம்:** எதிர்பார்த்த இடத்திலில் இருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். கணவன் -மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மிதுனம்:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு.. சகோதர வகையில் நன்மை கிட்டும். பணவரவு திருப்தி தரும். . வெளி வட்டா ரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங் களால் மகிழ்ச்சி கிட்டும். வியா பாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள்.

**கடகம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன் கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிட்டும். குடும்பத்தில் அமைதி நிலவும். தந்தை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் சந்திப்பு நிகழும். வாகனச் செலவுகள் விலகும்.

**சிங்கம்:** காலைப் பொழுதில் இருந்தே மகிழ்ச்சி கிட்டும். குடும்பத்தினரின் எண ணங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பிள்ளைகளின் உடல் நிலை சீராகும். பிராத்தனைகள் நிறை வேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**கன்னி:** நீண்ட நாளாக மனதில் இருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக் கும். விருந்தினர்களின் வருகை உண்டு. பிள்ளைகளின் எண்ணங்களை நிறை வேற்றுவீர்கள். சகோதர வகையில் மகிழ்ச்சி கிட்டும். கூட் டுத் தொழிலில் பங்குதாரர்கள் அனுசரித்துப் போவார்கள்.

**நாளை**

ஆவணி-27 வியாழக்கிழமை 12.09.2013
திதி: ஸப்தமி மு.ப. 10.27 வரை
நட்சத்திரம்: அனுசம் கா.06.20 வரை
சுபநேரம்: 07.33 - 09.03 வரை
இராகுகாலம்: 01.33 - 03.03 வரை

**துலாம்:** பிள்ளைகளை அவர்கள் போக்கில் விட்டுப் பிடியுங்கள். விமர்சனங்களைக் கண்டு அஞ்சாதீர்கள். புது முதலீடுகளைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுக்க வேண்டாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப் புகள் கரையும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதி கரிக்கும். எதிர்பாராத பயணம் உண்டு. உடன் பிறந்தவர்களால் மனஉளைச்சல், வீண் பதற்றம் வந்து போகும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம்.

**தனுசு:** காரியங்களை முடிப்பதில் இருந்த தடுமாற்ற நிலை மாறும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள் வார்கள். சோம்பல், உடல் அசதி, நீங்கும். ஆடம் பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும்.

**மகரம்:** இன்றைய தினம் எதிர்பார்ப்புடன் காணப் படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். . உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு.

**கும்பம்:** பிள்ளைகளால் உறவினர்கள் மத்தி யில் மதிக்கப்படுவீர்கள். கையில் காசுபணம் தேவையான அளவு இருக்கும். கடன் பிரச் சனைகள் தீரும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள்.

**மீனம்:** உதவி கேட்டு நண்பர்கள், உற வினர்களும் தர்மசங்கடத்திற்கு ஆளாக்குவார் கள். மற்றவர்கள் பிரச்னையில் தலையிடுவதால் வீண் பழிச் சொல் ஏற்படக்கூடும்உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

# சுடோக்கு


### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 1 | | | | | 3 |
| 1 | | 2 | | | 8 | | 4 | |
| | | | 4 | 9 | | | | 1 |
| | | | 3 | | 6 | 9 | 1 | 7 |
| 6 | | | | 5 | | | | 8 |
| 3 | 9 | 8 | 7 | | 1 | | | |
| 2 | | | | 7 | 5 | | | |
| | 7 | | 2 | | | 1 | | 6 |
| 9 | | | | | 4 | | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 4 | 2 | 9 | 1 | 6 | 8 | 7 |
| 2 | 9 | 6 | 5 | 7 | 8 | 4 | 1 | 3 |
| 7 | 8 | 1 | 6 | 4 | 3 | 2 | 5 | 9 |
| 5 | 1 | 8 | 9 | 6 | 7 | 3 | 2 | 4 |
| 9 | 2 | 3 | 1 | 8 | 4 | 7 | 6 | 5 |
| 4 | 6 | 7 | 3 | 5 | 2 | 1 | 9 | 8 |
| 6 | 7 | 9 | 4 | 1 | 5 | 8 | 3 | 2 |
| 1 | 4 | 2 | 8 | 3 | 9 | 5 | 7 | 6 |
| 8 | 3 | 5 | 7 | 2 | 6 | 9 | 4 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# நன்றி நவிலல்

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி,
மீளாத்துயில் கொள்ளும் எமது அன்புத் தெய்வம்

திருமதி
## தங்கமணி செல்லத்துரை

அவர்கள் சந்தான கோபாலரின்
அருட்கடாட்சத்தால் இவ்வுலகில் அவதரித்து,
**கோகுலாஷ்டமி** ஆகிய கிருஷ்ணஜயந்தி
அன்று ஜோதியில் சங்கமித்து
**ஸ்ரீவைகுந்தபதம்** எய்திய செய்தி அறிந்து,
உடன் கருமங்கள் ஆற்ற உறுதுணை புரிந்த
உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் பல
வழிகளிலும் உதவியவர்களுக்கும், அனுதாபச் செய்தி
அளித்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளை முன்னின்று
நடத்தியவர்களுக்கும் எனது நெஞ்சம் நெகிழ்ந்த
நன்றி நவில்கின்றேன்.

**"கண்ணன் கருணை நிலவுக"**

**[illegible]கரன்** (மகன் - பிரான்ஸ்)

(31590 (45.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மொழித் தினம்

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தின் தமிழ் மொழித் தினம் இன்று அங்குள்ள அக்குவைனஸ் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.
முற்பகல் 11 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (க-402)

## அடிக்கல் நடும் நிகழ்வு

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் நிதி உதவியுடன் வவுனியா பிரதேச செயலக பிரிவுக்கான கலாசார மத்திய நிலையக் கட்டடத்தின் அடிக்கல் நடும் நிகழ்வு வவுனியா வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத் திட்டப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
சுமார் 8 மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளுடன் கூடியதாக இந்தக் கலாசார மத்திய நிலையம் அமைக்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் தெரிவித்தார். (க-402)

## போதனாசிரியர் பதவி வெற்றிடம்

வவுனியா,செப்.11
வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியின் வருகைதரு பகுதிநேர போதனாசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
மோட்டார் சைக்கிள் பழுதுபார்க்கும் பொறியியல்துறை. குழாய் பொருத்துநர் பயிற்சி நெறி ஆகியவற்றைக் கற்பிப்பதற்கான தமது விண்ணப்பங்களை கல்வித் தகைமைகள் உடையோர் அனுப்பி வைக்குமாறு உப அதிபர் எஸ்.முகுந்தன் கேட்டுக் கொண்டுள்ளார். (க-402)



போரின் போது துன்பங்களை எதிர்கொண்டு இழப்புக்களுக்கு இடையில் இடம்பெயர்ந்து சென்று அங்கும் பல்வேறு இடர்களுக்கு மத்தியில் வாழ்ந்து தற்போது மீள்குடியமர்ந்த நிலையில் இதுவரை நிரந்தர வீடு கிடைக்காத நிலையில் சீரழிந்து காணப்படும் தனது தற்காலிகக் குடிசை முன்னால் சோகத்துடன் காணப்படும் நெடுங்கேணியில் வசிக்கும் குடும்பப் பெண்ணொருவர். (க-435)

## வவுனியாவில் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டங்கள் இன்று

வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பான கூட்டமைப்பினரின் பரப்புரைக் கூட்டங்கள் வவுனியாவின் இரு இடங்களில் இன்று இடம்பெறவுள்ளன.
இந்தக் கூட்டங்கள் நெடுங்கேணி மகாவித்தியாலயம் முன்பாக வவுனியா வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையிலும், முதலியார்குளம் விளையாட்டு மைதானத்தில் செட்டிகுளம் பிரதேச சபைத் தவிசாளர் கபிரியல் அந்தோனி ஜயா தலைமையிலும் இடம்பெறவுள்ளன. இந்த இரு கூட்டங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன், முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராசா, க.சுரேஸ்பிரேமச்சந்திரன், அ.செல்வம் அடைக்கலநாதன், தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொள்வர்.
மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொள்வர். வவுனியா மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் ஒன்பது வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வும் இங்கு இடம்பெறுமென வவுனியா மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் குழுவினர் தெரிவித்துள்ளனர். (க-402)


# தட்டுவன்கொட்டிக்கு சர்வோதயத்தின் குடிதண்ணீர்த் திட்டம்

கிளிநொச்சி, செப். 11
கிளிநொச்சி தட்டுவன் கொட்டிக் கிராமத்தின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலான திட்டம் ஒன்று சர்வோதயம் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தில் கடுமையான தண்ணீர் நெருக்கடியை எதிர்கொள்ளும் பகுதிகளில் ஒன்றாக காணப்படும் தட்டுவன்கொட்டிக் கிராமத்தில் தற்போது 95 குடும்பங்கள் வசித்து வருகின்றன.
தற்போது இங்குள்ள மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் கரைச்சிப் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தினமும் பவுசர் மூலம் குறித்த பகுதிக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் இங்கு தண்ணீர்த் தட்டுப்பாடு தொடர்ந்து நிலவி வருகின்றது.
இந்த நிலையில் குறித்த கிராமத்தின் குடிதண்ணீர்த் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில் கரைச்சிப் பிரதேச சபையுடன் இணைந்து சர்வோதயம் நிறுவனம் தண்ணீர் விநியோகத் திட்டமொன்றை மேற்கொள்ளவுள்ளது.
பொதுவான இடம் ஒன்றில் பெரியதொரு நீர்த்தாங்கி ஒன்றை அமைத்து அதில் தேவையான நீரைச் சேமித்து வைப்பதன் மூலமாக அந்தப் பகுதி மக்கள் தமக்குத் தேவையான வேளையில் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இதன் மூலமாக இந்தப்பகுதிக்கான குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் எனவும், இந்தத் திட்டம் மிக விரைவாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-6)

**பொதுவான இடம் ஒன்றில் பெரியதொரு நீர்த்தாங்கி ஒன்றை அமைத்து அதில் தேவையான நீரைச் சேமித்து வைப்பதன் மூலமாக அந்தப் பகுதி மக்கள் தமக்குத் தேவையான வேளையில் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.**

## குரவயல் கிராமத்தின் வீதிகள் புனரமைக்கப்படாமையால் மக்களுக்கு இடர்கள்

குரவயல் கிராமத்தின் பிரதான வீதி தொடக்கம் ஏனைய குடியிருப்பு வீதிகள் வரை சகல வீதிகளும் புனரமைக்கப்படாமையால் இங்கு வசிக்கும் மக்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ளது குரவயல் கிராமம். இங்குள்ள பிரதான வீதி முதல் ஏனைய குடியிருப்பு வீதிகள் வரையான சகல வீதிகளும் என்றுமில்லாதவாறு சேதமடைந்து பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றன. மேலும் இந்தக் கிராமத்தின் பெரும்பாலான குடியிருப்பு வீதிகள், வெள்ள நீரினால் அரிக்கப்பட்டு கழிவு வாய்க்கால்கள் போன்று காணப்படுகின்றன.
மேலும் சில வீதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாத வகையில் பற்றைக் காடுகள் மண்டிக் காணப்படுகின்றன.
எனவே இந்தக் கிராமத்தின் பிரதான வீதியையாவது முன்னுரிமையடிப்படையில் மிக விரைவாகப் புனரமைத்து வழங்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)



## தற்காலிக கொட்டகைகளால் மாணவர்களுக்குப் பாதிப்பு



**174 மாணவர்களைக் கொண்ட இந்தப் பாடசாலையில் 45 மாணவர்களுக்கே நிரந்தரக் கட்டட வசதி உண்டு ஏனைய மாணவர்கள் தற்காலிக கொட்டகையிலேயே கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.**

அக்கராயன், செப். 11
தற்காலிகக் கொட்டகையில் கல்வி கற்கும் கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலய மாணவர்கள் கற்றல் செயற்பாட்டின்போது இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
174 மாணவர்களைக் கொண்ட இந்தப் பாடசாலையில் 45 மாணவர்களுக்கே நிரந்தரக் கட்டட வசதி உண்டு. ஏனைய மாணவர்கள் தற்காலிக கொட்டகையிலேயே கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.
இந்தப் பாடசாலை இந்த ஆண்டு தனது சொந்தக் காணியில் இயங்கத் தொடங்கிய போது 45 மாணவர்களுக்கு மட்டுமே நிரந்தரக் கட்டட வசதி இருந்தது. ஏனைய மாணவர்கள் தற்காலிகக் கொட்டகைகளில் தமது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
இதனால் மழை, கடுமையான காற்று ஆகியன இந்த மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளைப் பாதித்து வருவதுடன் குளிர் காரணமாக மாணவர்கள் நோய்களின் தாக்கத்துக்கு ஆளாகும் நிலையும் காணப்படுகின்றது.
இதேவேளை பாடசாலையில் நிலவும் இடநெருக்கடி காரணமாக அதிபரின் அறையே களஞ்சியமாகப் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## குளத்தை ஆழப்படுத்தும் பணிகள்

அக்கராயன்,செப்.11
அக்கராயனிலுள்ள ஈச்சங்குளத்தை ஆழப்படுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.
அக்கராயன் மத்திய பகுதியில் இந்தக் குளம் அமைந்திருப்பதால் இதனை ஆழமாக்குவதால் கிணறுகளின் நீர் மட்டம் பேணப்படுவதுடன் கால்நடைகளுக்கும் குடிதண்ணீர் கிடைப்பதற்கான வாய்ப்புக்களும் உருவாகியுள்ளன.
இந்தக் குளத்தில் அதிக நீரைத் தேக்கி வைக்கும் நிலை உருவாகியுள்ளதால் நிலத்தடி நீரைப் பேணக் கூடிய சூழலும் உருவாகியுள்ளது.
மேலும் இந்தக் குளத்தில் நீர்வற்றும் போது அக்கராயன்குளத்து நீரை ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனம், மூலம் இந்தக் குளத்துக்கு வழங்க முடியும்.
அக்கராயன் கிளிநொச்சியின் உப நகரம் என்பதால் ஈச்சங்குளம் ஆழமாக்கப்படுவதால் இந்தப் பகுதி மக்கள் நன்மையடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)



## அக்கராயன் பிரதேசத்தில் அழிக்கப்படும் பற்றைகள்

அக்கராயன்,செப்.11
அக்கராயன் ஸ்கந்தபுரம் ஆகிய கிராமங்களுக்கு இடையேயான பிரதான வீதியின் இரு புறமும் இடையூறாகக் காணப்படும் பற்றைகள் அழிக்கப்பட்டு வருகின்றன. மீள்குடியமர்வின் பின்னர் நீண்ட காலமாகவே அகற்றப்படாது காணப்படும் பற்றைகளே தற்போது அழிக்கப்பட்டு வருகின்றன.
ஸ்கந்தபுரம் கிராமத்திலிருந்து அக்கராயன் மகா வித்தியால யம் வரையான 2 கிலோ மீற்றர் நீளமான வீதியின் இருபுறமும் காணப்படும் பற்றைகளும் அழிக்கப்பட்டு வருகின்றன.
அக்கராயன் மத்தியிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கம் மேற்படி வேலைகளை மேற்கொண்டு வருகின்றது.
இதேவேளை அக்கராயன் காட்டம்மன் கோயில் வீதி தற்காலிக அடிப்படையில் புனரமைப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. (க-18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான மப்பும் மந்தாரமுமான காலநிலை நிலவும்.

## 'சாயி மந்திர்' பஜனை மண்டப திறப்பு விழா

கொக்குவில், குளப்பிட்டிச் சந்தியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தின் 'சாயி மந்திர்' பஜனை மண்டபத் திறப்பு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிலையத் தலைவர் ஸ்ரீ கே.வி. சிவனேசனின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி வி.ஜெகநாதனும், சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கலை நிகழ்வுகளும் சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெற்று மதியபோசனத்துடன் நிகழ்வுகள் நிறைவுறும். (ஓ)

## காக்கைதீவில் குடிதண்ணீர் விநியோகம் திறந்து வைப்பு



நவாலி, செப்.11

யாழ்ப்பாணம் காக்கைதீவில் யு.என்.டி.பி நிறுவனத்தின் நிதி உதவியுடன் புனரமைப்பு செய்யப்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், பாலர் பாடசாலை, நீர் விநியோகம் என்பன கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

ஆனைக்கோட்டை கிராம அலுவலர் நிசாந்தன் தலைமையில் காக்கைதீவு பொதுமண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யு.என்.டி.பி.யின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் என்றிக்கோ பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடங்களைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் நிரஞ்சலா, வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் ஆ.ஜெபநேசன், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். குடி தண்ணீர் விநியோகம் திறந்து வைக்கப்பட்டதன் மூலம் இப் பகுதி மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டியுள்ளது. (ந-100)

## யாழ். நகரில் முடுக்கிவிடப்பட்டுள்ள வீதிகள், வடிகால் புனரமைப்புப் பணிகள்

### அவர்கள் வருகிறார்கள், அதனால் துரிதமோ?

யாழ்ப்பாணம், செப்.11

யாழ். நகர வீதிகள் மற்றும் வடிகால்களின் புனரமைப்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

நகரில் அரைகுறையாக விடப்பட்டிருந்த வீதிகள், வடிகால்கள், சுற்று வட்டங்கள், நடைபாதைகள் அமைப்புப் பணிகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு துரிதமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

குறிப்பாக முற்றவெளி, கோட்டைப் பகுதிகளை அண்டிய அபிவிருத்திக் கட்டுமானங்கள் முன்னுரிமை அடிப்படையில் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தின் தேர்தல் பரப் புரைக் கூட்டங்களுக்காக ஜனாதிபதி உட்பட பல அமைச்சர்கள் யாழ். துரையப்பா விளையாட்டரங்குக்கு இவ் வாரம் வரவுள்ள நிலையில், அபிவிருத்தித் திட்டங்களை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டப்பட்டு வருவதைக் காண முடிகின்றது. (ஓ-135)

## வலி.வடக்கு செஞ்சிலுவையின் தொண்டர் சேவை

யாழ்ப்பாணம், செப்.11

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய தேர்த் திருவிழாவின் போது இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி.வடக்குக் கிளையினரால் கடந்த காலங்களைப் போல் இம்முறையும் முதல் உதவிச் சேவைகள் வழங்கப்படவுள்ளன.

ஆலய தேர்த் திருவிழா தினமான எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு சங்கத் தொண்டர்கள் அனைவரையும் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சங்க அலுவலகத்துக்கு வருகை தருமாறு செயலாளர் சி.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ந-9)

## வருடாந்த பெருந்திருவிழா

வட்டுக்கோட்டை, துணவி, அரசடிப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவத் திருவிழாவின் முதலாம் நாள் திருவிழா, விநாயக சதுர்த்தியுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. (ந)

## திருவிழா திருப்பலி

குருநகர், செப்.11

நாவற்குழி தூய அற்புத மாதா ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா திருப்பலி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெற்றது. இந்தத் திருவிழாத் திருப்பலியை ஆலயத்தின் பங்குத் தந்தை வண பிதா யோ.பிரான்சிஸ் அடிகளார், யாழ். மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் வண. பிதா றெக்னோ அடிகளார், வண. பிதா தீபன் அடிகளார் வண.பிதா ஜெறாட் அடிகளார் ஆகியோர் கூட்டாக நிறைவேற்றினர். திருவிழாத் திருப்பலி நிறைவில் ஆலய வளவில் திருச் சொரூபப் பவனியும் அன்னையின் ஆசீரும் இடம்பெற்றது.

இத் திருநாள் திருப்பலியில் தென்மராட்சியின் பல பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான கத்தோலிக்க மக்கள் கலந்து கொண்டனர். (ந-51)

## யாழ். நகரில் இப்படியும் ஒரு வீதியா...?



கொழும்புத்துறை, செப்.11

யாழ். பெருமாள் கோயிலின் தெற்குப் புறமாகவுள்ள வெங்கடேசன் வீதி நீண்டகாலமாக கற்கள் பரவப்பட்ட நிலையில் வீதி அமைப்புப் பணிகள் நிறைவடையாது காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுமார் ஒரு வருடத்துக்கு முன்னதாக வீதியைப் புதிதாக நிர்மாணிக்கும் பொருட்டு யாழ். மாநகர சபையால் வீதிக்கு கற்கள் பரவப் பட்ட நிலையில் இன்று வரை அப்பணிகள் நிறைவு செய்யப்படாது காணப்படுகிறது.

இந்த நிலையில் அவ் வீதி வழியாக ஆலயத்துக்குச் செல்வோரும் அப் பகுதியில் குடியிருப்போரும் போக்குவரத்தில் பல அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். தமது வாகனங்களை அந்த வீதி வழியாக செலுத்த முடியாமல் ஓரமாக உள்ள பாதை வழியாகவே பயணிக்க வேண்டியுள்ளது.

பெருமாள் கோயில் திருவிழா அடுத்த சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில் பக்தர்கள் மற்றும் குடியிருப்பாளர்களின் வசதி கருதி யாழ். மாநகர சபை இவ் வீதி அமைப்புப் பணிகளை நிறைவு செய்துதரவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-135)

## சுயதொழில் கடன் ஊக்குவிப்புத் திட்டம்

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு இலங்கை மத்திய வங்கியின் செயற்றிட்டத்தின் கீழ் யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியினால் சுயதொழில் கடன் ஊக்குவிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொழில் வழிகாட்டல் மையத்தால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தில் தொழில் நுட்பவியல் கல்லூரி தொழிற் பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை மற்றும் இளைஞர் சேவைகள் மன்றம் ஆகிய வற்றில் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த மாணவர்கள் இணைந்து கொள்ளலாம். தகுதியுடையவர்கள் தமது சுய விவரத்தை பிறவுண் வீதியில் அமைந்துள்ள தொழில் நுட்பவியல் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் மையத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். (ந-14)

## விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியால் தொடர்பாடலில் ஆங்கிலக் கற்கை, கணினி பிரயோக உதவியாளர் கற்கை ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கற்கை நெறியில் தொடர்பாடலில் ஆங்கிலக் கற்கை நெறிக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாமல் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கணினி பிரயோக உதவியாளர் கற்கைநெறிக்கு ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாமல் ஆங்கிலம், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் பணிப்பாளர், தொழில்நுட்பக் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். (ந-14)

# வவுனியா வடக்கு கல்வி வலய ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

வவுனியா வடக்குக் கல்வி வலயத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**சிந்தனை ஆக்கம்**

தரம் 6பிரிவில் 1ஆம் இடம்-ரி.பேபிசாளினி (மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம்) 2ஆம் இடம்- ஏ.அகான்ரினா (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

தரம்7 பிரிவில் 1ஆம் இடம்- எஸ்.கம்சிதா (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்), 2ஆம் இடம்- வி.விதுசன் (மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம்), 3ஆம் இடம்- ஜி.ஆன்ஜெலினா (ஓமந்தை மத்திய கல்லூரி) தரம் 8 பிரிவில் 1ஆம் இடம்- பி.நிமலேஸ்வரன் (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்) 2ஆம் இடம்- ஏ.அனுசா (கனகராயன்குளம் மகாவித்தியாலயம்) 3ஆம் இடம்- கே.திலக்சனா (கனகராயன்குளம் ம.வி)

தரம்9 பிரிவில் 1ஆம் இடம்- எஸ்.டிலக்ஸனா (ஓமந்தை மத்திய கல்லூரி), 2ஆம் இடம்- எஸ்.சந்துஸன் (புதுக்குளம் ம.வி)

தரம் 10 பிரிவில் 1ஆம் இடம்- ஆர்.லிதுஜா (கல்மடு ம.வி) 2ஆம் இடம்- கே.சயந்தினிதரம் (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

தரம் 11 பிரிவில் 1ஆம் இடம்- எம்.ரேனுகா (ஓமந்தை மத்திய கல்லூரி), 2ஆம் இடம்- ஆர்.ராதிகா தரம் (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

தரம் 12 பிரிவில் 1ம் இடம் என்.கீர்த்திகா (ஓமந்தை மத்திய கல்லூரி), 2ஆம் இடம்- வி.குஜிலினி (ஓமந்தை மத்திய கல்லூரி), 3 ஆம் இடம்- பி.ரிசிதரன் (புளியாங்குளம் இந்துக் கல்லூரி)

தரம் 13 பிரிவில் 1 ஆம் இடம்- எஸ்.சத்தியா (ஓமந்தை மத்திய கல்லூரி)

**சொல்வதெழுதல்**

தரம் 6 பிரிவில் 1ஆம் இடம்- எஸ்.நிதர்சனா (புதுக்குளம் மகா வித்தியாலயம்), 2ஆம் இடம்- ரி.நதுசன் (கனகராயன்குளம் ம.வி.), 3ஆம் இடம்-எஸ்.கஜீபன (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்)

தரம் 7 பிரிவில் 1ஆம்இடம்-கே. சிந்துஜா (புதுக்குளம் மகா வித்தியாலயம்), 2ஆம் இடம்- எஸ்.விதுசா (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்) 3ஆம் இடம்- எஸ்.சுவாணன் (கனகராயன்குளம் ம.வி.)

தரம் 8 பிரிவில் 1ஆம் இடம்- ஏ.லுக்ஸா (ஓமந்தை மத்திய கல்லூரி), 2ஆம் இடம்- எஸ்.சஜிதா (கனகராயன்குளம் ம.வி.) 3ஆம் இடம்- ஜே.லுக்சனா தரம் (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

தரம்9 பிரிவில் 1ஆம் இடம்- எஸ்.டிலக்சனா (ஓமந்தை மத்திய கல்லூரி) 2ஆம் இடம்- கே.விவுலா (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்) 3ஆம் இடம்- ஜி.எஸ்த்தாபிரியந்தினி (கனகராயன்குளம் ம.வி.)

தரம் 10 பிரிவில் 1ஆம் இடம்- ஆர்.ஜதுசா (புதுக்குளம் மகா வித்தியாலயம்), 2ஆம் இடம்- ரி.தரன்சிகா (கனகராயன்குளம் மகாவித்தியாலயம்), 3ஆம் இடம்- ஆர்.லிதுர்சன் (புதுக்குளம் ம.வி)

தரம் 11 பிரிவில் 1ஆம் இடம்- ஆர்.ஜதுகுலன், 2ஆம் இடம்- ரி.விதுசன் (ஓமந்தை மத்திய கல்லூரி), 3ஆம் இடம்- ஏ.லுஜித்நாதன் (கனகராயன்குளம் ம.வி.)

தரம் 12 பிரிவில் 1ஆம் இடம்- என்.திக்சனா (புதுக்குளம் மகா வித்தியாலயம்) 2ஆம் இடம்- கே.துசாந்தன் (ஓமந்தை மத்திய கல்லூரி) 3ஆம் இடம்- ஐ.ஐங்கரன்

தரம் 13 பிரிவில் 1ஆம் இடம்- கே.அசோக்குமார் (ஓமந்தை மத்திய கல்லூரி) 2ஆம் இடம்- கே.தாசன் (புதுக்குளம் ம.வி.)

**பாவோதல்**

தரம் 3 பிரிவில் 1ஆம் இடம்- எம்.மாதங்கி (புதுக்குளம் கனிஸ்ட பாடசாலை) 2ஆம் இடம்- எம்.பிறே மினி (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்), 3ஆம் இடம்- ஜி.பபிற்றன் (புளியங்குளம் இந்துக் கல்லூரி)

தரம் 4 பிரிவில் 1ஆம் இடம் வி.விதுசா (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்) 2ஆம் இடம்- சலோமி (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்), 3ஆம் இடம்- எம்.சஜினி (புளியங்குளம் இந்துக் கல்லூரி)

தரம் 5 பிரிவில் 1ஆம் இடம்- யு.சனிகா (புதுக்குளம் மகா வித்தியாலயம்), 2ஆம் இடம் வி.கஜனிகா (ஓமந்தை மத்திய கல்லூரி) 3ஆம் இடம்- ஏ.சங்கீதன் (புளியங்குளம் இந்துக் கல்லூரி)

தரம் 6 பிரிவில் 1ஆம் இடம்- ஆர்.ஜஸ்ந்தினி (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்) 2ஆம் இடம்- ஏ.அகஸ்ரினா (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்), 3ஆம் இடம்- எஸ்.டயந்தன் (கனகராயன்குளம் ம.வி.)

தரம் 7 பிரிவில் 1ஆம் இடம்- எஸ். கஸ்மிதா (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்) 3ஆம் இடம்- எஸ். சுவாணன் (கனகராயன்குளம் ம.வி.)

தரம் 8 பிரிவில் 1ஆம் இடம்- பி.நிமலேஸ்வரன் (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்), 2ஆம் இடம்- எஸ்.பிரநிக்ஸன் (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்) 3ஆம் இடம்- பி.லுஜிதா (கனகராயன்குளம் ம.வி.)

தரம் 9 பிரிவில் 1ஆம் இடம்- பி.ஜமுனா (நெடுங்கேணி மகா வித்தியாலயம்) 2ஆம் இடம்- ஜே.நிரஞ்சினி (புதுக்குளம் ம.வி.) 3ஆம் இடம்- ஆர்.கொன் சுந்தினி (புதுக்குளம் மகா வித்தியாலயம்)

தரம் 10 பிரிவில் 1ஆம் இடம்- பி.தரன்சிகா (கனகராயன்குளம் மகாவித்தியாலயம்) 2ஆம் இடம்- என்.டிலானி (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்) 3ம் இடம் எம்.கேதீஸ்வாதரம் (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

தரம்11 பிரிவில் 1ஆம் இடம்- ஆர்.கிறிஸ்ரினா (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்), 2ம் இடம்- எம்.இத்தா (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்) 3ஆம் இடம்- ஏ.ரம்சி காமோ (ஓமந்தை மத்திய கல்லூரி)

**செய்தி வாசித்தல்**

தரம் 12 பிரிவில் 1ஆம் இடம்- கே.புஸ்பலதா (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்) 2ம் இடம்- பி.சிந்துஜா (கனகராயன்குளம் மகாவித்தியாலயம்), 3ஆம் இடம்- எஸ்.சிவதர்சினி (கனகராயன்குளம் ம.வி.)

தரம் 13 பிரிவில் 1ஆம் இடம்- ஜே.றனுசிகா (புதுக்குளம் ம.வி.), 2ஆம் இடம்- கே.தாசன் (புதுக்குளம் ம.வி.)

**பேச்சுத் திறன்**

தரம் 12 பிரிவில் 1ஆம் இடம்- கே.புஸ்பலதா (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்) 2ஆம்இடம்- பி.சோபனா (ஓமந்தை மத்திய கல்லூரி)

தரம் 13 பிரிவில் 1ஆம் இடம்- எ.நிலக்சனா (ஓமந்தை மத்திய கல்லூரி), 2ஆம் இடம்- பி.கீர்த்தனா (ஓமந்தை மத்திய கல்லூரி)

**கதை கூறல்**

தரம் 6 பிரிவில் 1ஆம் இடம்- ஆர்.சர்விகா (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்), 2ஆம் இடம்- ஈ. ஆருண்யா (புளியங்குளம் இந்துக் கல்லூரி), 3ஆம் இடம்- எம்.நிருசன் (புளியங்குளம் இந்துக் கல்லூரி)

தரம் 7 பிரிவில் 1ஆம் இடம்- கே.கஜேந்தினி, 2ஆம் இடம் எஸ்.பத்மயோகினி (புளியங்குளம் இந்துக் கல்லூரி) 3ஆம் இடம்- எம்.டிலுக்சனா

தரம் 8 பிரிவில் 1ஆம் இடம்-வி.சஜிதா (கனகராயன்குளம் மகாவித்தியாலயம்), 2ஆம் இடம்- சி.டல்சிகா (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்), 3ஆம் இடம்- பி.பிரவீன் (ஓமந்தை மத்திய கல்லூரி)

தரம் 9 பிரிவில் 1ஆம் இடம்- பி.சமிந்தன் (புதுக்குளம் மகா வித்தியாலயம்), 2ஆம் இடம்- எஸ்.குலதீபன் (புளியங்குளம் இந்துக் கல்லூரி). (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னைமடியில்
13*04*1991
ஆண்டவன்பிடியில்
05*09*2013

அமரர் **தவதீஸ்வரன் நிஷானி**
(பிரதான வீதி-கண்டாவளை)

சிரித்த முகத்தோடு சிந்தையில்
விளையாடி - உன்
உறவுகளோடு சென்றவளே
என்னை விட்டு இன்று
எங்கம்மா சென்றாய்
உன் நினைவுகளோடு
என்றும் ஈரவிழிகளில்.....

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்வில் இன்று (11.09.2013) புதன்கிழமை அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

பிரதான வீதி,
கண்டாவளை

(37522)(4.3.6)

சி. தவதீஸ்வரன்
(அன்பான கணவர்)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30.03.1957 — மறைவு 14.09.2010



அமரர்
**நல்லரசு இராஜேஸ்வரன்**
(நாதஸ்வர வித்துவான்)

பாசத்தின் உறைவிடமாய் அன்பின்
திருவுருவாய் குடும்பத்தின் தலைவனாய்
எங்களை வழிநடத்திய தெய்வமே
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சை
விட்டு அகலாது எங்கள் கண்ணீர்ப் பூக்களால்
அர்ச்சித்து ஆண்டவன் அடியில் உங்கள்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

259, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(31655)(10.16.14)

குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் (திட்டமிடல்)
சண்முகராசா இரவீந்திரநாதன்
அவர்களின் பாசமிகு மாமனார்

## கந்தையா தவராஜா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்

நலன்புரிசங்கம், வலயக்கல்வி
அலுவலகம், யாழ்ப்பாணம்.

(சி/11976)
(4.6.3)

வலயக்கல்விப் பணிப்பாளரும்,
நலன்புரிசங்க அலுவலர்களும்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி வரதலக்ஸ்மி
தயாபரனின் அன்பு மாமனார்

## நாகலிங்கம் சண்முகலிங்கம்

அவர்கள் 01.09.2013 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/ வேம்படிமகளிர் உயர்தரப் பாடசாலை.

(31596)
(4.6.3)

# மரண அறிவித்தல்

## கந்தையா தவராஜா

(ஓய்வுபெற்ற உப அதிபரும் ஆயுர்வேத வைத்தியரும்)



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் பிரதான வீதி, தெல்லிப்பழையை நிரந்தர வசிப்பிடமாகவும், இல. 86, பலாலி வீதி, திருநெல்வேலியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தவராஜா நேற்று (10.09.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திய கலாநிதி முத்துக்குமாரு (Dr. Shaw) கந்தையா-தெய்வநாயகி தம்பதியரின் ஏக புதல்வரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தவமணி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சரோஜினிதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், சுகந்தி,(ஆசிரியை, அக்குறனை மத்திய கல்லூரி), அஜந்தி (ஆசிரியை, கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி), ஜெகந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபாலமூர்த்தி (ஆசிரியர்,Good Shepherd Convent, கண்டி), ரவீந்திரநாதன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்), ஈஸ்வரதாஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், சுவஸ் திகா, ரகுராம், கஜானி, விபூஷா, ஹரிஷா, அபிஷா ஆகியோரின் அன்புப் பேரனும், தனலக்சுமி தாமோதரம்பிள்ளை, கனகமணி சின்னையா, நகுலேசதேவி இராஜ்மனோகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2013) புதன் கிழமை மு.ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப ஒரு மணியளவில் பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 86, பலாலி வீதி,
திருநெல்வேலி.

(31656)
(10.16.14)

தகவல்:
ச. ரவீந்தரநாதன் (மருமகன்)


# கடந்த ஏழு வருடங்களில் மட்டும் 10,000 இளைஞர்களுக்கு பயிற்சி

## கைத்தொழில் பயிற்சி அதிகார சபை தகவல்

யாழ்ப்பாணம், செப். 11

கடந்த 7 வருட காலத்தில் யாழ். மாவட்டத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் தொழில் பயிற்சிகளைப் பெற்று வெளியேறியுள்ளனர் என்று தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட அலுவலர் கி.கிருஷ்ணபாலன் தெரிவித்தார்.

கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் தொழிற் பயிற்சிகளை வழங்கி வரும் நைற்றா நிறுவனம் ஊடாக கடந்த 7 வருட காலத்தில் மட்டும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் தொழில் பயிற்சிகளைப் பெற்றுள்ள னர் என்று அவர் கூறி னார்.

பயிற்சிக் காலத்துக்கு ஏற்ப இலவச தொழிற் பயிற்சிகளை வழங்கிவரும் நைற்றா நிறுவனத்தில் பயிற்சி முடித்து வெளியேறியவர்கள் தற்போது அந்தந்த துறைகளில் தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சை முடிவின் பின்னர் அடுத்த கட்டமாக இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொடுக்க வேண்டிய சூழல் நிலவுவதால் இந்தப் பயிற்சி நெறிகள் நன்மை பெற்றுக் கொடுத்துள்ளன என்று அவர் சுட்டிக் காட்டினார்.

அதிகமான இளைஞர், யுவதி கள் சுயமாகவே தொழில் நிலையங்களை நிறுவி தொழில் வாய்ப்பைப் பெற்று வருமானத்தை தேடிக் கொள்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-14)

# சிகிச்சை பெறத் தவறியதால் மூதாட்டி உயிர் பறிபோனது

இருதயத்தில் ஏற்பட்டகோளாறுக்கு உரிய சிகிச்சை பெறுமாறு வைத்திய நிபுணரினால் அறிவுறுத்தப்பட்டும் அதற்கு சிகிச்சை பெறாது ஆலயத் தொண்டில் ஈடுபட்ட மூதாட்டி மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார். பாலாவியைச் சேர்ந்த அன்னம்மா என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பாலாவியில் இடம்பெற்றது.

அந்தப் பகுதியில் உள்ள ஆலயத்தில் பிரதி திங்கட் கிழமைகளில் நடைபெறும் வழிபாட்டில் தீவிரமாக ஈடுபட்டு வரும் மூதாட்டி கடந்த மே மாதம் மயங்கி வீழ்ந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபோது அவரைப் பரிசோதித்த வைத்திய நிபுணர், இருதய வால்பு தொடர் பான பிரச்சினை இருப்பதால் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

மேலதிக சிகிச்சை பெறச் செல்லாமல் ஆலயத் தொண்டினையே செய்து வந்த வேளையில் நேற்று முன்தினம் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த வேளையில் மயங்கி வீழ்ந்ததால் வைத்தியசாலைக்கு கொண்டு வரும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப் பட்டுள்ளது. மூதாட்டியின் உயிரிழப்புத் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசா ரணை நடத்தி சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். நீதிவானின் உத்தரவு மூலம் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் விசாரணையை நடத்தியுள்ளார். (ச-9)

# தேர்தலைக் கண்காணிப்பதற்கு கண்காணிப்பாளர்கள் நியமனம்

## 14 இல் பயிற்சி வகுப்பு

> கண்காணிப்பு தொடர்பான பயிற்சி வகுப்பு எதிர்வரும் 14 ஆம் திகதி 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று சாவகச்சேரி தொகு திக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணி ப.குக னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

தென்மராட்சி, செப்.11

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடவடிக்கையைக் கண்காணிக்க பவ்ரல் அமைப்பு பிரதேச செயலக ரீதியாகக் கண்காணிப்பாளர்களை நியமித்து வருகிறது. இதன் அடிப்படையில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 43 பேருக்கான கண்காணிப்பு தொடர்பான பயிற்சி வகுப்பு எதிர்வரும் 14 ஆம் திகதி 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று சாவகச்சேரி தொகுதிக்கு பொறுப்பாக நியமிக்கப் பட்டுள்ள சட்டத்தரணி ப.குக னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை, பவ்ரல் அமைப்பினால் தேர்தலில் வாக்களிப்பது எவ்வாறு என்பது பற்றிய விழிப்புணர்வுக் கூட்டங்களும் மக்களிடையே நடத்தப்படவுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-9)

# இரு வருடங்கள் கடந்தும் கொடுப்பனவு வழங்கவில்லை

## மானிப்பாய் ப.நோ.கூ. சங்கத்திலிருந்து இடை விலகிய, ஓய்வு பெற்ற ஊழியர் கவலை

வலி.தென்மேற்கு, செப்.11

மானிப்பாய் கோவில்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து ஓய்வு பெற்ற, பதவி விலகிய ஊழியர்களின் பிணைப்பணம், பணிக்கொடை, சம்பளம் போன்ற கொடுப்பனவுகள் இரு வருடங்களுக்கு மேலாகியும் வழங்கப் படவில்லை.

இது குறித்து பாதிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் தமது வாழ்க்கைச் செலவைக் கருத்தில் கொண்டு தங்களுக்குரிய கொடுப்பனவுகளைக் காலம் தாழ்த்தாமல் வழங்குமாறு சங்க நிர்வாகத்தையும், கூட்டுறவு உதவி ஆணையாளரையும் கோரியுள்ளனர்.

> கொடுப்பனவுகளைக் காலம் தாழ்த்தாமல் வழங்குமாறு சங்க நிர்வாகத்தையும், கூட்டுறவு உதவி ஆணையாளரையும் கோரியுள்ளனர்.

மானிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி, சண்டிலிப்பாய் ஆகிய ஐந்து கிராமங்களை உள்ளடக்கிய மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ. சங்கம் ஆரம்பகாலத்திலிருந்து பல வருடங்களாக நல்ல நிலையில் இயங்கி வந்துள்ளது.

இருபத்து மூன்று கிளைகளுடன் இயங்கி வந்த குறித்த சங்கம் நாளடைவில் நிர்வாகச் சீர்கேட்டினாலும் வியாபாரமின்மையாலும் நஷ்டத் தில் இயங்கி வந்தது.

வங்கியில் பெருந்தொகையான பணத்தைக் கடனாகப் பெற்று இயங்கி வந்த போதிலும் நாளடைவில் மேலும் நஷ்டத்திற்குள்ளானது. இதனால் சங்கத்தில் கடமையாற்றும் ஊழியர்களின் சம்பளத்தை மாதம் மாதம் ஒழுங்காக வழங்க முடியாத நிலைக்கு சங்கம் தள்ளப் பட்டது.

சங்கத்தின் இத்தகைய நிலைப்பாட்டை உணர்ந்து கொண்ட கூட்டுறவு உதவி ஆணையாளர், கிளைகளின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு சங்கத்திற்கு ஆலோசனை வழங்கியதையடுத்து நாளுக்கு நாள் கிளைகள் மூடப்பட்டு தற்பொழுது பத்து கிளைகளுடன் சங்கம் இயங்கி வருகின்றது.

சங்கத்தின் நிதி நிலையைக் கருத்தில் கொண்ட சில ஊழியர்கள் பல மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படாமையினால் தாமாகவே பதவியிலிருந்து விலகியுள்ளனர். இதேவேளை வயது வந்த பல ஊழியர்களும் ஓய்வு பெற்றுள் ளார்கள். ஓய்வுபெற்ற, தாமாகவே விலகிய சுமார் பதினைந்திற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணிக் கொடை [illegible] இரு வருடங்களாகியும் வழங்கப்படவில்லை.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இவ்வேளையில் வாழ்க்கை நடத்த முடியாமல் திண்டாடும் பாதிக்கப் பட்டுள்ள ஊழியர்கள் தங்களுக்குரிய கொடுப்பனவுகளைப் படிப்படியாக வழங்குமாறு தெரிவித்துள்ளதுடன் முதற் கட்டமாகப் பிணைப் பணத்தை வட்டியுடன் வழங்குமாறு சங்க நிர்வாகத்தையும் கூட்டுறவு உதவி ஆணையாளரையும் கோரியுள்ளனர். (ச-115)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ச்சல் தரவைகளை வழங்குமாறு கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை

## பயிர்ச்செய்கைக் காலங்களில்

கிளிநொச்சி மாவட்டத்தில் பயிர்ச் செய்கை காலங்களில் கால்நடைகளைப் பராமரிப்பதற்கு ஏற்ற வகையில் மேய்ச்சல் தரவைகள் ஏற்படுத்தித் தருமாறு கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த போர்க்காலத்துக்கு முன்னர் சுமார் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் காணப்பட்டன. ஆனால் தற்போது சுமார் 15 ஆயிரம் வரையான கால்நடைகளே இங்கு உள்ளன.

இந்த நிலையில் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை பயிர்ச் செய்கைக் காலங்களில் பராமரிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய பிரதேசங் களில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளுக்கென ஒதுக்கப் பட்ட நிலங்கள், பலராலும் அபகரிக்கப்பட்டு பயிர்ச் செய்கை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன,

இதனால் கால்நடைப் பண்ணையாளர்கள் பயிர்ச் செய்கைக் காலங்களில் கால்நடைகளைப் பராமரிப்பதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சில பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை வேறு பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வதையும் காணமுடிகின்றது.

இதற்கு அப்பிரதேசங்களில் உள்ள விவசாயிகள், கால்நடைப் பண்ணையாளர் எனப் பலரும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இதன்போது முரண்பாடுகளும் ஏற்படுகின்றன.

எனவே தமது பிரதேசங்களில் கால்நடைகளின் மேய்ச்சல் தரவைகளுக்கென ஒதுக்கப்பட்ட பகுதி களை அவற்றை அபகரித்தவர்களிடமிருந்து பெற்றுத் தருமாறு கால்நடை பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

---

## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு
19.08.1931



இறப்பு
14.08.2013

### அமரர் தம்பு இராசலிங்கம்

(இளைப்பாறிய எழுதுவினைஞர்)

பிறப்பு : கட்டுவன், தெல்லிப்பழை
வாழ்வு : கட்டுவன், இணுவில், கொழும்பு.

30 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியை 12.09.2013 வியாழக்கிழமை கீரிமலையில் காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ளது. அந்நிகழ்விலும், அதனைத்தொடர்ந்து கீரிமலை சிவபூமி மண்டபத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் பிரார்த்தனை மற்றும் மகேசுர பூசை நிகழ்விலும் அன்னாரின் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு பிரார்த்திக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

இந்தருணத்தில், அவரது மரணச்செய்தி அறிந்து பல்வேறுவழிகளில் தொடர்புகொண்டும் நேரில் கலந்துகொண்டும் தங்கள் அனுதாபங்களைப் பகிர்ந்துகொண்ட அனைத்து உள்ளங்களிற்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றியை உரித்தாக்குகின்றோம்.

தர்மபூபதி (மனைவி),
சங்கரன் (மகன்),
காந்திமதி (மருமகள்).
தொடர்பு: 012 300 040, 077 055 0526.
077 309 0888

---

## 31 ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம்
25.01.1942

மறைவு
13.08.2013

### அமரர் சரஸ்வதி நல்லதம்பி

பாசத்தின் வெக்கிஷம் பாசவிட்டுப் போய் நாள் முப்பத்தொன்று ஆனதம்மா!
நேசமுடன் தேடினோம் நெருங்கமுடியவில்லை அம்மா!
உங்கள் அன்புக் கதை கேளாமல் வாடுகின்றோம் அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம் அம்மா!

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (12.09.2013) வியாழக்கிழமை அதிகாலை கெருடாவில் தொண்டமானாறில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை வீதி,
கெருடாவில், தொண்டமானாறு.
(31642) (11.6.3)
குடும்பத்தினர்

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

இன்பமுடன்
13.10.1949

துன்பமுடன்
29.07.2013



### அமரர் சின்னையா பஞ்சாட்சரம்

பிறப்பிடம்-கல்லூரி வீதி, ஓடக்கரை
வாழ்விடம்- 152, தொண்டமான் நகர், கிளிநொச்சி

அன்புடன் எமை ஈன்ற அப்பாவே ! அப்பா என்று
அழைக்க நாம் அனைவரும் இங்கிருக்க நீங்கள் எங்கு சென்றீர்கள்!
45 நாள்கள் சென்றாலும் உங்கள் பூ முகம் எம்மையெல்லாம் வாட்டுதப்பா!

அன்னாரின் 45 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியை 09.09.2013 திங்கட்கிழமை கீரிமலையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (11.09.2013) புதன்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். குடும்பசகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி !

இல.152, தொண்டமான்நகர்,
கிளிநொச்சி.
(37521)(6.3.11)
குடும்பத்தினர்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி கனகம்மா சிவசம்பு

தோற்றம்
07.01.1929



மறைவு
24.08.2012

ஆண்டொன்று போய்விட்டது அம்மா
உங்களைப் பிரிந்த துயரத்தில் அந்தரித்து நிற்கிறோம் தாயே
உயிர் தந்து உடல் தந்து உணர்வோடு ஒன்றாகி நிழலாக
நிஜமாக எமைக்காத்து வளர்த்தாயே தாயே
இப்புவி உள்ள மட்டும் உமை மறக்கலாகுமோ தாயே
மீண்டும் ஒரு முறை உங்கள் திருமுகத்தைக்காண ஏங்கித்தவிக்கிறோம் அம்மா
உங்கள் நினைவுகளின் சுமைகள் கண்ணீரில் கரைகிறது தாயே
இதயத்தை இருளாக்கி எமைவிட்டு எங்கு போனீர்கள் அம்மா
வானம் இவ்வையகம் உள்ளவரை எமை நீங்காமல் நீங்கள் இருக்கவேண்டும்
என தினம் தினம் ஆண்டவனை வேண்டி நின்றோம் தாயே
வாழ்க்கை எனும் நீரோட்டத்தில் எமைத் தத்தளிக்க விட்டு விட்டுப் பிரிந்து
போய் விட்டீர்களே! அம்மா!
இனி எப்பிறப்பில் எங்களோடு சேர்வீர்கள் அம்மா!
உங்கள் ஆத்மாவின் சாந்திக்காய் இறைவனைப் மன்றாடுகின்றோம் தாயே
உங்கள் பாதக்கமலத்திற்கு எங்கள் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

6ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## முப்பத்தோராம் நாள் நினைவலைகள்

மண்ணில்
13 . 06 . 1980



விண்ணில்
12 . 08 . 2013

### திருமதி அனுதர்சினி (ஜெனி)

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் துன்பங்களைச் சுமந்து தாய்மை உணர்வெனும் ஒன்றை மட்டும் மனதுள் இருத்தி ஒரு இலட்சியத்துக்காக வாழ்ந்த அனுதர்சினி (ஜெனி) அவர்களின் முப்பத்தோராம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை.

இல்லறமாம் நல்லறம் என்பார்கள் நின்வாழ்வோ
அல்லலெல்லாம் சூழ்ந்தே அழிதுயராய் ஆனதுவே
தீயாகித் தக்க துணையுமிலாளாகிப்
பாயோடொன்றானாய் பதைத்து

சின்னஞ் சிறாரிருவர் செய்வ தறியாநிற்க
நெஞ்சமெரி நிறைந்தும் உறுதுயரில் வாழ்ந்த
சஞ்சலிய வாழ்விலே இன்பமு மில்லா
கண்ணீரைத் தந்தா யெமக்கு

குழந்தைகள் தம்மைக் குதூகல மாக்க
அழுதழுது வாழ்ந்தாய் அநுதினமும் வேண்டித்
தொழுகின்றோம் பிள்ளைகள் தாம்வாழ மன்மீ
தெழுந்தே நலமாய் உயர்ந்து.

பெரியன் தமப்பனுல்

16, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், சகோதரர்கள், சித்தப்பாமார்
அத்தைமார், உறவினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தை கிழக்குப் பகுதியில் இருந்து தினமும் இரவோடு இரவாக கடத்தப்படும் கால்நடைகள்



முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பகுதியில் இருந்து தினமும் கால்நடைகள் கடத் தப்பட்டு வருவதாகவும், இதனை உரிய அதிகாரி கள் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் மக்க ளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு பகுதியில் இருந்து மூன்று முறிப்பு, நவ்வி, குஞ்சுக்குளம், வலையன்கட்டு ஆகிய பகுதிகள் ஊடாக தினமும் கால்நடைகள் கடத்தப்பட்டு வருவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் மூன்றுமுறிப்பு, குஞ்சுக்குளம், நவ்வி யூடாக வவுனியாவுக்கும், மூன்றுமுறிப்பு, வலையன்கட்டு ஆகிய பகுதிகள் ஊடாக தாண்டிக் குளத்துக்கும் பாண்டியன்குளம், நட்டாங் கண்டல் பகுதிகளில் இருந்து செட்டிகுளம் பகுதிக் கும் எல்லையோரக் கிராமங்கள் ஊடாக தினமும் கால்நடைகள் இரவோடு இரவாகக் கடத் தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் பாண்டியன்குளத்தில் இருந்து சிறாட்டிக்குளம் ஊடாகக் கடத்தப்பட்ட கால் நடைகள், அப்பகுதி இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு மல்லாவி பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்ட பின்னர் உரியவர்களிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை இப் பகுதிகளில் இருந்து ஆயிரத்துக் கும் மேற்பட்ட கால்நடைகள் இவ்வாறு கடத் தப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரி விக்கின்றனர். (க-6)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது நீதிமன்ற கௌரவ
மாவட்ட நீதிபதியும் நீதிவானுமாகிய
திருமதி
ஸ்ரீநிதி நந்தசேகரன்
அவர்கள் தற்பொழுது கொழும்பு
பல்கலைக் கழகத்தில் சட்ட முதுமாணி
(L.LM) பட்டம் பெற்றமையிட்டுப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
இவர் கொழும்புப் பல்கலைக் கழக சட்டபீட
இளமாணி (L.LB) பட்டத்தைப் பெற்றமையும்
இவருக்கு 2009 ஆண்டிற்கான "சர்வதேச துணிச்சல்மிக்க
பெண்மணிக்கான சர்வதேச-விருது" வழங்கிக்
கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.
இவற்றுடன் மேன்மேலும் பல பட்டங்களையும்
பதவியுயர்வுகளையும் பெற்று நீடூழிவாழ வாழ்த்துகின்றோம்.
Best Wishes
ஊழியர் நலன்புரி சங்கம்,
மாவட்ட நீதிவான் நீதிமன்றம், பருத்தித்துறை.
(29518)(11.6.3)

## சேவை நலன் பாராட்டு

திருமதி ஈஸ்வரி
சிவராசா
(பகுதித் தலைவர்
தரம்-6,7)
சேவை நிறைவு-
09.09.2013





திருமதி குணமணி
வாமதேவன்
(சைவ சமய பாட
ஆசிரியை)
சேவை நிறைவு-
14.04.2013

தமது வாழ்நாளில் 35 வருட கால ஆசிரியர் சேவையினை நிறைவு செய்து
பணியிலிருந்து ஓய்வு பெறும் மேற்படி ஆசிரியச் செல்வங்களைப்
பல்லாண்டு காலம் சிறப்புற்று வாழ இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் நலன்புரி சங்கம் (2013)
வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.
BEST WISHES
BEST WISHES
(32506)
(11.6.3)


## காந்தி தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவருக்கு கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.11

அகில இலங்கை காந்தி சேவா சங்கம், காந்தி ஜெயந்தியை முன்னிட்டு பாடசாலை மாண வர்களுக்கான கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்த வுள்ளது.

நான்கு பிரிவுகளாக நடைபெற வுள்ள இந்தப் போட்டியில் ஆரம்பப் பிரிவில் தரம் 4,5 மாணவர்கள் கலந்துகொள்ள லாம். கட்டுரை "மகாத்மா காந்தி" என்ற தலைப்பில் 120 சொற்களுடையதாக அமைய வேண்டும்.

கனிஷ்ட பிரிவில் தரம் 6,7,8 மாணவர்கள் கலந்துகொள்ள லாம். கட்டுரை 'காந்தியடிகளின் வாழ்க்கை முறை' என்ற தலைப்பில் 250 சொற்களுக்கு உட்பட்டதாக அமையவேண்டும்.

சிரேஷ்ட பிரிவில் தரம்-9,10,11 மாணவர்கள் கலந்துகொள் ளலாம்.

'காந்தியடிகளும் கிராமியப் பொருளாதாரமும்' என்ற தலைப் பில் 300 சொற்களைக் கொண்டதாக கட்டுரை அமையவேண்டும்.

அதி சிரேஷ்ட பிரிவில் தரம்-12,13 மாணவர்கள் கலந்துகொள் ளலாம்.

'காந்தியடிகளின் அகிம்சையும், அகிம்சை வழிப் போராட் டங்களும்' என்னும் தலைப் பில் 500 சொற்களுக்கு உட் பட்டதாக கட்டுரை அமைய வேண்டும்.

போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாண வர்கள் தமது கட்டு ரைகளுடன் தமது சுய விவரத்தையும் பாட சாலை அதிபரின் உறு திப்படுத்தலுடன் எதிர் வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக அகில இலங்கை காந்தி சேவா சங்கம், இல 774, ஆஸ் பத்திரி வீதி, யாழ்ப் பாணம் என்ற முக வரிக்கு அனுப்பி வைக்க லாம். (ந)


CSC-ASIAN
COMPUTER EDUCATION
ISO 9001:2008 Certified Institution - India

மீண்டும் Mega
After O/L & A/L
கொம்ப்யூட்டர், ஆங்கில
கற்கைநெறிகளுக்கான
புலமைப்பரிசில் பரீட்சை 14th Sep.

மழை காரணமாக Sep. 8ம் திகதி பரீட்சைக்கு அனுமதிகளைப்பெற்று சமூகமளிக்க முடியாத மாணவர்களுக்கும் மற்றும் புதிய மாண்வர்கள், பெற்றோர்களின் வேண்டுகோளிற்கிணங்கவும் மீள் பரீட்சை ஒன்றை எமது கல்வி நிலையம் நடாத்துகின்றது.எதிர்வரும் 14ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிமுதல் மாலை 4 மணி வரை நடைபெறும் இப் பரீட்சையில் அனைவரையும் பங்குபற்றி வெற்றிபெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

You can Win upto 75% scholarship

மாணவரிடத்தில் வரவேற்பு பெற்ற செப்டெம்பர் 8 மெகா ஸ்கொலர்ஷிப் பரீட்சை



இலவச பரீட்சை அனுமதி, மேலதிக விபரங்கள் மற்றும் விளக்கங்களுக்கு

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|
| 2G ஸ்ரான்லி வீதி, | கொடிகாமம் வீதி, | கட்டுக்காணி வீதி, | [illegible] | [illegible] சந்தி, மன்னார் வீதி, |
| 021 2225677 | 021 2262399 | 021 2270267 | 021 2283925 | 024 2226050 |

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## வீடு வாடகைக்கு

3 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதியில் HNB வங்கிக்கு அருகிலும், தனியார் பேருந்துத் தரிப்பிடத்திற்கு அண்மையிலும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 582 0084

## தேவை

கொழும்பு தொடர்மாடி கட்டடங்களில் உடனடி வேலை வாய்ப்பு
மேசன் - 1300/= தொடக்கம்
கூலி ஆள்கள் - 900/= தொடக்கம் சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 770 3186 (32509) (7.6.3)

## விற்பனைக்கு

Nissan FB 13 Brand new Diesel 64-xxxx தொடர்பு: 077 353 0368
MITSUBISI Ex Exra petrol manual GI xxxx, Full option
தொடர்பு: 077 814 2892 (சி/11975) (7.6.3)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், 3 ஆம் குறுக்குத் தெருவில் மிகவும் நல்ல சூழலில் ஒரு பரப்பும் 3.59 குளியும் கொண்ட இரண்டு துண்டுக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: (31592) (3.11.6)
071 879 8026, 077 871 5616

## விற்பனைக்கு

*ALTO KIO 2012 MODEL CAR விற்பனைக்குண்டு. GOOD Condition Japanese Technology, Low milage. 8½ Lacks to hand + lease.
*CBR 250 MODEL MOTOR BIKE விற்பனைக்குண்டு.
NPXI...... LOW MILAGE. 360,000/=
T.P:077 489 6046.

## வவுனியா நெளுக்குளத்தில் காணி விற்பனைக்கு

வவுனியா- மன்னார் வீதியில் நெளுக்குளம் [illegible] (Garments இற்கு அருகில்) [illegible] 100 [illegible] 04 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. (காணி முழுமையாகவோ/ பகுதியாகவோ) பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 071 093 3016

## விற்பனைக்கு

புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் றோட்டில் அமைந்துள்ள பிள்ளையார் கிறேசர் (சகல வசதிகளுடன்) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 048 9674

## ACCA Association of Chartered Certified Accountants

க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம்-2015
மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பத் திகதி 12.09. 2013 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
பதிவாளர்
ACCA கற்கை வழிகாட்டல் அலகு,
த.பெ. இல(P.O BOX NO)18,
யாழ்ப்பாணம், இணைப்பாளர்.

## கட்டுமானப் பணிகளுக்கு உடனடியாக வேலையாள்கள் தேவை

இடம்:Grand நல்லூர் Hotel
இல.843, K.K.S வீதி, யாழ்ப்பாணம்
எங்களுக்கு உடனடியாக ஒப்பந்தக்காரர்களும் (Sub Contractors), வேலையாள்களும் தேவை.
*ஒப்பந்தக்காரர் (Sub Contractor)
Reinforcement (இரும்பு வேலை), Form work (தச்சு வேலை), Concreting.
*திறமையான வேலையாள்கள்
Barbenders (இரும்பு வளைத்தல்), Carpenters (தச்சு வேலை), Steel workers (இரும்பு வேலை), Mason (மேசன்), Welders (வெல்டர்)
*கூலியாள்கள்
கவர்ச்சிகரமான சம்பளத்துடன், தினமும் செலவுகளுக்கு பணமும் (300/=), இன்சூரன்ஸும் வழங்கப்படும்.
தொடர்பு கொள்ளுங்கள்:
RN Constractions (pvt) Ltd, Grand Nallur Hotel Constraction Site.
No 843, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
Tel-077 809 9205, 021 567 4889


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு ஒவ்வாமையால் பலர் வைத்தியசாலையில்






கொழும்பு.செப்.11
ஹற்றன். டிக்கோயா. வனராஜா பிரதேச ஆலயம் ஒன்றில் வழங்கப்பட்ட அன்னதான உணவு ஒவ்வாமையால் சுமார் 50 பேர் வரை நேற்று செவ்வாய்க்கிழமை வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.
கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் 30 பேர் தங்கியிருந்து சிகிச்சைப் பெறுகின்றனர் என்ற வைத்தியசாலைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.
அவர்கள் வாந்தி, தலைசுற்று, வயிற்று வலி என சிகிச்சைப் பெற வந்துள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.
பாதிக்கப்பட்டவர்களில் சிறுவர்கள், முதியவர்கள் என பலர் உள்ளடங்குகின்றனர் என்றும் அவர் கூறினார். (ச)

# தற்கொலை வீதம் இலங்கையில் வீழ்ச்சி

## மன உளைச்சலால் பாதிக்கப்படுவோருக்கு உளவள சிகிச்சை வழங்கிக் காப்பாற்றலாம்

கொழும்பு,செப்.11
இலங்கையில் தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை கடந்த 17 வருடங்களுக்குள் 11.5 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. மன உளைச்சலுக்கு உள்ளான ஒருவர் தற்கொலை செய்துகொள்வதற்கு முன்பாகவே அவரிடமிருந்து வெளிப்படக்கூடிய சமிக்ஞைகளைகண்டறிந்து உரிய சிகிச்சைமுறையை பெற்றுக்கொடுக்க வேண்டியது எமது சமூகப் பொறுப்பாகும். இவ்வாறு சுகாதார அமைச்சின் பணிப்பாளர் பி.ஜி. மஹிபால தெரிவித்தார்.
1995 ஆம் ஆண்டு 8.5 வீதமாக இருந்த தற்கொலை செய்தோரின் எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டில் 3.500 வீதமாகக் குறைவடைந்துள்ளது என்று அவர் கூறினார்.
மன உளைச்சலுக்கான அறிகுறிகள் தென்படும் ஒருவரை உடனடியாக மனநல மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டியது அவரது நெருங்கிய உறவினர் அல்லது நண் பரின் பொறுப்பாகும். மனநல மருத்துவரை நாடுவதற்கு இனிமேலும் தயக்கமோ, வெட்கமோ படத் தேவையில்லை. முன்கூட்டியே உரிய சிகிச்சை யினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் வீணான உயிரிழப்புக்களைத் தவிர்க்க முடியும் என்று அவர் கூறினார்.
யாரேனும் தனது வாழ்வை முடித்துக் கொள்ளப் போவதாகக் கூறினால் அதனை விளையாட்டாக எண்ணி அலட் சியப் படுத்தக் கூடாது.
தற்கொலை செய்து கொள்பவர்களில் 65 வீதமானவர்கள் தமது நெருங்கிய உறவிடம் தான் தற்கொலை செய்து கொள்ளப்போவதாகவோ அல்லது அவ்வாறானதொரு எண்ணம் தனக்குள் வந்து போவதாகவோ கூறியிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன என்று அவர் குறிப்பிட்டார்.
பாதுகாப்பின்மை, புரிந்துகொள்ளாமை, தனிமைப்படுதல் ஆகியனவே ஒருவர் மனநோயாளி ஆவதற்குரிய பிரதான காரணமாகையால் கூடுமானவரை பெற்றோர் தமது பிள்ளைகள் எந்த வயதைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கட்டித்தழுவி அன்பைப் பரிமாறிக் கொள்வது அவசியம் என்று அவர் வலியு றுத்தினார். (ச)

# பொலிஸ் அதிகாரி வெலிக்கடை சிறைக்கு மாற்றம்

மட்டக்களப்பு,செப்.11
லஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரான பொலிஸ் அதிகாரியை கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
லஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரியை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு பதில் நீதிவான் பணித்துள்ளதையடுத்தே, அவரை கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் சனிக்கிழமை காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் வைத்து இந்தப்பொலிஸ் அதிகாரி கைதுசெய்யப்பட்டுள்ளார். காத்தான்குடிப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றைக் கையாள்வதற்காக நபர் ஒருவரிடமிருந்து இரண்டாயிரம் ரூபா லஞ்சமாக பெற்ற வேளையிலே அவர் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ரூபாவின் பெறுமதி கீழிறங்கியது



கொழும்பு.செப். 11
கடந்து சென்றுள்ள சில மாதங்களுள் அமெரிக்க டொலரொன்றுக்குச் சமாந்தரமாக இலங்கை ரூபாயின் பெறுமதி கீழிறங்கி வந்துள்ளது.
அதனால் இறக்குமதி செய்யப்படும் பொருள் பண்டங்களின் விலை மட்டங்கள் உயர்வடைந்து செல்லும் அறிகுறி தென்படுகிறது என்று வர்த்தகச் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
இது சம்பந்தமாக "லங்காதீப" வார இதழுக்குக் கருத்து வழங்கியுள்ள கொழும்பில் செயற்படும் சில முன்னணி வர்த்தக நிறுவனங்களின் நிதிக் கையாள்கைப் பிரிவுகளின் முக்கியஸ்தர்கள், கடந்த ஆண்டிலிருந்தே தொடர்ச்சியாக ரூபாயின் பெறுமதி கீழிறங்கி வரும் நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறினர்.
அவர்களது கூற்றுக்கு அமைய, 2012 ஆம் ஆண்டில் ரூபாயின் பெறுமதி அமெரிக்க டொலர் ஒன்றுக்கு சமாந்தரமாக 10.7 வீதத்தால் கீழிறங்கியிருந்தது. இந்த ஆண்டின் கடந்த 8 மாத காலத்துள் 4 வீதம் அளவில் ரூபாயின் பெறுமதி கீழிறங்கியுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.
இது சம்பந்தமாக மத்திய வங்கியின் பிரதிப் பணிப்பாளரான நந்தலால் வீரசிங்கவிடம் வினவப்பட்டபோது,
இந்த ஆண்டில் 3 வீதம் வரையிலான விகிதாசாரத்திலேயே ரூபாவின் பெறுமதி கீழிறங்கியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.
எனினும் இந்தியாவில் ரூபாயின் பெறுமதி 20 வீதம் அளவில் கீழிறங்கியுள்ளது. இந்த ரூபாயின் பெறுமதி கீழிறங்குவதால் இலங்கையின் பொருளாதாரத்துக்கு எந்தவொரு தாக்கமும் ஏற்படப்போவதில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (ச-22)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# தவறிவிட்டது

உரும்பிராயிலிருந்து யாழ் நகரிற்கு பயணத்துக்கு அமர்த்தப்பட்ட பச்சை நிற ஓட்டோவில் தேசிய அடையாள அட்டை அடங்கிய கைப் பை தவறிவிட்டது. தயவு செய்து ஒப்படைத்துதவவும்.
(11862.14.16.17)
தொடர்பு- 077 6116054

# மரண அறிவித்தல்

## திருமதி மலர்சோதி தேவராசா



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் (ஸ்காபரோவை) வசித்தவருமாகிய மலர்சோதி தேவராசா கடந்த (06.09.2013)வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - அழகம்மா தம்பதியரின் மகளும், செல்லப்பா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தேவராசாவின் அன்பு மனைவியும், ரவீந்திரன் (கனடா), Dr. வசந்தா (ஆஸ்திரேலியா), சித்ரா (ஆஸ்திரேலியா), சாந்தா(கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், தர்மாம்பிகை, தனபாலரட் ணம், Dr. ராஜ்குமார், பிரபானந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், துஷானி, ஜெய்சன், Dr. றொசான், கிறிசான், கிறிஸ்கா, கீரன், நீதன், நிஷானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற அருமைத்தவராசா (லண்டன்), பெருந்தவராசா(ஜேர்மனி), ஜெகசோதி(இலங்கை), இந்திராணி (கிளி-இலங்கை), தேவராணி(குஞ்சு-இலங்கை), அன்னராணி(பட்டு-இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சரஸ்வதி, பெரியதம்பி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (14.09.2013) சனிக்கிழமை மாலை 5.00 மணி தொடக்கம் 9.00 மணி வரைக்கும் 3280 SHEPPARD AUE F2 SCARBOROUGH வில் அமைந்துள்ள HIGHLAND FUNERAL HOME இல் பார்வைக்கு வைக்கப்பட்டு (15.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி தொடக்கம் 11.30 மணிவரை இறுதிக் கிரியைகள் நடைபெற்று 1591 ELGINMILLS E RICHMONDHILL இல் அமைந் துள்ள CEMETERY இல் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மகள் - 4164006658,
மகன் - 5148254299,
4164317730, 4164312816

(31633.14.16.17)

தகவல்:
குடும்பத்தினர்,
கணவர், பிள்ளைகள்,




இலங்கையில் சர்வதேச உயர்கல்வி கற்கை நெறிகளை வழங்கும் மிகச்சிறந்த உயர்கல்வி நிறுவனம் எனும் Edexcel, UK நிறுவனத்தின் சான்றிதழுடன் வெற்றி நடைபோடும் BCAS Campus வழங்கும் Access Programme (Degree Foundation) எனும் பாடநெறியினை GCE A/L பரீட்சையினை எழுதி முடித்திருக்கும் மாணவர்களாகிய உங்களுக்கு கணனி, ஆங்கிலம் மற்றும் ஆளுமை விருத்தி போன்றவற்றில் திறமைகளை விருத்தி செய்வதற்கான முறையான பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதோடு 6 சர்வதேச வரவேற்பை பெற்ற சான்றிதழ்களையும் இப்பயிற்சி நெறி முடிவில் பெற்றுக் கொள்வதற்கான அரிய வாய்ப்பும் கிடைக்கின்றது.

அத்தோடு குறுகிய காலத்திற்குள் UK, USA, Australia, Canada போன்ற நாடுகளிலுள்ள பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களினூடாக (Hons) Degree பட்டப்படிப்புகளையும் பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பத்தை இதன் மூலம் இலகுவாக கிடைக்கிறது.

IELTS
Dip. in English

கொழும்பிலிருந்து வருகை தரும் ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் ஐரோப்பிய ஆசிரியர்களின் நேரடி வழிகாட்டலில் முழுமையான ஆங்கிலச் சூழலில் பாடநெறிகள் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படுகின்றன | FREE Study Pack
உயர்கல்வி மற்றும் உயர்தரத்திற்கு பின்னரான கற்கை நெறி தொடர்பான இலவச ஆலோசனைகளுக்கு BCAS Jaffna Campus இனை நாடுங்கள்.

5 Certificates by BCAS | 2 Certificates from Edexcel, UK

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Jaffna Campus
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910 | E: info@bcas.lk
தொடர்புகளுக்கு 0777 102131

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் நீதிபதி சுனில் பிணையில் விடுதலை

கொழும்பு,செப் 11

ஹோமாகம மாவட்ட நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதி சுனில் விக்கிரம அபேசிங்க மற்றும் கான்ஸ்டபிள் மஹிந்த கித்சிறி ஆகியோர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஹோமாகம மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட வழக்கொன்றின் தீர்ப்பைப் பிரதிவாதிக்குச் சார்பாக வழங்குவதற்காக மூன்று இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றுக் கொண்ட சம்பவம் தொடர்பிலேயே இவர்கள் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் நீதிவானிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான அறிக்கை ஆணைக்குழுவின் சட்டப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், சட்டப் பிரிவின் தீர்மானத்தின் பின்னர் இதனை நீதிமன்றத்தில் அறிவிக்கவுள்ளதாகவும்இதன்பொருட்டுநாளொன்றை ஒதுக்குமாறும் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் கேட்டுக்கொண்டனர்.

இந்த விடயம் தொடர்பில், இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திடம் விசாரிக்க வேண்டுமென முன்னாள் நீதிபதியின் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுல சூரிய நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். இதற்கான கால அவகாசத்தை வழங்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கமைய, எதிர்வரும் நவம்பர் 26 ஆம் திகதிக்கு வழக்கு விசாரணையை ஒத்திவைத்த நீதிவான், சந்தேகநபர்கள் இருவரையும் பிணையில் விடுவித்துள்ளார். (கு)

## பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு கிடைத்தன உதவிகள்

மட்டக்களப்பு,செப்.11

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பப் பெண்களுக்கு சுயதொழிலுக்கான உதவிகள் திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மார்க்கண்டு நடராசாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சுயதொழிலுக்கான உதவிகள் வழங்கப்பட்டன.

மண்முனை, தென்னெருவில் பற்று பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 6 பேருக்கு காசோலைகளும் 3 பேருக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு பயனாளிக்கும் 10,000 ரூபாவை கொண்ட காசோலை வழங்கப்பட்டது. ஏனைய 3 பயனாளிகளில் ஒவ்வொருவருக்கும் 25,000 ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. (ச)

# கிழக்கில் ஆள்பதிவுத் திணைக்கள பிராந்திய அலுவலகம் திறப்பு



மட்டக்களப்பு,செப்.11

கிழக்கு மாகாணத்தில் ஆள்பதிவுத் திணைக்களத்தின் மற்றுமொரு பிராந்திய அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிராந்திய அலுவலகம் மட்டக்களப்பு பிரதேச செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இந்தப் பிராந்திய அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு இரண்டு வார காலத்தில் அடையாள அட்டைகளை பெற முடியும் என்று ஆள்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் ஆர். எம்.எஸ்.சரத்குமார தெரிவித்தார்.

ஆள்பதிவுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகமொன்று அண்மையில் வவுனியாவிலும் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஜெனிவாவின் அடுத்த

உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், தன்னைச் சந்தித்த சமூகப் பிரதி நிதிகள் அரச படைகளால் அச்சுறுத்தப்படுவதற்கும் கடும் கண்டனமும் தெரி வித்துள்ளார்.

ஜெனிவாவில் நவியின் கருத்துக்கு ஆதரவாக அணி திரண்ட அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள், இலங்கை மீது கடும் கண்டனக்கணைகளைத் தொடுத்தன.

இதுதொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன வென்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் நேற்று 'உதயன்' பத்திரிகை வினவியபோது,

"இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றச்சாட்டுகள், மனித உரிமை மீறல்கள் குறித்து சுயாதீனமான சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். அப்போதுதான் உண்மையைக் கண்டறியலாம் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை கொழும்பில் கடந்த மாதம் சந்தித்தபோது நாம் வலியுறுத்தியிருந்தோம்.

இலங்கைப் பயணத்தை முடித்துக்கொண்டு நவநீதம்பிள்ளை கொழும்பிலிருந்து வெளியேறும் போது, உள்நாட்டு விசாரணை நம்பத்தகுந்ததாக இருக்கவேண்டும் என்றும் இல்லையேல், சர்வதேச விசாரணை தவிர்க்க முடியாத ஒன்று என்றும் கூறியுள்ளார்.

இந்நிலையில், இருதரப்புகள் (அரச படைகள், விடுதலைப் புலிகள்) மீதும் குற்றச்சாட்டுகள் இருப்பதால் உள்நாட்டு விசாரணைகள் நீதி, நியாயமற்று நடத்தப்படும். இந்த விசாரணைகளை உலக நாடுகளும் ஏற்றுக் கொள்ளமாட்டா. சர்வதேச சுயாதீன விசாரணையையே உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளும்.

அதேவேளை, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உண்மைகளை வெளிக்கொணர வேண்டுமெனில், இலங்கை அரசு பொறுப்புக்கூறியே ஆக வேண்டும். இதனைத் தட்டிக் கழிக்க முடியாது.

ஐ.நாவில் இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களிலும் பொறுப்புக்கூறல் வலியுறுத்தப் பட்டுள்ளது. பக்கச்சார்பற்ற சுயாதீன விசாரணையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணை இறுதியில் சர்வதேச விசாரணையாகவே அமையும்.

இலங்கை அரசின் பொறுப்புக் கூறலை ஜெனிவாவில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, அடுத்தகட்ட அறிவிப்பாக, "இலங்கை அரசு சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளிலிருந்து தப்பமுடியாது" என்றே கூறுவார். இதனைத்தான் நாமும் எதிர்பார்க்கின்றோம்.

அதேவேளை, நவநீதம்பிள்ளை எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை வலுவானதாக இருக்கும் என்றும் நாம் நம்புகின்றோம். எனவே, சர்வதேசத்தின் பிடியிலிருந்து இலங்கை அரசு தப்ப முடியாது" என்றார். (கு)

### வடக்கு

கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர்களான டலஸ் அழகப்பெரும, சுசில் பிரேமஜயந்த ஆகியோர் மேற்கண்ட வாறு தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிவிப்பானது தேர்தல் விஞ்ஞாபனமல்ல எனக் குறிப்பிட்டு அது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் டலஸ் அழகப் பெரும,

"யுத்தத்துக்குப் பின்னர் பிரிவினைவாதத்தை அறிக்கையாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எழுதியுள்ளது. 1976 ஆம் ஆண்டு மேற் கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின் முன்னேற்ற அறிக்கையாகும். இதை தேர்தல் விஞ்ஞாபனம் எனக் குறிப்பிட முடியாது. தமிழ் மற்றும் சிங்கள மக்களைத் தூரப்படுத்தும் உபாயமாகும்" என்று சுட்டிக்காட்டினார்.

"அதேவேளை, சர்வதேசத்தின் உதவியை விஞ்ஞாபனத்தினூடாக கூட்டமைப்பு கோரியுள்ளது. இது பயங்கரமான யோசனையாகும். வடக்கில் ஆட்சியமைப்பது தொடர்பில் ஐ.தே.கவுக் கும், கூட்டமைப் புக்குமிடையில் இரகசியப் பேச்சு நடைபெற்றுள்ளது எனத் தகவல்கள் வெளியா கியுள்ளன.

எது எப்படியிருந்த போதிலும், பிரிவினையை ஊக்குவிக்கும் வகையிலேயே கூட்டமைப்பு தேர்தல் அறிவிப்பை விடுத் துள்ளது. இதன் மூலம் 30 வருட போரின் மூலம் அவர்கள் எந்தவொரு பாடத்தையும் கற்கவில்லை என்பது புலனாகின்றது" எனவும் அமைச்சர் கூறினார்.

தமிழர்கள் தாக்கப் பட்ட தாக கூட்டமைப்பு அறிவித்துள்ள 77, 81, 83 ஆகிய ஆண்டுகள் ஐ.தே.கவின் ஆட்சிக்காலங்களாகும். கூட்டமைப்பின் விஞ்ஞாபனமானது வடக்கு இளைஞர்களுக்கான சயனைட் குப்பியாகும்" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேவேளை, கூட்டமைப்பின் தேர்தல் அறிவிப்புத் தொடர்பில் இதன்போது கருத்து வெளியிட்ட ஆளுந்தரப்பின் வடக்கு மாகாணசபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த,

"கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தவறானது என்பதை நிரூபிக்கவேண்டுமானால், அதை தோற்கடிக்கவேண்டும். அதற்கான போராட்டத்தில் அரசு ஈடுபட்டுள்ளது. வடக்கு இளைஞர்களும், புத்திஜீவிகளும் அதை ஏற்கமாட்டார்கள் என நம்புகிறோம்" என்றார்.

### ஜெனிவாவில்

பொலிஸாரை கோரியுள்ளனர்.

இது பொய்யான புகைப்படங்கள் என ஜெனிவாவில் உள்ள இலங்கைப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே பொலிஸாரின் அனுமதி வழங்கியிருந்த போதிலும் நேற்றுக் காலையில் அங்கு வந்த பொலிஸார் கூடாரம் ஒன்றிற்குள் இந்தப் புகைப்படங்களை வைக்குமாறும், கோரமான காட்சிகளைக் கொண்ட புகைப்படங்களை அதிலிருந்து அகற்றுமாறும் தெரிவித்ததாக இதன் ஏற்பாட்டாளரான மருதையா தெரிவித்தார்.

இப்புகைப்படக் காட்சி காலை 7.30மணி தொடக்கம் மாலை 6மணி வரை இடம்பெற்று வருகிறது.

### மோசடி

சவுந்தரநாயகம் ஆண்டகையை நேற்றுச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த ஆஸ்திரேலியத் தூதுவர் றொபின் மூடி அம்மையார் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேசினார்.யாழ். ஆயரையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நீதியாக நடைபெறுமா? தேர்தலின் போது ஏதாவது குழப்பங்கள் ஏற்படுத்தப்படுமா? என்பன தொடர்பில் ஆஸ்திரேலியத் தூதுவர் யாழ் ஆயரிடம் கேட்டறிந்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது ஆயர் சில விடயங்களைத் தூதுவருக்கு எடுத்து விளக்கியுள்ளார். வடக்கு மாகாணத் தேர்தலை வடக்கு மக்கள் மிக முக்கியமான தொன்றாகக் கருதுகின்றனர். எமது பிரச்சினைகளை உலகுக்கு எடுத்துச் சொல்ல வடமாகாண சபை ஒரு பலமான ஆயுதம். எனவே இதில் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று ஆயர் தூதுவரிடம் கூறினார்.

அரச அதிபரையும் சந்திப்பு

அத்துடன் யாழ். மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சுந்தரம் அருமைநாயகம் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரும் வடமாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளருமான சிவன்சுதன் அச்சுதன் ஆகியோரையும் ஆஸ்திரேலியத் தூதுவர்சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புக்களின் போது தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பாக அவர் ஆராய்ந்துள்ளார் அதனை விட தேர்தல் வன்முறைகள் தொடர்பிலும் தூதுவர் கேட்டறிந்துள்ளார். (கு-4-5)

### அனைத்து

பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான நல்லிணக் கம், தேசிய நல்லிணக்கத்தின் ஒரு முக்கிய அம்சமாக அமையும் என்ற நம்பிக்கையுடன் இரு சமூகங்களினதும் நல்லிணக்க முயற்சியாக இந்தப் புரிந் துணர்வு உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

வடமாகாணத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட அனைத்து முஸ்லிம்களும், அவர்களின் சந்ததிகளும் இயன்றவரை விரைவாக பாரம்பரிய குடியிருப்புக்களில் மீளக்குடியமர்ந்து வாழ்வாதாரத் தொழில்களை மீண்டும் தொடர்வதை உறுதிப்படுத்துவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பற்றுறுதி கொண்டுள்ளது.

வடக்குமாகாண சபையின் நிர்வாகக் கட்டமைப்புக்களில் முஸ்லிம்களின் போதிய பங்குபற்றுதலை உறுதிப்படுத்த வேண்டும்.

நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிடும் முஸ்லிம் பிரதிநிதி கணிசமான வாக்குகளைப் பெற்றும் தெரிவு செய்யப்படாதவிடத்து நியமன முறைமூலம் அவரது பிரதிநிதித் துவத்தை உறுதிப்படுத்துதல் பற்றிச் சாதகமான முறையில் பரிசீலிக்கப்படும் என்று அந்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவும், நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் தலைமையிலான கூட்டமைப்பு சார்பாக மத்திய நிறைவேற்றுக் குழுத்தலைவர் எம். பி. எம். பிர்தௌஸும் கையொப்பமிட்டுள்ளனர்.(கு-5)

### வவுனியாவில்

காப்பு பலப்படுத்தப்பட் டுள்ளது.

வவுனியா வைரவப் புளியங்குளம் மைதானத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக வவுனியா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்து பரப்புரையை ஆரம்பித் துவைப்பார் ஜனாதிபதி. இந்த நிகழ்வில் பஸில் ராஜபக்ஷ கலந்துகொள்ள மாட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-402)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### இராசா நல்லநாதன்

(ஓய்வுபெற்ற இ.போ.ச OIC பருத்தித்துறை டிப்போ)



வடமராட்சி பெரும்பற்று இமையாணன், உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது இல. 12, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதியில் வசித்து வந்தவருமாகிய இராசா நல்லநாதன் நேற்று (10.09.2013) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் (கனகம்மா) அன்புக் கணவரும், சிதம்பரநாதன் மற்றும் காலஞ்சென்ற தில்லைநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், லோகநாதன், சற்குணநாதன் நதிராணி, கோகிலநாதன், பஞ்சநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுராதேவி, தயாளினி, காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் நவீனா, சகுந்தலை ஆகியோரின் பாசமிகு மாமனும், திசாந்தன், தர்சிகா, தர்ஷா, விதுஷன், குகசாந்தி, தாமிரன், தாருகன் ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2013) புதன் கிழமை மு.ப 11 மணியளவில் பிறவுண் வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(31661)
(10,18,14)

## கண்ணீர் அஞ்சலி



மல்லாகம் அருள்மிகு பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரர் ஆலய தர்மகர்த்தாவாகிய

### M.K. தவராஜா

(ஓய்வுபெற்ற உப அதிபர்)

அவர்களது மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வீரபத்திரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரர் ஆலயம் மல்லாகம்
ஆலய பரிபாலன சபையினரும், தொண்டர் சபையினரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம், செப்.11
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணத்துச் சமர்' உதைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் வல்லை விளையாட்டுக் கழகம், ரெட்றெஞ்சஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்றுள்ளன.

வல்லை விளையாட்டுக் கழக அணிக்கும் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் வல்லை விளையாட்டுக் கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ரெட்றேஞ்சஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இமையாணமத்தி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் ரெட்றேஞ்சஸ் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## நவசக்தி உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்

# ஞானமுருகன், மனோகரா வென்றன



மாங்குளம், செப்.11
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் தமது 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம், மனோகரா விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்றுள்ளன.

முதலாவது ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும், நியூட்டன் விளையாட்டுக் கழக 'ஏ' அணியும் மோதின.

ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்தியது ஞானமுருகன் விளையாட்டுக் கழகம்.

ஆட்டத்தின் 17 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரர் தவரூபன் ஒரு கோலைப் பெற்று அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து 19, 27 ஆவது நிமிடங்களில் சுபாஸ் இரு கோல்களையும், 35 ஆவது நிமிடத்தில் காண்டீபன் ஒரு கோலையும் பெற்று ஞானமுருகன் அணியை முன்னிலைப்படுத்தினார்.

ஆட்டநேர முடிவில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்றது.

மற்றைய ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பமாகி 12 ஆவது நிமிடத்தில் பாரதி அணி வீரர் அரவிந்தன் தமது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். பின்னர் எழுச்சி கண்ட மனோகரா விளையாட்டுக் கழகம் தொடர்ச்சியாகக் கோல்களைப் பெற்றது.

3 ஆவது நிமிடத்தில் செந்தூரனும், 9 ஆவது நிமிடத்தில் தனேஸும், 17 ஆவது நிமிடத்தில் சாதுஜனும் அடுத்தடுத்துக் கோல்களைப் பெற்று மனோகரா விளையாட்டுக் கழகத்தை முன்னிலைப்படுத்தினர்.

பாரதி அணியினர் தொடர்ந்து போராடினர். 22 ஆவது நிமிடத்தில் கமதீபனும், 28 நிமிடத்தில் தனரூபனும் ஒவ்வொரு கோலைப் பெற பாரதி அணி 3 கோல்களைப் பெற்றுக் கொண்டது.

இடைவேளையின் பின்னர் அல்வாய் பாரதி அணி வருர் கமலதீபன் 3 ஆவது நிமிடத்தில் கோலைப் பெற்றுக் கொடுக்க ஆட்டம் சமநிலையானது.

38 ஆவது நிமிடத்தில் மனோகரா விளையாட்டுக் கழக வீரர் தனேஸ் சிறப்பான கோல் ஒன்றைப் பெற்றுக் கொடுக்க மீண்டும் முன்னிலை பெற்றது மனோகரா விளையாட்டுக் கழகம்.

அதன் பின்னர் இரு அணியின் கோல்பெறும் முயற்சிகள் தோல்வியில் முடிய 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது மனோகரா விளையாட்டுக் கழகம். (ற-422)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.11
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணத்துச் சமர்' உதைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று புதன்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள்:

பி.ப.3.45 மணி
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

பி.ப.4.45 மணி
கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகம் எதிர் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம். (ற-23)

+++++

யாழ்ப்பாணம்,செப்.11
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்த் தொடரில் இன்று புதன்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்.

பி.ப.3.30 மணி
சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் எதிர் பொமர்ஸ் விளையாட்டுக் கழகம்.

பி.ப.4.30 மணி
டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் வல்வெட்டி கரணாகரன் விளையாட்டுக் கழகம். (ற-23)

## யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி தொடர் வெற்றி

யாழ்ப்பாணம், செப்.12
அப்பாந்தோட்டை விளையாட்டுக் கழகம் அகில இலங்கை ரீதியாக நடத்தும் கல்டன் வெற்றிக் கிண்ண கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் பொலிஸ்பாக் மைதானத்தில் நடைபெற்ற ஆட்டங்களில் யாழ்.மாவட்ட அணி இரு ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ளது.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியை எதிர்த்து வாசின்யன்ஸ் கூடைப்பந்தாட்ட அணி மோதியது.

அதில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி 69:60 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியும் றவென்ஸ் கூடைப்பந்தாட்ட அணியும் மோதிக் கொண்டன.

அதில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி 82:30 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ற-23)



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டப் போட்டிகளில் முல்லைத்தீவ மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர். பங்குபற்றவுள்ள வீர, வீராங்கனைகள் வித்தியாலய அதிபர், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களுடன். (ற-23)

## புரட்சி வி.கழகம் சம்பியன்

யாழ்ப்பாணம்,செப்.11
வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் புளியங்குளம் விளையாட்டுக் கழகம் பிரதேச செயலகம், அரச திணைக்களங்களுக்கு இடையே நடத்தப்பட்ட மென்பந்து சுற்றுத் தொடரில் புளியங்குளம் புரட்சி விளையாட்டுக்கழக அணி முதலாமிடத்தையும் புளியங்குளம் பொலிஸ் அணி இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டன. (ற-23)


**வடமாகாண சபைத் தேர்தல் 2013**



**யாழ்மாவட்ட**
**ஜனநாயக ஐக்கிய முன்னணி**
**வேட்பாளர்**



**அருள்ஜெயந்திரன்**
**(சண்ஜெ)**

(சண்ஜெய் நிறுவனங்களின் உரிமையாளரும் முன்னாள் பிரபல வர்த்தகர் ச.வே. சண்முகம்பிள்ளையின் (நீர்கொழும்பு) பேரனும், முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் யாழ்–கிளிநொச்சி டாக்டர் இ.அருள்பிரகாசத்தின் மகனும்)



X 2

"தமிழர்களின் உரிமைகளை படிப்படியாக வென்றெடுக்கக் கூடிய துணிச்சல் மிக்க ஒரே வேட்பாளர்"

உங்கள் தெரிவு (இரட்டை இலைக்கும்), இல. 2 இற்கும்.

அச்சமில்லாத பிச்சையல்லாத தமிழ்ச் சமூகத்தை உருவாக்க ஒன்றுபடுவோம்



# VACANCIES @ ESOFT

Shaping Lives, Creating Futures.

**Join SriLanka's #1**

JAFFNA | KILINOCHCHI | NELLIADY

**Lecturers in IT** (Full Time)

Would be responsible to conduct lecturers for Diplomas, Higher Diplomas and Degree Programmes. Must be a graduate in IT/Computing or a higher Diploma holder. Experience is not a must, but would be an advantage. Area of Expertise we are looking for include Programming in JAVA, C#,.Net, ASP.Net, C,C++, Software Engineering, Hardware, Networking & Database Management.
Good perfomers have the opportunity to advance to the level of Programme Manager.

**Business Development Excecutive**

- Generate new Business.
- Handle the customer relationships
- A passion to succeed and archieve targets
- Possition carry a an attractive remuneration Package on par with industry rate.
- Age 22 to 30 years

**Salary Benifits**

Successful candidates will be paid a salary higher than industry rate. other benefits are also available

**How to Apply**

Send us a CV to reach us within 07 Days of this advert, to jaffna@esoft.lk. mentioning the Post and Preferred Branch in the Subject line of your email.

ESOFT Shaping Lives, Creating Futures.

**ESOFT METRO CAMPUS - JAFFNA**
No.137, K.KS, Road, Jaffna | Tel : 021 222 4142 | 077 309 9 308
web : www.esoft.lk E-mail : jaffna@esoft.lk



# பகிரங்க ஏல விற்பனை

மருதனார்மடம் சுன்னாகத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தில் பட்டியல் படுத்தப்பட்ட பின்வரும் பொருள்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் 13.09.2013 அன்று காலை 9.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். பொருள்களை வாங்குபவர்கள் அதே தினம் மாலை 4.00 மணிக்கு முன்னர் அலுவலக வளாகத்திலிருந்து பொருள்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| Laser Printer - | 02 Nos | Steel Cuboard | 03 Nos |
| UPS – 600VA | 04 Nos | Computer Table | 01 No |
| Fax Machine | 02 Nos | Chair | 19 Nos |
| Moniter – CRT | 07 Nos | Table | 03 Nos |
| Moniter - LCD | 01 No | Vehicle - Tyre | 42 Nos |
| System unit | 07 Nos | Vehicle - Battery | 04 Nos |

**வ.செல்வராசா,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**மாகாணக் கல்வித் திணைக்களம்,**
**வட மாகாணம், மருதனார் மடம், சுன்னாகம்.**

(சி/11977)
(10.16.14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது பணிகளை ஆற்றவில்லை மதிவாணன்

## இலங்கை கிரிக்கெட் சபை குற்றச்சாட்டு

பதவி விலகிய இலங்கை கிரிக்கெட் சபையின் உப தலைவர் கே.மதிவாணன் மீது இலங்கை கிரிக்கெட் சபை விமர்சனங்களை முன்வைத்துள்ளது. தனக்கு வழங்கப்பட்ட பணிகளை அவர் சரிவர ஆற்றியிருக்கவில்லை என்றும் இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபை தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற இலங்கை கிரிக்கெட் சபையின் செயற்குழுக் கூட்டத்தின் பின்னரே இந்த விமர்சனங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தின் போது இலங்கை கிரிக்கெட் சபையின் உப தலைவர் கங்காதரன் மதிவாணனின் பதவி விலகல் கடிதம் கருத்திற் கொள்ளப்பட்டது. இதன்போது அவரின் பதவி விலகலை இலங்கை கிரிக்கெட் சபையின் செயற்குழு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.



அது தொடர்பாக ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள இலங்கை கிரிக்கெட் சபை, தனது பதவி விலகல் குறித்து கே.மதிவாணன் கூறினார் என்று தெரிவித்து ஊடகங்களில் பல கருத்துக்கள் வெளியாகியிருந்ததாகவும், அவை குறித்து வருத்தமடைவதாகவும் தெரிவித்துள்ளது.

தனது பதவி விலகலுக்கான காரணங்களில் ஒன்றாக அவர், தனக்கு போதுமானளவு பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை எனத் தெரிவித்திருந்ததைச் சுட்டிக் காட்டிய இலங்கை கிரிக்கெட் சபை, அந்தக் கருத்து முழுமையாகத் தவறானது எனத் தெரிவித்தது.

இலங்கை கிரிக்கெட் சபையின் உப தலைவர் பதவி தவிர, இலங்கை கிரிக்கெட் சபைக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் உப செயற்குழுவான அனுசரணைக் குழுவின் தலைவராக கே.மதிவாணன் நியமிக்கப்பட்டிருந்தார் என்றும், அது தவிர, தேசிய அபிவிருத்தி செயற்குழு, கிரிக்கெட், பயிற்றுவிப்பு உப செயற்குழு ஆகியவற்றின் உறுப்பினராகவும் மதிவாணன் நியமிக்கப்பட்டிருந்தார் என்றும் தெரிவித்துள்ளது.

அந்தக் காலத்தின் போது இடம்பெற்ற 9 செயற்குழுக் கூட்டங்களில் இரண்டே இரண்டு செயற்குழுக் கூட்டங்களில் மாத்திரம் கே.மதிவாணன் பங்குபற்றினார் என்று தெரிவித்துள்ள இலங்கை கிரிக்கெட் சபை, அது தவிர, உப செயற்குழுக்களின் எந்தவொரு கூட்டத்திலும் மதிவாணன் கலந்து கொண்டிருக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டியுள்ளது. (ற)

# ஐ.பி.எல். ஆட்டங்கள் இலங்கையில்?

இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் அடுத்த வருடத்திற்கான ஆட்டங்கள் இலங்கையில் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்திய ஊடகங்கள் சில இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளன.

அடுத்த வருடத்திற்கான ஆட்டங்கள் அனைத்துமோ அல்லது சில ஆட்டங்களோ இலங்கை, பங்களாதேஷ் இரு நாடுகளிலோ அல்லது இரண்டு நாடுகளில் ஒரு நாட்டிலோ இடம்பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் மூத்த அதிகாரியொருவரை மேற்கோட்காட்டி வெளியிடப்பட்டுள்ள இந்தச் செய்தியின் அடிப்படையில், அடுத்த வருடம் இந்தியாவில் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல்களின் காரணமாகவே இந்த மாற்றம் பற்றி ஆராயப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வருடத்திற்கான தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும் இது தொடர்பான உறுதியான செய்தி அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுவதோடு, அதற்கு முன்பதாகவே அதுகுறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, சில ஆட்டங்களை ஆரம்பத்தில் இந்தியாவில் நடத்திவிட்டு அதன் பின்னர் இலங்கையிலோ, பங்களாதேஷிலோ மிகுதி ஆட்டங்களை நடாத்துவதற்கோ அல்லது சில ஆட்டங்களை ஆரம்பத்தில் இலங்கையிலோ, பங்களாதேஷிலோ நடத்திவிட்டு, அதன் பின்னர் இந்தியாவில் ஆட்டங்களை நடத்துவதற்கோ எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது. (ற)

# சிறந்த துடுப்பாட்ட வீரர் ஹசீம் அம்லாவுக்கு விருது




தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் ஹசீம் அம்லாவுக்கு சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் சார்பிலேயே இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுதவிர சிறந்த டெஸ்ட் வீரர், களத்தில் சிறப்பான அணுகுமுறைக்கான வீரர் உட்பட மொத்தம் 4 விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை ஒருநாள் ஆட்டத்தில் சிறந்த வீரராக டிவில்லியர்ஸ் தேர்வாகியுள்ளார். '20/20' ஆட்டத்துக்கான சிறந்த வீரர் விருதை ஸ்டெயின் தட்டிச்சென்றார். அறிமுக வீரர் விருதுக்கு கெய்ல் அபோத் தெரிவாகி உள்ளார். (ற)

# அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் கிண்ணம் நடால் வசம்



அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் ரபேல் நடால் சம்பியன் பட்டம் வென்றார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது.

அதில் ஆண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரரான நோவக் ஜோக்கோவிச்சை ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் எதிர்கொண்டார்.

அந்த ஆட்டத்தில் 6:4,3:6,6:4,6:1 என்ற செற் கணக்கில் உலகின் முதல் நிலை வீரரான ஜோகோவிக்கை வீழ்த்தி ரபேல் நடால் சம்பியன் பட்டம் வென்றார்.

அதன் மூலம் அவர் அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரில் இரண்டாவது முறையாக கிண்ணத்தை கைப்பற்றியுள்ளார். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் நடால் வெல்லும் 13 ஆவது பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்கள் இறுதிப் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் வென்று சம்பியன் பட்டத்தைப் பெற்றார். (ற)

# சச்சினுக்கு எதிராக தீவுகள் புதுவியூகம்



இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, அந்தத் தொடரில் சச்சினை ஆட்ட[illegible] [illegible] செய்வதற்கான புதிய உத்திகளுடன் களமிறங்கவுள்ளது என்று கூறப்படுகின்றது.

மேற்கிந்திய தீவுகள் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாட உள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகும் இந்த ஆட்டங்கள் நவம்பர் 27 திகதி வரை நடைபெற உள்ளன.

இதுவரையில் 198 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ள சச்சின் இந்தத் தொடரில் 200ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடவுள்ளார்.

இந்தநிலையில் சச்சினை இந்த தொடரில் அதிக ஓட்டங்கள் எடுக்க விடக்கூடாது என்பதில் மேற்கிந்திய தீவுகள் அணி முனைப்பு காட்டத் தொடங்கியுள்ளது.

அதற்காக அந்த அணி சுழற் பந்து வீச்சில், தூஸ்ரா வகையை கையாண்டு சச்சினுக்கு நெருக்கடி கொடுக்க திட்டமிட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

அந்த வகையான பந்து வீச்சில் அசத்திய பாகிஸ்தான் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் சாக்லைன் முஸ்தாக்கை சிறப்பு பயிற்சியாளராக மேற்கிந்திய தீவுகள் அணி நியமித்துள்ளது.

இவர் சுனில் நரேன், டியோன் நாஸ், ஷில்லிங்போர்டு, தேவேந்திர பிஷூ ஆகியோருக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கியுள்ளார்.

இதுதொடர்பாக சாக்லைன் முஸ்தாக் கூறுகையில்,

"இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடுவது என்பது எல்லா அணிகளுக்குமே சவாலானது தான். இந்த தொடர் சச்சினுக்கு 200 ஆவது டெஸ்ட் ஆட்டமாக அமைய உள்ளதால் பந்து வீச்சாளர்களுக்கு கூடுதல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

சச்சின் போன்ற வீரர்களுக்கு பந்து வீசும் போது தான், நமது திறமை என்னவென்பது தெரியவரும். சுனில் நரேன், ஷில்லிங்போர்டு உள்ளிட்ட சுழற் பந்து வீச்சாளர்களுக்கு ஒரு சில ஆலோசனைகள் வழங்கியுள்ளேன்" என்று தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரவரிசையில் அம்லா முதலிடம்



சர்வதேச கிரிக்கெட் சபை டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.
தரவரிசையில் தென்னாபிரிக்க வீரர் ஹசீம் அம்லா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.
அவரைத் தொடர்ந்து மேற்கிந்திய தீவுகளின் சந்தர் போலும், தென்னாபிரிக்காவின் டி வில்லியர்ஸும் இடம்பெற்றுள்ளனர்.
இந்திய வீரர் புஜாரா சரிவை சந்தித்துள்ளார், அவர் 6ஆம் இடத்திலிருந்து 7ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.
பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில், தென்னாபிரிக்க வீரர்களான டேல் ஸ்டெயின், பிளாந்தர் ஆகியோர் முதல் இரு இடங்களைப் பிடித்தனர்.
இந்திய அணியின் அஸ்வின் 8ஆவது இடத்தில் உள்ளார். அதேசமயம் சிம்பாப்வேக்கு எதிராக சிறப்பாக பந்து வீசிய பாகிஸ்தான் வீரர் சையது அஜ்மல் 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். (ற)

COLLEGE OF PHYSICS
பழம் றோட் கந்தர்மடம்
A/L DAY CLASS PHYSICS ஆரம்பம் 11.09.2013 3.30pm
A/L 2015 நீர் நிலையியல் ஆரம்பம்- 12.09.2013
N. Kapilan B.Sc 6.30am - 7.30am

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

சிறுநீரகம் தேவை
$0^+$ அல்லது $0^-$ இரத்தவகை
சிறுநீரகம் தேவை.
தொடர்பு- 0777 040867

ST ANTONY 'S
கணினி பழுதுபார்த்தல்
LAPTOP, DESKTOP மற்றும் சகலவித
மான கணினிகளும் எம்மால் உத்தர
வாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.
அழையுங்கள்- 075 0698608
187 K.K.S. வீதி, யாழ். நகர்
உங்கள் பழைய கணினியை கொடுத்து
9000/= விலையில் ஒரு கணினியைப்
பெற்றுக்கொள்ள முடியும்.

கணனி, முகாமைத்துவ, ஆங்கில கற்கை
நெறிகளுக்கான புதிய பிரிவு ஆரம்பம்
12.09 .2013 காலை 10.00மணி
மேலதிக விபரங்களுக்கு: 021 4922 741
IIS INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2631

தொழில் வழிகாட்டல் பயிற்சிப்பட்டறை
A/L பூர்த்தி செய்த மாணவர்களுக்கு பகுதிநேர,
நிரந்தர தொழிலுக்கான பயிற்சிப் பட்டறைகள்
நடைபெறவுள்ளது பதிவுகளுக்கு முந்துங்கள்
தேசிய தொழில் வங்கி Nation Job Bank
0710 920 920
www.nationjobbank.com

hp pavilion-g6-2311Tu
i5-3230m 3rd, 4Gb Ram, 750Gb HDD, 15.6' LED, DOS. Rs82,500/=

hp pavilion L5-NB-E016TU
i3-3110M 3rd, 4Gb Ram, 500Gb HDD, 15.6' LED, Dos Rs68,000/=

hp 242 G1
i3 3rd, 4Gb Ram, 500Gb HDD, 15.6' LED F.Print, Dos. Rs71,000/=

Dell inspirion-3521
i3-3227 3rd, 4Gb Ram, 500Gb HDD, 15.6' LED Win-8 Original Rs73,500/=

8GB Pendrive, Anti virus for 1Year, Headphone, Mouse, Lap Bag ➤ Free With Lap

D.Core 2.9Ghz 3rd, intel 61 M/B, 2Gb Ram, 500Gb HDD, 19' LED, Dcp Ups Speaker, keyboard&mouse Rs48,500/=

i3-3210 3.3Ghz 3rd, intel 61 M/B, 2Gb Ram, 500Gb HDD, 19' LED, Dcp Ups Speaker, keyboard&mouse Rs58,500/=

8GB Pendrive - 1,200/=
16GB Pendrive - 2,200/=
32GB Pendrive - 4,000/=
Dongle - Up to 2,900/=

Special offer
HP Laserjet 1102 Printer
Rs 13,300/=

Authorised Business Partner
NALIN Information Technologies
195/4 Parameswara Junction, Palaly Road, Thirunelvely
Phone- 0212221121/1166 0777667975
NALIN City Showroom
116G KKS Road, Chunnakam
Phone- 0212242222 0777140431

A/L இற்குப் பின்னர்
HND கல்வியினை
அனுபவமிக்க விரிவுரையாளர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்



BTEC edexcel HND
in Computing & System Development
in Business Management
ஒவ்வொரு பிரிவிலும் இரு பட்டத் தகைமைகள்
36+ ஆண்டுகள் ஒருங்கிணைந்த விரிவுரை அனுபவம்
நன்மைகள்
- பகுதி நேர அல்லது முழு நேரக்கல்வி
- மறைமுக செலவீனங்கள் இல்லை
- வேலைவாய்ப்புகளுக்கு பரந்த வாய்ப்புக்கள்
- Diploma in English கற்கை நெறி இலவசம்

Edexcel -UK பதிவுகளுக்கான
கட்டணம் ரூபா 40,000
இலவசம்
புதிய பிரிவுகள் 14.09.2013 9:00am
Your Career Pathway
HND 18 Months → Top-up Degree 1 Year → Masters 1 Year
Start with pending A/L Results
ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
Sri Lanka's Largest IT Education Network
ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna
Tel: 021 222 4142 | 077 309 9 308

ACCA THE GLOBAL BODY FOR PROFESSIONAL ACCOUNTANTS
ACCA
Association of Charterd Certified Accountants
IPS
க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
புலமைப்பரிசில் திட்டம் - 2013
மேற்படி புலமைப்பரிசில் திட்டத்துக்கு விண்ணப்பிப்பதற்கான திகதி
12.09.2013 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: பதிவாளர் த.பெ.இல. (P.O. Box No):18 யாழ்ப்பாணம்.

வடமராட்சியில்....
மிக இலகுவான தமிழ் விளக்கத்துடன்
Special English Class
By: Mr. Jothy
2 ஆவது பிரிவு ஆரம்பம்
12.09.2013 வியாழன்
Spoken English, Grammar, Vocabulary ஆகிய
அனைத்துத் திறன்களையும் கொண்ட முழுநிறைவான கற்கைநெறி
பருத்தித்துறையில் - 5.00 P.M
Oxford English Academy
P.K Lane, Point Pedro.
நெல்லியடியில் - 4.00 P.M
Everest Academy
Vathiry, Karaveddy, (அஜந்தாஸ் ஸ்ரூடியோ ஒழுங்கை)
(C/11967)(10,16,14)

IIS CITY CAMPUS
edexcel advancing learning, changing lives



18 வருட கல்விச் சேவை உத்தரவாதம்
பிரித்தானிய பொறியியல் பட்டத் தகைமைகள்
BTEC HND
CIVIL ENGINEERING
QUANTITY SURVEYING
இறுதியாண்டு பட்டக்கல்வியை பிரித்தானியா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள முன்னணி பல்கலைக்கழகங்களில் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு .
புதிய பிரிவு ஆரம்பம் : 14-09-2013
மாணவர்களுக்கு இலகு கல்விக் கடன் வசதி செய்து தரப்படும்
மேலதிக விபரங்களுக்கு
021 4 900 900
Web: www.iis.edu.lk
IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 8060

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல்கள் அழகிய நல்முத்துக்கள் போன்றவை. நல்ல சிந்தனை என்ற நூலினால் அவை கோக்கப்பட்டுள்ளன.

-சார்லஸ் எலியட்

புதன் பொய்கை A

உதயன் | செப்ரெம்பர் 11 2013 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு



# எங்கும் சீரழிவு விழித்தெழு பெண்ணே...!

■ ராஜராஜன்

இன்று இங்குள்ள நீதிமன்றங்களுக்குச் சென்று பார்க்கும்போது மணவிலக்கு, கணவன், மனைவியிடையிலான பிணக்கு ஆகிய விடயங்களைத் தாங்கிய வழக்குகள் அதிகளவில் இடம்பெறுவதைக் காண முடிகின்றது. கணவனும், மனைவியுமாக வாழ்ந்தவர்கள் எதிரும் புதிருமாக நின்று கொண்டு எதிரிகள் போன்று தமது சட்டத்தரணிகளின் வழிகாட்டலின் கீழ் செயற்படுவதைக் காணும்போது மனம் வேதனைப்படுகின்றது. உலகம் அறியாத மிக இளம் பராயத்தினர், நடுத்தர வயதினர், ஓரளவு வயது முதிர்ந்தவர்கள் எனப் பல்வேறு வயதினரும் இத்தகைய வழக்குகள் தொடர்பாக நீதிமன்றங்களுக்கு வந்து செல்வதைக் காணமுடிகின்றது.

அதிலும் மிக இள வயதுப் பெண்கள் தோளில் குழந்தைகளைத் தாங்கிய வண்ணம் திருதிருவென அங்கு மிங்கும் பார்த்தவாறு அங்கு நிற்பதுதான் கொடுமையான விடயம். அந்தக் குழந்தைகள் என்ன பாவத்தைச் செய்தன? எதிரில் தனது தந்தை நின்றபோதிலும் அதை உணராத நிலையில் அந்தப் பிஞ்சுகள் தாயின் தோளில் துவண்டு கிடக்கின்றன. ஒருவேளை தனது தந்தையை அப்பா என அழைக்கும் பாக்கியம் அந்தக் குழந்தைக்கு நிரந்தரமாகவே கிடைக்காமலும் போகலாம். இதைவிடக் கொடுமையான விடயம் வேறென்னவாக இருக்க முடியும். இதைக் கூட உணரும் நிலையில் அந்த கணவனும் மனைவியும் இல்லை.


முன்பெல்லாம் ஒரு குடும்பத்திலே ஏற்படுகின்ற சச்சரவுகள் அந்தக் குடும்பத்தின் வீட்டுச் சுவர்களைத் தாண்டி வெளியே செல்வதில்லை. குடும்பத்திலுள்ள பெரியவர்களே அதைத் தீர்த்து வைத்து விடுவார்கள். அதையும் மீறினால் உறவினர் அதில் தலையிட்டுத் தீர்த்து வைப்பார்கள். வெளியில் தெரிந்தால் தாம் அனைவருமே அவமானத்தைச் சந்திக்க நேரிடும் என்ற பயம் அவர்களின் மனங்களில் இருந்தது. இதனால் எந்தவொரு குடும்பத்தினதும் பிரச்சினைகள் குடும்ப மட்டத்திலேயே தீர்த்து வைக்கப் பட்டன. ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

மேலும் போருக்குப் பின்னரான தற்போதைய காலப் பகுதியில் முன்னர் குடும்பங்களில் காணப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்ந்த நிலையில் காணப்படுகின்றன. இதற்குப் பல்வேறு காரணங்களைக் கூறலாம்.

குறிப்பாக இளைஞர்களிடையே கட்டுப்பாடுகள் தளர்ந்துள்ள நிலையில் தம்மால் எதையும் செய்ய முடியுமென்ற மனோபாவம் வலுப்பெற்றுக் காணப்படுகின்றது. இதனால் கலாசார சீரழிவுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் பெருகிக் காணப்படுகின்றன.

**இளைஞர்களிடையே கட்டுப்பாடுகள் தளர்ந்துள்ள நிலையில் தம்மால் எதையும் செய்ய முடியுமென்ற மனோபாவம் வலுப்பெற்றுக் காணப்படுகின்றது. இதனால் கலாசார சீரழிவுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் பெருகிக் காணப்படுகின்றன.**

அன்றைய கால கட்டத்தில் பெண்கள் நள்ளிரவு வேளையிலும் எதுவித அச்ச உணர்வுமின்றி நடமாடினர். அவர்கள் துன்புறுத்தப்படும் சம்பவங்களும் மிக அரிதாகவே காணப்பட்டன. மேலும் அந்நியரின் நடமாட்டமும் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததால் கலாசார சீரழிவுகளுக்கான வாய்ப்புக்கள் இல்லாத நிலை இங்கு நிலவியது. ஆனால் இன்று எமது பிரதேசத்தில் யார் வருகிறார்கள், போகிறார்கள் என்பது தெரியாத நிலையே காணப்படுகின்றது. இதனால் பிற இனத்தைச் சேர்ந்தவர்களால் எமது இளம் பெண்கள் ஏமாற்றப்படும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. ஏற்கனவே வேறு ஊரொன்றில் திருமணமாகிப் பிள்ளைகளுக்குத் தகப்பனாகிய சிலர் இங்கு வந்து தம்மைத் திருமணமாகாத இளைஞர்கள் எனக் கூறிப் பெண்களை ஏமாற்றித் திருமணம் செய்து விட்டு ஏமாற்றிச் செல்கின்ற சம்ப வங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. எப்போதுமே விழிப்புடன் இருந்து தம்மைக் காப்பாற்ற வேண்டிய பெண்கள் இவ்வாறு ஏமாந்து போவது எமது ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதித்து விடுகின்றது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.



தற்போது பல்வேறு காரணங்களால் பெண்கள்அடிக்கடிவீட்டைவிட்டுவெளியே செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது. பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்கள், வேலைத்தளங்கள் எனப் பல்வேறு இடங்களுக்கும் இவர்கள் செல்கின்றனர். ஆனால் இவர்கள் சுதந்திரமாக நடமாடும் நிலை இன்று காணப்படவில்லை. தறிகெட்டு அலையும் இளைஞர் கூட்டங்கள் இவர்களுக்குத் தொல்லை தருவதற்கென்றே காத்திருக்கின்றன. சந்தர்ப்பம் சாதகமாக அமையும்போது பெண்கள் ஏமாற்றப்படும் நிலை ஏற்படுகின்றது. எந்த விதமான பக்க பலமும் இல்லாத இவர்கள் சில காலம் குடும்பம் நடத்திய பின்னர் தமக்கு ஏற்படுகின்ற கஷ்டங்களைத் தாங்குகின்ற மனோநிலையை இழந்து விடுகின்றனர். இறுதியில் நீதிமன்றத்தின் படிகளைத் தஞ்சமடைகின்றனர். இதில் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள்தான் என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். நாம் வாழுகின்ற பூமியைப் பெண் என்கிறோம். கல்வி, செல்வம், வீரம் ஆகியவற்றுக்கு அதிபதிகளாக மூன்று பெண் தெய்வங்களைக் கொண்டிருக்கின்றோம். எம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கி வைக்கின்ற எமது தாயைப் பெண் தெய்வமாகப் போற்றுகின்றோம். எமக்கு மிக உயர்வான பாலைத் தந்து எம்மைப் போசிக்கும் பசு கூட பெண் பிறவிதான். ஆனால் இத்தகைய உயர்வுகள் எல்லாம் இருந்த போதிலும் இறுதியில் பாதிக்கப்படுபவர்கள் பெண்களாகத்தான் இருக்கின்றார்கள்.

பெண்களின் உடல் ஆண்களைவிடப் பலவீனமானதாக அமைந்திருக்கலாம். ஆனால் மன நிலையில் அவர்கள் எப்போதுமே ஆண்களை விட உயர்ந்தவர்களாகத் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். முதலில் மனதில் எழும் சபலங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஏனென்றால் இதனையே ஆண்கள் தமது ஆயுதமாகப் பயன்படுத்துகின்றனர். துணிவும், மனோ தைரியமும் எதற்கும் அஞ்சாத குணவியல்பும் கொண்ட பெண்களிடம் வாலாட்டு வதற்கு எந்த ஆணுமே தயங்கி நிற்கும் நிலைதான் எப்போதும் ஏற்படும். முறத்தால் புலியை அடித்து விரட்டிய பெண்ணின் வழி வந்தவர்கள் சாதாரண ஆண்களைக் கண்டு அச்சப்பட வேண்டியதில்லை.

ஆண்கள் கூட தமது செயற்பாடுகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலமாக இன்று காணப்படும் நிலைமைகளுக்கு ஒரு தீர்வைக் காண முடியும். குறிப்பாகப் பெண்களை அவர்கள் இழிவாகப் பார்க்கும் நிலை மாற வேண்டும்.

ஒரு தாயாக, சகோதரியாக, மனைவியாக பெண் இருக்கின்றாள் என்பதை முதலில் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் பெண்களை எப்போதுமே ஓர் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துப் போற்றும் பண்பும் அவர்களிடத்தில் உருவாக வேண்டும். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற அந்த இழிவான நிலையை விட்டு அவர்கள் வெளியேவரவேண்டும்.

இன்று நீதிமன்றத்தில் நிற்கும் ஆண், பெண் இருவரில் எவர் மீது தவறு இருக்கின்றது என்பதை எம்மால் அறிந்து கொள்வது சுலபமான விடயமல்ல. ஆனால் இந்த இருவரில் ஒருவர் தவறு விட்டிருக்கலாம். அல்லது இருவருமே தவறு விட்டிருக்கலாம். ஆனால் தவறு தவறுதான். இது தொடருவது எமது ஒட்டுமொத்தச் சமுதாயத்துக்கே இழிவானது. நாம் இதற்கொரு காத்திரமான முடிவைக் காணவேண்டும். அதுவும் விரைந்து காண வேண்டும்.


கணவன், மனைவி உறவென்பது மிகவும் புனிதமானது. இதற்கு ஈடாக எதையும் கூற முடியாது. இந்த நிலையில் இந்த உறவின் அந்தரங்கம் வெளியில் மற்றவர்களின் கண்களுக்கும், காதுகளுக்கும் விருந்தாக மாறுவது ஒருபோதுமே ஏற்றுக்கொள்ள முடியாதது.

எனவே இனியாவது இந்தப் பிணக்குத் தொடர்பாக நீதிமன்றம் செல்வதை எம்மவர்கள் தவிர்க்க முயல வேண்டும். எவ்வளவு பாரதூர மான பிரச்சினைகள் இருந்தாலும் அவை யாவும் நான்கு சுவர்களுக்குள் ளேயே தீர்த்து வைக்கப்பட வேண்டும். தவறின் எதிர்காலத்தில் எமது ஒட்டுமொத்தச் சமுதாயமுமே தலைகுனிந்து நிற்க வேண்டிய அவல நிலையைத் தவிர்க்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போடுங்கள் தோப்புக்கரணம்; அதிகரிக்கும் அறிவாற்றல்

- புவி



இடது கையால் வலது காதையும், வலது கையால் இடது காதையும் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து எழுகையில் மூளையின் இரு பகுதிகளும் பயனடைகின்றன

ஒரு காலத்தில் தோப்புக்கரணம் போடுவது என்பது பாடசாலைகளில் மிகச்சாதாரணமான விடயம். தவறு செய் தாலோ வீட்டுப்பாடம் எழுதி வரா விட்டாலோ ஆசிரியர்கள் மாணவர் களைத் தோப்புக்கரணம்போட வைப் பது வாடிக்கை. பரீட்சை சமயத்தில் பக்தி அதிகரித்து மாணவர்கள் அதிக மதிப் பெண் பெற தாங்களாகவே பிள் ளையார் முன் தோப்புக்கரணம் போடு வதுமுண்டு. ஆனால் இக்காலத்தில் தோப்புக்கரணம் போடுவதை அதிக மாக நாம் காண முடிவதில்லை.

ஆனால் தோப்புக்கரணம் அமெரிக்கா வில் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது என்று சொன்னால் ஆச்சரி யமாக இருக்கிறதல்லவா? லொஸ் ஏஞ்சல்ஸைச் சேர்ந்த மருத்துவர் எரிக் றொபின்ஸ் (Dr.Eric Robins) எளிய உடற்பயிற்சியால் மூளையின் செல்களும் நியூரோன்களும் சக்தி பெறுகின்றன என்கிறார். அவர் தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு அந்த உடற்பயிற்சியை பரிந்துரை செய்வதாகக் கூறுகிறார். பரீட்சைகளில் மிகக்குறைந்த மதிப்பெண்கள் எடுக் கும் ஒரு பள்ளி மாணவன் தோப்புக் கரண உடற்பயிற்சியைச் சில தினங் கள் தொடர்ந்து செய்த பின் மிக நல்ல மதிப்பெண்கள் வாங்க ஆரம்பித்த தாகக் கூறுகிறார்.

யேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நரம்பியல் நிபுணரான மருத்துவர் யூஜினியஸ் அங் என்பவர் காதுகளைப் பிடித்துக் கொள்வது மிக முக்கிய அக்குபஞ்சர் புள்ளிகளைத் தூண்டி விடுகின்றது என்று சொல்கிறார். அதனால் மூளையின் நரம்பு மண்டல வழிகளிலும் சக்தி வாய்ந்த மாற்றங் கள் ஏற்படுவதாக அவர் தெரிவிக்கிறார். இடது கையால் வலது காதையும், வலது கையால் இடது காதையும் பிடித் துக் கொண்டு உட்கார்ந்து எழுகையில் மூளையின் இரு பகுதிகளும் பயன டைகின்றன என்று சொல்கிறார். தோப்புக்கரணம் போடுவதால் ஏற்படும் மாற்றங்களை சிசிறூ கருவியால் மருத்துவர் யூஜினியஸ் அங் அளந்து காண்பித்தார். மூளையில் நியூரோன் களின் செயற்பாடுகள் அதிகரிப்பதை பரிசோதனையில் காண்பித்த அவர் மூளையின் வலது. இடது பாகங்கள்

> தோப்புக்கரணப் பயிற்சியை தினமும் மூன்று நிமிடங்கள் செய்தால் போதும், வியக்கத்தக்க அறிவு சார்ந்த மாற்றங்களைக் காணலாம்

சமமான சக்திகளை அடைவதாகவும் சொன்னார். மிக நுண்ணிய தகவல் அனுப்பும் காரணிகள் வலுப்பெறு வதும் பரிசோதனையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மருத்துவர் யூஜினி யஸ் அங் தானும் தினமும் தோப்புக் கரணம் போடுவதாகக் குறிப்பிடுகிறார். Autism. Alzheimer போன்ற இக்காலத்தில் அதிகரித்து வரும் நோய் களுக்குக் கூட இந்த தோப்புக்கரண உடற் பயிற்சியை ஆராய்ச்சியாளர்கள் பரிந்துரைக்கிறார்கள். தோப்புக் கரணப் பயிற்சியைத் தினமும் செய்வதன் மூலம் மேற்கண்ட நோய்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மிக நல்ல பலன்களைப் பெறுவதாக அவர்களது பரிசோதனைகள் தெரிவித்துள்ளன.

ப்ராணிக் சிகிச்சை நிபுணர் கோ சோக் சூயி (Master Koa Chok Sui) தன்னுடைய Super Brain Yoga என்ற புத்தகத்தில் தோப்புக்கரணத் தைப் பற்றியும் அதன் பலன்கள் பற்றி யும் குறிப்பிட்டுள்ளார். தன்னுடைய சொற்பொழிவுகளிலும் இதை அதிகம் குறிப்பிடுகிறார்.

இதனால் தான் தோப்புக்கரணம் பாட சாலைகளில் எம் முன்னோர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. படிக்காத மாணவர்கள் தோப்புக்கரண முறை யால் தண்டிக்கப்படுவதன் மூலம் அவர்களது அறிவுத் திறன் அதிகரிக்க வழியும் காண்பிக்கப்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது.

தோப்புக்கரணப்பயிற்சியை தினமும் மூன்று நிமிடங்கள் செய்தால் போதும் வியக்கத்தக்க அறிவு சார்ந்த மாற்றங் களைக் காணலாம் என்று ஆராய்ச்சி யாளர்கள் கருதுகிறார்கள். அவர்கள் பரிந்துரைக்கும் தோப்புக்கரண பயிற் சியை அவர்கள் சொல்கின்ற முறை யிலேயே காண்போமா?


உங்கள் கால்களை உங்கள் தோள் களின் அகலத்துக்கு அகட்டி வைத்து நின்று கொள்ளுங்கள். உங்கள் பாதங்கள் நேராக இருக்கட்டும். வலது காதை இடது கையின் பெருவிரலா லும் ஆள்காட்டி விரலாலும் பிடித்துக் கொள்ளுங்கள். அதே போல் இடது காதை வலது கையின் பெருவிரலா லும் ஆள்காட்டி விரலாலும் பிடித்துக் கொள்ளுங்கள். பிடித்துக்கொள்ளும் போது இடது கை உட்புறமாகவும். வலது கை வெளிப்புறமாகவும் இருக்க வேண்டும் என்பது முக்கியம்.

மூச்சை நன்றாக வெளியே விட்டபடி அப்படியே உட்கார்ந்து மூச்சை உள்ளே நன்றாக இழுத்தபடி எழுந்து நில்லுங் கள். மூச்சும், உட்கார்ந்து எழுவதும் ஒரு தாள லயத்துடன் இருக் கட்டும்.

அவ்வாறு செய்து பழக்கமில்லாத வர்களுக்கு ஆரம்பத் திலேயே மூன்று நிமிடங்கள் தொடர்ந்து தோப்புக்கர ணம் செய்வது கடினமாக இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் ஒரு நிமிடம் செய்வதில் இருந்து ஆரம்பித்து நாள் கள் செல்லச் செல்ல இரண்டுநிமிடங்கள், பின்னர் மூன்று நிமிடங்கள் என்று அதிகரியுங்கள்.

ஆராய்ச்சியாளர்கள் சொல்லும் மிக நல்ல பயன்களைப் பார்க்கும் போது உங்கள் அறிவுத் திறனின் வளர்ச்சிக் காக மூன்று நிமிடங்கள் தினமும் செலவழிப்பது மிகப்பெரிய விடயமல்ல அல்லவா?

# உலகில் மிகப்பெரிய எரிமலை கண்டுபிடிப்பு



130-145 மில்லியன் வருடங்களுக்கு முன்னால் உலகின் நீர்ப்பரப்புக்கடியில் அமைந்திருந்த ஷட்ஸ்கி ரைஸ் என்ற மலைத்தொடரில் இருந்த பல எரிமலைகள் வெடித்ததன் மூலம் இந்த எரிமலை உருவாகியிருக்க வேண்டும்

உலகிலேயே மிகப் பெரிய எரிமலை ஜப்பான் நாட்டுக்குக் கிழக்கே 1,609 கிலோமீற்றர் தூரத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

தமு மசிஃப் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த எரிமலை சூரிய மண்டலத்தில் இரண்டாவது பெரிய எரிமலையாகும். செவ்வாய்க் கிரகத்தில் இருக்கும் முதலா வது பெரிய எரி மலையாகக் கருதப்படும் ஒலிம்பஸ் மோன்ஸ் இதைவிட 25 சதவீதம் பெரியதாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

130-145 மில்லியன் வருடங்களுக்கு முன்னால் உலகின் நீர்ப்பரப்புக்கடியில் அமைந்திருந்த ஷட்ஸ்கி ரைஸ் என்ற மலைத்தொடரில் இருந்த பல எரிமலை கள் வெடித்ததன் மூலம் இந்த எரிமலை உருவாகியிருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

பரப்பளவில் இங்கிலாந்து தீவுகளை அல்லது நியூமெக்சிகோ மாகாணத்தை இது ஒத்துள்ளது. உருவாகிய சில மில்லியன் வருடங்களிலேயே செயலி ழந்துபோன இந்த எரிமலை 310,798 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டதாக உள்ளது.

உலகில் உள்ள செயற்படும் எரிமலை களிலேயே பெரியதாகக் கருதப்படுகின்ற ஹவாய் தீவில் இருக்கும் மௌனா லோவா எரிமலை 5,179 சதுர கி.மீ. பரப்பளவுதான் கொண்டது. இதனுடைய அளவு தமு மசிஃபின் கணக்கிடும்போது 2 சதவிகிதம்தான் இருக்கும்.

தமு மசிஃபின் அளவு மட்டுமின்றி அமைப்பும் சிறப்புப் பெறுகின்றது. இதன் முகட்டின் உயரம் கடல் மேற்பரப்பி லிருந்து 6,500 அடிக்குக் கீழும், அடிப்பரப்பு நீண்டு பரந்தும் காணப் படுகின்றது. இதனால் அப்போது எரி மலைகள் வெடித்துச் சிதறியதில் தோன் றிய லாவா உலகின் மற்ற எரிமலை களைப் போல் உயரமாகப் படியாமல் நீண்ட தூரம் பரவியிருக்க வேண்டும் என்று நம்பப்படுகின்றது.

இதுநாள் வரை, ஆராய்ச்சியாளர்கள் இந்த எரிமலையின் அமைப்புக் குறித்து உறுதி செய்துகொள்ள முடியாமல் இருந் தார்கள். ஆனால், தற்போது உலகி லேயே பெரிய[illegible] எரிமலை இது என்ற முடிவுக்கு அவர்கள் வந்துவிட்டனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத் தத்துவம்

உலகில் மகிழ்ச்சி என்பது எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிறது. ஆனால், பெரும்பாலானோர் ஏதோ ஒன்றைப் பறி கொடுத்தது போல எந்த நேரமும் சோகத்துடன் இருக்கிறார்கள். இவர்களின் சிந்தனையும் எப்போதும் எதிர்மறையாகவே இருக்கிறது. எதிர்மறையாகச் சிந்திபவர்கள் எந்த ஒரு செயலிலும் வெற்றி அடைய நீண்ட நாள்கள் ஆகும். சிலர் மட்டுமே சந்தோஷத்துடன் வாழ்க்கையை அனுபவிக்கின்றனர்.



அவர்கள் எதிர்மறையான எண்ணங்களை ஆக்கமுள்ளதாக மாற்றிக் கொள்வதே அதற்குக் காரணம். 'ஆசையே துன்பத்துக்குக் காரணம்' என்றார் புத்தர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆசை இருக்கிறது. ஆனால், அந்த ஆசை நிறைவேறியவுடன் நாம் ஆசைப்படுவதை நிறுத்திக் கொள்வதில்லை. வேறொன்றின் மீது எம் ஆசை திரும்புகிறது. நடந்து செல்லும் போது சைக்கிள் வாங்க வேண்டும் என்று தோன்றுகிற ஆசை, அது நிறைவேறியவுடன் 'பைக்' மீது திரும்புகிறது. அது நிறைவேறியவுடன் கார் என இப்படியாகத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. எப்போது எம்மிடம் இருக்கின்ற பொருள்களைக் கொண்டு திருப்தியடைகிறோமோ, அப்போது தான் வாழ்க்கை மகிழ்ச்சியாகத் தோன்றும்.

வாழ்க்கையில் வெற்றி, தோல்வி என்பது சகஜமானது. சில நேரம் வெற்றி கிடைக்கும். சில நேரம் தோல்வி கிடைக்கும். தோல்வியடையும் சமயங்களில் 'நான் எப்போதும் தோல் வியையே சந்தித்துக்கொண்டிருக்கிறேன்' என்று புலம்பி அடுத்தகட்ட முயற்சியைக் கைவிட்டு விடுகிறார்கள். இதற்குக் காரணம் 'எம்மால் முடியாது' என்ற எண்ணமே. முதலில் அந்த எண்ணத்தைத் தூக்கிப் போட்டுவிட்டு, உங்களின் கடந்த கால வெற்றிகளை ஒரு தாளில் எழுதிக்கொண்டே வாருங்கள். நீங்கள் பெற்ற வெற்றியின் சாதனைப்பட்டியல் உங்களை அடுத்த வெற்றிக்கு அழைத்துச் செல்லும்.

ஒவ்வொரு மனிதரும் ஏதாவது ஒரு வகையில் உயர்ந்தவராக இருப்பார். அழகு, படிப்பு, குணம், திறமை, செல்வம் இதில் ஒன்றோ அல்லது இரண்டோ ஒருவரிடம் இருக்கலாம். அதற்காக அந்தத் தகுதி எம்மிடம் இல்லையே என மற்றவருடன் தன்னை ஒப்பிட்டுப் பார்த்து தன்னைத் தானே தாழ்த்திக் கொள்ளக் கூடாது. நாமே சிறந்தவர் என உங்களை நீங்களே பாராட்டிக் கொள்ளவேண்டும்.

உங்களுடைய சாதனைகள், வெற்றிகள் சிறியதாக இருந்தாலும் அதை எண்ணி பெருமைப்பட வேண்டும். அதற்காக தற்பெருமைடன் திரியக் கூடாது. வாழ்க்கையில் எல்லா மனிதர்களுக்கும் சந்தோஷமான சம்பவங்களும் உண்டு, கசப்பான சம்பவங்களும் உண்டு. கசப்பை ஜீரணித்துக் கொண்டு சந்தோஷமாக வாழ்பவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவே. 'எனக்கு மட்டும் ஏன் எல்லாம் தப்பாகவே நடக்கின்றன?' என்று எண்ணி அதிலிருந்து மீள முடியாமல் தவிப்பவர்கள் பலர்.

வாழ்க்கையில் எதுவுமே நிரந்தரமில்லை. அதைப் புரிந்து கொண்டு வெற்றிக்கான தேடலைத் தொடங்குங்கள். மற்றவருடைய வளர்ச்சியைப் பார்த்து சந்தோஷப்படுபவர்களை விட பொறாமைப்படுபவர்களே அதிகம். ஒருவரை அழிக்கும் மிகப் பெரிய ஆயுதம் அவரிடம் உள்ள பொறாமைக் குணம்தான். ஒருவருடைய வெற்றியில் இருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டுமே தவிர அவரைப் பார்த்து பொறாமைப்படத் தேவையில்லை. அவரைப் பாராட்டி ஊக்கப்படுத்துவதன் முலம் நாமும் முன்னேற முடியும். இப்படிச் செய்வதால் அவர் பெற்ற வெற்றி ஒருநாள் உங்கள் பக்கமும் திரும்பும். அதே நேரம் உங்களை விடவும் அதிகமானோர் இன்னும் மேலே வர முடியாமல் இருக்கின்றனர் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒருவருடைய வெற்றியைப் பார்த்து பொறாமைப்படுவதை விட அந்த வெற்றியை நாமும் அடைய முயற்சி செய்வது தான் சரியான வழி.



■றஜி

அனுபவம் இல்லாமல் திடீரென ஒரு செயலில் இறங்கினால் தோல்விதான் கிடைக்கும்.

எனவே பிறருடைய வெற்றியில் பங்கு கொண்டு அதிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். பின்னர் புதிய முயற்சிகளை மேற்கொண்டால் சரியான வாய்ப்புகள் வரும்போது வெற்றியை அடையலாம். ஒரே குறிக்கோளை அடைய எண்ணி இருவர் முயற்சி செய்யும் போது ஒருவரை மற்றவர் ஊக்கபடுத்தினால் வெற்றியின் இலக்கை விரைவில் அடையலாம்.

எதிர்மறையான விமர்சனங்களைச் சந்தித்து வருபவர்கள், தன்னைப் பற்றி ஒருபோதும் எதிர்மறையான எண்ணங்களைக் கொண்டிருக்கக் கூடாது. இதனால் நல்ல விமர்சனங்களை உருவாக்கக் கூடிய வாய்ப்புகளை அவர்கள் இழக்கக் கூடும்.

எனவே எதிர்மறையான விமர்சனங்களை எண்ணி நேரத்தை வீணாக்காமல் நல்ல விமர்சனங்களை உருவாக்குவதில் நேரத்தைச் செலவிடுங்கள். பிறருடன் ஆக்கபூர்வமாகப் பேசுவதே உங்களை பற்றிய நல்ல எண்ணத்தை பிறரிடம் ஏற்படுத்துவதுடன் நீங்களே உங்களைப் பற்றி உயர்வாக உணரவும் வழிவகுக்கும். எந்த ஒரு செயலையும் சிறப்பாகச் செய்ய அர்ப்பணிப்பும் தெளிவான குறிக்கோளும் அவசியம். முதலில் உங்களுடைய குறிக்கோள் என்ன என்பதைத் தெளிவாக வரையறுத்துக் கொள்ளுங்கள்.

பின்னர் அதை அடைவதற்கான வழிகளைக் கண்டு பிடிங்கள். அதற்காக உங்களின் சக்தி முழுவதையும் செலவழியுங்கள். உங்களுடைய வாழ்க்கையையே அர்ப்பணியுங்கள். அந்தச் செயலில் தோற்றால் அதிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள். வெற்றி பெற்றால் இன்னும் சிறப்பாகச் செய்வதற்கு முயற்சி செய்யுங்கள். அதையும் தாமதிக்காமல் உடனே செய்யுங்கள். பிறருடைய வெற்றியில் இருந்தோ அல்லது தோல்வியில் இருந்தோ உங்களுக்குத் தேவை-யானதைக் கற்றுக்கொள்ளுங்கள். அதிலிருந்து உங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

வெற்றி பெறுவதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகள் என்னென்ன? எந்த விடயங்களை புதிதாகச் சேர்த்துக் கொண்டார்? எந்த விடயங்களைத் தம்மிடம் இருந்து விலக்கி வைத்தார்? போன்ற விடயங்களை வெற்றி பெற்றவரிடம் இருந்தும், என்ன காரணத்துக்காகத் தோல்வியைத் தழுவினார் என்பதை தோல்வி அடைந்தவரிடம் இருந்தும் தெரிந்து கொள்ளுங்கள்.













யாழ்.மாநகர சபையின் யாழ். ஓசைப் பெருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆடற்கதை, நாதஸ்வரம், புகைப்படம், வயலின், பாட்டு, ஓவியம், புல்லாங்குழல் உட்பட இசைக் கலைஞர்கள் பலர் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் கலந்துகொண்ட மக்களையும் நடைபெற்ற கலை நிகழ்வுகளையும் இங்கு காணலாம்.

(வ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரடைப்பு வந்தாலும் உயிரைக் காப்பாற்றலாம்



மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படும். மிக வேகமாக மூச்சு விடுவ துடன், அதனால் நெஞ்சில் வலியும் ஏற்படும். திடீரென அதிகமாக வியர்த்து உடல் முழுவதும் நனையும். சில ருக்கு மயக்கமும் தலைச் சுற்ற லும் ஏற்பட வாய்ப்புள்ளது.

பெரும்பாலான நோய்களை முன்கூட்டியே கண்டறிந்தால் சிகிச்சை அளித்து குணப்படுத்திவிட முடியும் என்பது அனைவரும் அறிந்ததே. அதேபோலத்தான் ஒரு சில நொடிகளில் வந்து உயிரையே எடுத்து விடும் மாரடைப்பையும் சில அறிகுறிகளை வைத்து முன்கூட்டியே கண்டறிந்துவிட்டால் உயிரைக் காப்பாற்ற வாய்ப்பு உள்ளது. அதன் அறிகுறிகள் தெரிந்ததும், ஒரு நிமிடம் கூடத் தாமதிக்காமல் உடனே மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றால் நிச்சயம் உயிரைக் காப்பாற்ற முடியும்

மார்பு அல்லது நெஞ்சுப் பகுதியில் ஏதோ ஒன்று அழுத்துவது போன்ற உணர்வு ஏற்படும். இது தொடர்ச்சியாக இல்லாமல், அழுத்துவதும், பிறகு லேசாக இருப்பதும் போல மாறி மாறி ஏற்படும்.

மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படும். மிக வேகமாக மூச்சு விடுவதுடன், அதனால் நெஞ்சில் வலியும் ஏற்படும். திடீரென அதிகமாக வியர்த்து உடல் முழுவதும் நனையும். சிலருக்கு மயக்கமும் தலைச் சுற்றலும் ஏற்பட வாய்ப்புள்ளது.


நெஞ்சு, கழுத்து, முதுகு, தோள் பட்டைகளில் கடுமையான வலி ஏற்படும். பொதுவாக பெண்களுக்கு மாரடைப்பு ஏற்படும் போது இந்த அறிகுறி நிச்சயம் தென்படும்.

இந்த அறிகுறிகளில் ஒன்றோ அல்லது சில அறிகுறிகளோ 5 நிமிடங்களுக்கு மேல் நீடித்தால், உடனடியாக மருத்துவமனைக்கு செல்வதற்கான முயற்சியை எடுக்கவேண்டும்.

# பதற்றத்தைக் குறைக்க 'யோகா'

இருபத்துநான்கு மணி நேரமும் பதற்றத்துடன் இருப்பவர்கள் பெண்கள் தான். காரணம், குடும்பத்தை மட்டுமே கவனித்துக் கொண்டிருந்த பெண்களில் பலர் வேலைக்கும் செல்ல ஆரம்பித்துவிட்டனர். அதனால் அவர்களது சுமைகள் கூடியிருக்கின்றனவே தவிர குறையவில்லை.

உடல் சோர்வினாலும் மனச்சோர்வினாலும் அவர்கள் அவதிப்படுவது அன்றாட நடைமுறையாகி விட்டது. இதிலிருந்து மீண்டு அவர்கள் என்றும் ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் வாழ சில யோகாசனங்களைச் செய்ய வேண்டும்.



# குறட்டையை அலட்சியம் செய்யாதீர்

உறங்கும் போது சிலருக்கு குறட்டைஏற்படுவது வழக்கம். ஆனால், அது அவர்களுக்கு தொல்லையாக இருக்கிறதோ இல்லையோ, அவர்களுடன் இருப்பவர்களுக்கு மிகுந்த அவஸ்தையாகி விடுவதுண்டு.

இரவு முழுவதும் நன்றாகத் தூங்கியும், காலையில் உடம்பு களைப்பாக இருக்கிறதா? தூங்க வேண்டும் போல இருக்கிறதா? அப்படியானால் நீங்கள் இரவில் குறட்டை விடுகிறீர்களா என்று கேட்டறிந்து கொள்ளுங்கள். ஆம் என்றால், உடனடியாக மருத்துவரைச் சந்தித்து ஆலோசனை பெறுவது அவசியம்.


குறட்டை என்பது சாதாரண விடயம் அல்ல. அது உடலில் ஏற்படும் ஏதேனும் அசௌகரியத்தின் அடையாளமாகும். ஒருவர் தூங்கும் போது அவரது மூச்சுப்பாதை பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ அடைத்துக் கொள்கிறது. அப்போது, ரத்தத்தில் உள்ள ஒட்சிசன் அளவு அதிகரிக்கலாம். அதனால் உடலில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும்.

தூங்கிக் கொண்டிருக்கும்போது இதயப் பாதிப்பு, இரத்த அழுத்தம், பக்கவாதம் போன்றவை ஏற்பட பெரும்பாலும் இதுவே காரணமாக அமைகிறது.

அதிக உடல் எடை காரணமாக, வயிறு அல்லது கழுத்து அல்லது தொண்டைப் பகுதியில் அதிக கொழுப்புச் சேர்ந்துவிடும். அதனால், நுரையீரலால் நாம் ஒட்சிசனை உள்ளிழுக்கும் போது, தேவையான அளவுக்கு மூச்சுக்குழாய் விரிவடைய இயலாமல் போகும். இது, மூச்சை உள்ளிழுப்பதிலும், வெளியேற்றுவதிலும் சிக்கலை ஏற்படுத்துகிறது.

இந்தச் சமயங்களில், ஒருவரது இரத்தத்தில் ஒட்சிசன் குறைந்து, காபனீர் ஒக்ஸைட் அதிகரித்து உடல்நிலை பாதிக்கப்பட நேரிடுகிறது.

எனவே, குறட்டை தானே என்று எண்ணாமல், உடனடியாக உங்களது குடும்ப நல மருத்துவரை அணுகி ஆலோசனை பெற வேண்டியது அவசியம்.



# ஹலோ..! ஹலோ..!!

## அதிகம் பேசுகிறீர்களா? வாழ்நாள் சுருங்கிவிடும்



தொலைபேசியை அதிகமாகப் பயன்படுத்தினால் நமது வாழ்நாள் சுருக்கிவிடும் என்று நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தொலைபேசிக் கோபுரங்களுக்கு அருகே வசிப்பதும், தொலைபேசியை அதிகமாகப் பயன்படுத்துவதும் நமது வாழ்நாளைச் சுருக்கி விடும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

ஒரு மனிதன் தொலைபேசியின் ஒலி வாங்கியை 30 முதல் 40 சென்றிமீற்றர் தொலைவில் வைத்திருக்க வேண்டும்.

குறிப்பாக தொலைபேசியில் இணையத்தைப் பயன்படுத்தும்போது உடலுக்கு அதிகமான கதிர்வீச்சு அபாயம் ஏற்படுகிறது. அத்துடன் தொலைபேசியில் அதிக நேரம் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.


எனவே தொலைத்தொடர்புக்கு உதவும் தொலைபேசியால், தொல்லைக்கு ஆளாகாமல் தவிர்க்க சில பாதுகாப்பு வழிகளையும் நாம் பின்பற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நுண்ணங்கி இல்லாத உலகம் எப்படி இருக்கும்?

புவியில் பல உயிர்கள் வாழ்கின்றன. அவை விலங்குகள், தாவரங்கள், நுண்ணங்கிகள் என்று வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றினுள் விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் மிகவும் அவசியமானதாகவும் பயனுள்ளதாகவும் நுண்ணங்கி விளங்குகிறது. நுண்ணங்கிகளை நாம் வெற்றுக் கண்ணால் பார்க்க முடியாது. இதனால் தான் "நுண்ணங்கி" என்ற சிறப்பு பெயரைப் பெற்றுள்ளது. நுண்ணங்கிகளில் பல வகைகள் உள்ளன. நுண்ணங்கிகள் மனித வாழ்விலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. நுண்ணங்கிகள் மூலம் எமக்கு சில தீமைகள் ஏற்பட நேர்ந்தாலும் நாம் அவற்றின் மூலம் கூடுதலாக பல நன்மை களையே பெற்றுக் கொள்கிறோம்.



கூட்டுப் பசளை உற்பத்தி, தும்புக் கைத்தொழில், வினாகிரி உற்பத்தி, பாலுற்பத்திப் பொருள்கள் தயாரித்தல், சில உணவுகள் (நொதித்த உணவு கள்) தயாரித்தல், தாவர விலங்குக் கழிவுகள் மற்றும் தாவர விலங்கு களின் இறந்த உடற்பகுதிகள் பிரிகையடைதல், தாவரங்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் போசணை வழங்குதல் (நேரடியாக போசணை வழங்குவதற்கு உதார ணமாக அவரை இனத் தாவரங்களில் வாழும் பற்றீரியா முடிச்சுகளை கூறலாம்) நீர்ப்பீடன வக்சீன்கள் தயாரித்தல், நுண்ணுயிர்க் கொல்லிகள் தயாரித்தல் என்பவற்றிற்கு நுண்ணங்கிகளின் தொழிற்பாடு மிக மிக அவசியமாகும்.

நுண்ணங்கிகள் நோய்களை ஏற்படுத்துதல், உணவைப் பழுதடையச் செய்தல் போன்ற சில பாதிப்புக்களை ஏற்படுத்தினாலும் எமக்கு அதிக நன்மைகளையே உருவாக்குகின்றன. நிலைத்திருப்பதற்கு உணவு எவ்வளவு அவசியமோ அந்த அளவுக்கு நுண்ணங்கிகளும் அவசியமான ஒன்றாகும்.

நாம் வாழும் இந்தப் புவியில் நுண்ணங்கிகள் இல்லை என சிறிது நேரம் சிந்தித்துப் பார்ப்போம். நுண்ணங்கிகள் இல்லையெனில் நம்மால் இவ்வுலகில் வாழவே முடியாது. ஏன் எனக் கேள்வி உருவாகலாம். ஏனென்றால் மனித நிலைத்திருப்புக்கு தாவரம் மிக முக்கியமான ஒன்றாகும்.

மனிதன் தாவரத்தின் மூலம் தான் நீர், உணவு, சுவாசிப்பதற்குத் தேவையான ஒட்சிசன் என்பவற்றைப் பெறுகின்றான். தாவரத்தின் மூலம் எப்படி நீர் கிடைக்கிறது என்று கேட்கலாம். தாவரத்தினால் நடத்தப்படும் ஆவியுயிர்ப்பின் மூலம் தான் நீர் ஆவியாக மேலே ஈர்க்கப்பட்டு மழையாகப் புவியை அடைகிறது. இந்த மழை மூலம் தான் நாம் நீரைப் பெற்றுக் கொள்கிறோம். இவ்வாறு எமது வாழ்க்கைக்கு அத்தியாவசியமான காரணிகளைப் பெற்றுத் தரும் தாவர வளர்ச்சிக்கு நுண்ணங்கிகள் மிக முக்கியமானதாகும்.

தாவ ரம் வளர்வதற்கு நீரும், பசளையும் முக்கியமானவையாகும். அப்பசளைத் தயாரிப்புக்கு நுண்ணங்கிகள் தான் எமக்கு உதவி செய்கின்றன.

ஒருவேளை நுண்ணங்கிகள் இல்லை என்றால் எந்தவொரு பொருளும் உக்கலடையாது. சாதாரணமாகவே இன்றைய உலகில் பல குப்பைகள் அழிக்கப்பட முடியாத அளவுக்கு உள்ளன. நுண்ணங்கிகளும் இல்லையாயின் உலகம் முழுவதும் குப்பை மயமாகிவிடும். அங்கு மனிதனே இருக்க முடியாத அளவுக்குக் குப்பைகள் பெருகிவிடும். மற்றும் தாவரங்கள் வளர, வாழ சந்தர்ப்பம் இருக்காது. தாவர, விலங்கு உடல்கள், உக்கலடைய மாட்டாது. தாவரங் களுக்குப் போசணை கிடைக்காது. இதனால் தாவரம் என்ற ஒன்றே இருக்காது. தாவரமே இல்லாத போது மனிதன் எவ்வாறு உயிர் வாழ முடியும்? நுண்ணங்கி எமது வாழ்வுக்கு எவ்வளவு முக்கியமானது என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. நுண் ணங்கி இல்லாத உலகில் சூழல் சமநிலை பேணப்படாது. உயிர்கள் இல்லாத வெறும் சடமாகவே இருக்கும் என்பது எமக்குத் தெட்டத் தெளிவாக புலனாகிறது. எனவே நுண்ணங்கிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து உரியவாறு அவற்றை பயன் படுத்தி சந்தோஷமாக வாழ்வோமாக.

சு.ஆர்த்திகா, தரம் -[illegible]
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

## ஆட்டுக்குட்டியின் தந்திரம்!

மந்தையில் இருந்து பிரிந்து சென்ற ஒரு ஆட்டுக்குட்டியை ஓநாயொன்று துரத்தியது. தப்பிக்க முடியாது என்று தீர்மானமாகத் தெரிந்ததும், ஆட்டுக்குட்டி, ஓநாயைப் பார்த்து, 'நான் இனித் தப்ப முடியாது என்பது எனக்குத் தெரியும். நான் இன்னும் சிறிது நேரம்தான் வாழப் போகிறேன். சாவதற்கு முன் என்னை மகிழ்ச்சியாகச் சிறிது நேரம் இருக்க அனுமதிப்பாயா? சிறிது நேரம் பாட்டுப் பாடேன் நான் ஆடுகிறேன்', என்று கேட்டது.

ஓநாயும் அதற்குச் சம்மதித்து, தனது குழலை எடுத்து சத்தமாக வாசித்தது; ஆட்டுக் குட்டியும் நடனமாட ஆரம்பித்தது. ஆனால், சில நிமிடங்களுக்குள்ளேயே குழல் இசை கேட்டு, ஆட்டு மந்தையை மேய்ப்பவர்கள் ஓடி வந்து ஓநாயை விரட்டி அடித்தனர். ஓடிக் கொண்டே ஓநாயும், 'எனக்கு இது தேவை தான். வேட்டையாடுவதுதானே என்னுடைய தொழில். அதை விடுத்து குழல் ஊதியது தவறுதான்!' என்று சொல்லி வருந்தியது.



# அறிவியல் விடயங்கள்

- ❋ நைல் நதிவாசிகள் கி.மு. 3100 முதல் கி.மு.1070 வரை இருந்த நைல் நதி நாகரிகத்தில் வாழ்ந்தார்கள்.
- ❋ நைல் நதி நாகரிகத்தில் கட்டடக் கலை அதிக சிறப்பு பெற்றதாகக் காணப்படுகிறது.
- ❋ இதற்கு உதாரணமாக எகிப்தில் பல பிரமிட்டுக்கள் காணப்படுகின்றன.
- ❋ இந்தப் பிரமிட்டுகளில் மன்னர்களின் உடல்கள் புதைக்கப்பட்டுப் பாதுகாப்பதற்காகக் கட்டப்பட்டவை.
- ❋ ஒரு மகாராணியின் பிரமிட்டில் உருவ எழுத்துக்கள் வரையப்பட்டுள்ளன.
- ❋ ஒரு பிரமிட்டில் ஒரு மன்னனின் உடல் எலும்புக் கூடு மீட்கப்பட்டுள்ளது.
- ❋ இந்தப் பிரமிட்டுக்கள் உலக அதிசயங்களில் ஒன்றாகும்.

ச.வைசிகன், தரம்-10 ஏ,
சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்.




## பிரிக்கும் நீரிணைகளும் பிரிவுபடும் நாடுகளும்










1.பாக்குநீரிணை - இந்தியா, இலங்கை
2.பனாமா நீரிணை - வட அமெரிக்கா, தென் அமெரிக்கா
3.பீரிங் நீரிணை - ஆசியா, வட அமெரிக்கா
4. டோவர் நீரிணை - பிரான்ஸ், பிரிட்டன்

சு.ஆர்த்திகா, தரம் -9டி,
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

## நாய்



டோக்கியோவில் நாய்களுக்கென்ற தனிஹோட்டல் உள்ளது.
விலங்குகளில் அதிக பற்களைக் கொண்டது நாய் தான் (48 பற்கள்) நாய் 12 ஆண்டுகளில் முதுமை அடைந்து விடும்.
ஆஸ்திரேலியாவில் காணப்படும் "டிங்கோஸ்" என்ற நாய் வகை குரைப்பது இல்லை.
வாசனையைக் கண்டறிவதற்காக ஒவ்வொரு உயிரினங்களுக்கும் உணர்வு செல்கள் உள்ளன.
மனிதனுக்கு சுமார் 60 மில்லியன் செல்கள் உள்ளன. நாய்களுக்கோ சுமார் 250 மில்லியன் செல்கள் உள்ளன. அதனால் தான் நாய்களுக்கு [illegible]

சி.சிந்து, சுதுமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உங்களைக் குறைத்துக் கொள்ளாதீர்கள்!

எம்மில் பலருக்கு அடுத்தவர்கள் எம்மைக் குறைத்து மதிப்பிடுவதாக ஒரு மனத்தாங்கல் இருக்கிறது. அதனால் எமக்கு உரிய கௌரவம் தராமல் இருப்பதாக வருத்தமும் இருக்கிறது. ஆனால் உண்மையில் மிகவும் வருந்தத் தக்க விஷயம் என்ன வென்றால், அடுத்தவர் எம்மைக் குறைத்து மதிப்பிடுவதோ, நமக்குரிய கௌரவம் தராமல் இருப்பதோ அல்ல. நம்மை நாமே குறைவாக மதிப்பிட்டு, எம்மை நாமே முழு மையாக கௌரவிக்கத் தவறி விடுவது தான்.

ஒவ்வொரு மனிதனும் தனது திறமைகளை முற்றிலும் உணராதவனாகவே இருக்கிறான். அதனால் அவற்றை முழுவதுமாகப் பயன் படுத்தாதவனாகவே வாழ்கிறான். ஐன்ஸ்டீன் போன்ற மாமேதைகளே தங்கள் மூளைத் திறனில் சுமார் 15 சதவீதம் வரை தான் பயன்படுத்தியிருக்கக்கூடும் என்று ஆராய்ச்சி யாளர்கள் கூறுகிறார்கள். அதனால் மனிதன் தன்னால் என்னவெல்லாம் முடியும், அதுவும் எந்த அளவுக்கு முடியும் என்பதை அறியாத வனாகவே வாழ்ந்து மரிக்கிறான். இதில் தாழ்வு மனப்பான்மை என்ற கொடுமை வேறு அவனைச் சில நேரங்களில் ஆட்டிப் படைக் கின்றது.

எம்மால் என்னவெல்லாம் முடியும் என்பதை முயன்று பார்க்காதவரை எமக்குத் தெரிவ தில்லை. முன்கூட்டியே முடியாது என்று தீர்மானித்து விட்டாலோ முயற்சி செய்யும் சிரமத்தையும் நாம் எடுத்துக் கொள்வதில்லை. இறைவன் என்னவெல்லாம் தரவில்லை என்பதை என்னேரமும் மறக்காமல் குமுறும் நாம், அவன் தந்ததை எல்லாம் எந்த அளவுக்குப் பயன்படுத்தி இருக்கிறோம், பயன்படுத்தி எந்த அளவு முன்னேற்றத்தைச் சந்தித்திருக்கிறோம் என்பதை எல்லாம் சிந்தித்து உணரப் பெரும் பாலும் மறந்து விடுகிறோம்.

செவிடு, குருடு, ஊமை என்ற மூன்று குறை பாடுகளையும் சிறிய வயதிலேயே கொண் டிருந்த ஹெலன் கெல்லரை (1880-1968) நீங்கள் அறிந்திருக்கக் கூடும். இந்தக் குறை பாடுகள் அவரை முடங்கி இருக்கச் செய்து விடவில்லை. செவிட்டுத் தன்மையையும், குருட்டுத் தன்மையையும் மாற்ற முடியா விட்டாலும் ஊமைத் தன்மையை மாற்றக் கடும் முயற்சி செய்து அதில் வெற்றியும் கொண்டார் அவர். பிற்காலத்தில் உலகப் புகழ்பெற்ற பேச்சாளராக விளங்கினார்.



**அவருடைய 13ஆம் வயதில் ஒரு பத்திரிகையில் மிக மோசமாக உடல் ஊனமுற்ற ஒரு மனிதர் அதையும் மீறிச் செய்த அற்புத செயல்களைப் பற்றி எழுதியிருந்ததைப் படித்தார்.**

பல உலக நாடுகளுக்கு பயணித்து சொற் பொழிவாற்றினார். பன்னிரண்டு புத்தகங்கள் எழுதினார். பார்வையிழந்தோருக்கான தொண்டு நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தி அதற்காக வாழ்நாளெல்லாம் உழைத்தார். அவரைப் பற்றிய திரைப் படங்கள் தயாரிக் கப்பட்டுள்ளன. ஓர் ஊமைப்படத்தில் நடித்தும் இருக்கிறார். இத்தனையும் நிகழ முக்கிய காரணம் ஹெலன் கெல்லர் தன்னைக் குறைத்து மதிப்பிட்டுக் கொள்ளாதது தான். செவிடு, ஊமை, குருடு என்ற மூன்று மிகப்பெரிய குறைகள் உள்ள தன்னால் என்ன முடியும் என்று சுய பச்சா தாபத்தில் ஒதுங்கி விடாதது தான்.

அதேபோல் இக்காலத்தில் எம்மைப் பிரமிக்க வைக்கும் இன்னொரு நபர் நிக் வூயிசிச் (Nick Vujicic). 1982 ஆம் ஆண்டு ஆஸ்திரேலி யாவில் மெல்போர்னில் பிறந்த இவருக்குப் பிறந்த போதே கைகளில்லை, கால்களு மில்லை. இப்படிப் பிறந்த ஒருவர் வாழ்ந்து என்னதான் செய்து விட முடியும் என்று எல்லோருக்கும் நினைக்கத் தோன்றும்.

அவர் நடப்பார், நீந்துவார், விளையாடுவார், எழுதுவார் என்றெல்லாம் சொன்னால் அது கற்பனைக்கும் எட்டாத பொய் என்றுதானே நினைக்கத் தோன்றும். ஆனால் இன்றும் அதை எல்லாம் செய்து காட்டுகிறார் அவர் என்பது தான் அதிசயிக்க வைக்கும் உண்மை.

அவருக்கு இடதுகால் இருக்க வேண்டிய இடத்தில் இருக்கும் ஆறாம் விரல் போன்றதொரு பாகம் தான் அவரால் இயக்க முடிந்த ஒரு பாகம். பள்ளியில் படிக்கச் சென்ற அவரை அனைவரும் ஏளனமாகவும் வேற்றுக்கிரகவாசி போலவும் பார்த்தது அவருக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. 13 வயது வரை அவர் சதா தற்கொலைச் சிந்தனைகளிலேயே இருந்தார். ஆனால் தற்கொலைக்குக் கூட அடுத்தவர் உதவ வேண்டி இருந்த பரிதாப நிலை அவருடையது.

அவருடைய 13ஆம் வயதில் ஒரு பத்திரிகையில் மிக மோசமாக உடல் ஊனமுற்ற ஒரு மனிதர், அதையும் மீறிச் செய்த அற்புத செயல்களைப் பற்றி எழுதியிருந்ததைப் படித்தார். அதனைப் படித்தபோது அவருக்குள் ஒரு மின்னல் அடித் தது. அந்தச் செய்தி பெரியதோர் மாற்றத்தை அவர் வாழ்க் கையில் ஏற்படுத்தியது. தளராத மனத்துடன் ஒவ்வொரு புதிய செயலையும் தேர்ந்தெடுத்துக் கற்றுக் கொண்டார்.

கணினியை இயக்குவதுவரை, டென்னிஸ்



விளையாடுவது வரை கற்றுக் கொண்ட அவர் தற்போது அமெரிக்காவில் வசித்து வருகிறார். பல நாடுகளுக்குச் சென்று தன்னம்பிக்கை ஊட்டும் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வரும் அவர் உடல் ஊனமுற்றவர்களுக்காக லைஃப் வித்தவுட் லிம்ப்ஸ் (Life Without Limbs) என்ற ஓர் அமைப்பை நிறுவி அவர்களுக்கு உதவி வருகிறார்.

ஹெலன் கெல்லரும், நிக்கும் உறுப்புகளில் குறையுடன் பிறந்திருந்தாலும் அந்தக்குறை களைத் தங்களின் விதியைத் தீர்மானித்து விட அனுமதிக்கவில்லை. தங்களை அந்தக் குறை கள் வரையறுத்து விடவும் அனுமதிக்கவில்லை. தங்களைக் குறைத்துக்கொள்ளாத அவர்கள் மாறாக தங்களைத் தாங்களே உயர்த்திக் கொண்டார்கள். எப்படி எங்களால் முடியும் என்று நியாயமான கேள்விகளைக்கூட எழுப்பி குறைகளைப் பெரிதுபடுத்தாமல், இருக்கும் நிஜத்தை ஏற்றுக் கொண்டு அதிலிருந்து உயர முழு உற்சாகத்தோடு முயன்று இமயம் என உயர்ந்து நிற்கிறார்கள்.

சென்ற நூற்றாண்டு மனிதர்கள் நினைத்துப் பார்க்காத எத்தனையோ அற்புதங்கள் இன்று நமக்குச் சர்வ சாதாரணமாக இருக்கின்றன. ஒரு காலத்தில் முடியாது என்று நினைத்த விடயங்கள் இன்று எமது தினசரி வாழ்க்கையின் அங்கமாக இருக்கும் அளவுக்கு மலிந்து விட்டன.

அதைச் சாதித்த மனிதர்கள் அனைவரும் தங்களைக் குறைத்துக்கொள்ளாமல் தங்கள் திறமைகளால் தங்களை உயர்த்திக் கொண்ட வர்கள். அவர்கள் உயரும்போது அவர்களுடன் மனித சமூகமே உயர்ந்தது என்பது தான் அவர்கள் கண்ட உண்மையான் சிறப்பு.

உயர்த்திக் கொள்வது என்பது கர்வப்படுவது என்ற அர்த்தத்தில் சொல்லப்பட்டதல்ல. அது தன்னைத் தானே உயர்வாகச் சொல்லிக் கொள்வதல்ல. எம் திறமைகளையும், சக்திகளை யும் உயர்த்திக் கொள்வதே உண்மையான உயர்த்திக் கொள் ளல். எம் திறமைகளின் எல்லைகளை நீட்டிக் கொண்டே செல்வது தான் உயர்த்திக் கொள்ளல். எந்தச் சூழ்நிலையும் எம்மைக் குறைத்து விட அனுமதிக் காமல் நிமிர்ந்து நிற்பது தான் உயர்த்திக் கொள்ளல். அதெல்லாம் அபூர்வமான சிலருக்குத்தான் முடியும் என்று மட்டும் சொல்லி உங்களைக் குறைத்துக் கொள்ளாதீர்கள். ஹெலன் கெல்லரும், நிக் வூயிசிச்சும் கூடத் தங்களைக் குறைத்து எண்ணி விடாமல் இருக்கையில் அவர்களைக் காட்டிலும் நல்ல நிலையில் பிறந்த நாம் எம்மைக் குறைத்துக் கொண்டால் அது கடைந்தெடுத்த முட்டாள் தனமாகத் தான் இருக்கும்.

# இரண்டு அணுகுண்டுகளுக்கு தாக்குப் பிடித்த ஒரே நபர்!


Tsutomu Yamaguchi (திசு தொமு யாமாகுசி) என்ற துர திர்ஷ்டசாலி பற்றியே இன்று பார்க் கப்போகின்றோம். உலக வரலாற் றில் இதுவரை இரண்டு அணு குண்டுகளே போர்களின்போது பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது அனைவருக்கும் தெரியும்.

இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்காவால் ஜப்பான் மீது வீசப்பட்ட இரண்டு அணுகுண்டுத் தாக்குதலுக்கும் முகம்கொடுத்து தப்பித்த ஒரே ஒரு நபர் யாமாகுசி ஆவார். t×s´ நிறு வனத்தின் வேலை அலுவல்களுக்காக ஹிரோ ஷிமா (Hiroshima) நகரத்தில் தங்கியிருந்தார் யாமாகுசி அடுத்த நாள் தனது சொந்த ஊரான நாகஷாகி (Naga sahi இக்கு பயணிக்க திட்டமிட்டிருந்தார்.

**அமெரிக்க போர் விமான ஓட்டி எனோலா கேய், Little Boy எனப் பெயரிடப்பட்ட முதலாவது அணு குண்டை ஹிரோஷிமா நகர மையத்தில் போட்டார்.**

காலையில் நகரத்தை விட்டு வெளி யேறத் தயாராக இருந்த அவருக்கு பயணச்சீட்டை தவறுதலாக அலு வலகத்தில் விட்டு விட்டது அப்போது தான் நினைவுக்கு வந்தது. உட னடியாக அலுவலகம் சென்று பய ணச்சீட்டை எடுத்துக்கொண்டு வெளி யேறினார். அப்போது நேரம் 8:15. (6/8/1945).

அமெரிக்க போர்விமான ஓட்டி எனோலா கேய், (Little Boy) விற்றின் பேஸ் எனப் பெயரிடப்பட்ட முதலாவது அணுகுண்டை ஹிரோ ஷிமா நகர மையத்தில் போட்டார். இதன் தாக்கத்தால் சுமார் 3 கிலோ மீற்ற ருக்கு அப்பால் இருந்த யாமகுசியின் பார்வை தற்காலிக மாக அற்றுப்போனதுடன், அவரது







உடலின் வலது பாகங்கள் பெரும் பாலும் எரிந்துபோயின. பின்னர், மீட்புப் படையினரின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார். வைத்தியசாலையில் 3 நாள்கள் சிகிச்சை பெற்ற அவர், தனது சொந்த ஊரான நாகசாகிக்கு மாற்றப்பட்டார்.


9/6/1945 அமெரிக்கப் போர் விமானி பொஸ்கார் (Fat Man) பாற்மான் என்ற இரண்டாவது அணு குண்டை நாகசாகி மீது போட்டார்! குண்டு போடப்பட்ட இடத்தில் இருந்து சரியாக 3 கிலோமீற்றர் தூரத்தில் தங்கவைக் கப்பட்டிருந்த யாமகுசி இம்முறை எந்த வித பாதிப்புக்கும் உள்ளா காமல் காக்கப்பட்டார்.


இவ்வாறு, துரதிர்ஷ்ட வசமாக இரண்டு அணு குண்டுத் தாக்கு தலுக்கும் உள்ளான யாமாகு சியை 2009 ஆம் ஆண்டு இரண்டு அணுகுண்டுகளுக்கும் தப்பிய ஒரே நபர் என்ற ரீதியில் ஜப்பான் அரசு கௌரவித்தது.

இவர் 2010 ஆம் ஆண்டு தனது 93 ஆவது வயதில் வயிற்றுப்புற்று நோயால் இறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலையவன்





# நோய்த் தடுப்பூசியை கண்டுபிடித்த சீமாட்டி மேரி வோர்ட்லி மென்டாகு

## அவரைப்பற்றி அறியாத தகவல்கள்

உங்களுக்குப் .பெரியம்மை, பிளேக், போலியோ போன்ற கொள்ளை நோய்கள் வந்திருக்கின்றதா? அனைவருக்கும் வந்திருக்க நியாயமில்லை. ஆனால், மனிதர்கள் தமக்குத் தாமே போரிட்டு மடிவதை விட இது போன்ற கொள்ளை நோய்களால் கூட்டம் கூட்டமாக உயிரிழந்துள்ளனர். லட்சோப லட்சம் மக்கள் கொள்ளை நோய்களால் பாதிக்கப்பட்டு மடிந்திருக்கின்றனர். இக்கொள்ளை நோய்களை உலகிலிருந்து விரட்டிய டிக்க எவ்வாறு முடிந்தது?

1712 இல் பிரிட்டனின் தூதராகத் துருக்கிக்குச் சென்ற தன் கணவருடன் 24 வயதான புகழ்பெற்ற பெண் கவி ஞர் மேரியும் சென்றார். தன் உடலில் அழிக்க முடியாத அவலட்சணமான தழும்பை ஏற்படுத்திச்சென்றதும், தனது நாட்டில் ஆயிரக் கணக்கான மக்களைக் கொன்றது மான பெரியம்மை நோயால் துருக்கியில் யாரும் பாதிக்கப்படாததைக் கவனித்தார் மேரி. விரை விலேயே அங்கே வாழும் பழங்குடி மக்களின் ஊசி குத்துதல் (ingrafting) சடங்குக்கும் இதற்கும் ஏதோ தொடர்பிருக்க வேண்டும் என்று ஊகித்தார் மேரி.

அங்கே யாருக்காவது பெரியம்மை நோய் தாக்கிய தென்றால் உடனே கூட்டமாகக் கூடி நோய்க் கிருமி இருக்கும் திரவத்தை ஒரு தேங்காய்ச் சிரட்டையில் எடுத்துக் கொண்டு ஒரு வயதான பெண்மணி அவர்களின் மொழியில் ஏதோ பாடலைப் பாடிக் கொண்டே ஓர் ஊசியின் மூலம் திரவத்தைத் தொட்டு ஒவ்வொருவரின் நரம்பிலும் செலுத்துவதைக் கண்டார் மேரி.

அதன்பின் அவ்வாறு செலுத்தப்பட்டவர் சிறிய அளவில் சொறி மற்றும் காய்ச்சலால் ஓரிருநாள்கள் அவதிப்படுவதையும், அதன் பின்னர் அவரை அம்மை நோய் தாக்குவதில்லை என் பதையும் அறிந்து கொண்டார்.

1713 இல் பிரிட்டனுக்குத் திரும்பிய மேரி இதுகுறித்த தனது கருத்தைப் பரவலாக அனைவருக்கும் தெரியப்படுத்தினார். ஆனால் அனைவரும் அவரை முட்டாள் தனமாகப் பேசு கின்றார் என்று ஒதுக்கி விட்டனர். 1714 இல் வேல்ஸ் இளவரசி இவரது பேச்சால் ஈர்க்கப்பட்டு, கைதிகளுக்கும் அனாதை களுக்கும் சோதனை முறையில் இந்த ஊசி செலுத்தும் முறையைப் பின்பற்றுவதற்கு அனுமதியளித்தார்!

மேரி அம்மை தாக்கப்பட்டவர்களிடமிருந்து சீழ் போன்ற திரவத்தை எடுத்து சோதனைமுறையில் சிலருக்குக் குறைந்த ளவில் செலுத்தினார். இதனால் அவர்கள் இறப்பது மூன்றில் ஒருபங்காகக் குறைந்தது. தழும்பு ஏற்படுவது ஐந்தில் ஒருவருக்கே நிகழ்ந்தது. இவ்வாறு ஊசி போடுவதால் சில கெடுதல்களும் நிகழ்ந்தன. அம்மை நோய்க்கிருமிகள் வேகமாகப் பரவி பெருக்கமடைந்து விடுவதால் ஆபத்தான வையாகி விட்டன. எந்த ஊசி உயிரைக் காக்கவேண்டுமோ அதுவே உயிரைக் குடிக்கும் எமனாகவும் மாறி விட்டது. இதனால் இந்த முறை அப்படியே வழக்கொழிந்து போனது.

அதன்பின்னர் 1794 இல் வந்தார் எட்வர்ட் ஜென்னர். கிராமப்புறத்தில் வாழ்ந்த அவர் பால்பண்ணையில் வேலை பார்ப்பவர்களுக்குப் பெரியம்மை வருவதில்லை என்பதைக் கண்டறிந்தார். ஆனால், அவர்கள் அனைவருமே பசுக் களைத் தாக்கும் ஒருவித அம்மை நோயால் பாதிக்கப் படுவதையும் கண்டுபிடித்தார். அவர்களது கைகளில் சிறிய கொப்பளமாக வெடிப்பை அந்நோய் ஏற்படுத்தி யிருந்தது. ஜென்னர் ஒரு முடிவுக்கு வந்தார்.


அதாவது, பசு அம்மை நோய்க்கும், பெரியம்மைக்கும் ஏதோ தொடர்பிருக்க வேண்டுமென்றும், மாட்டு அம்மையால் தாக்கப்பட்டவர்கள் ஊசி குத்துதல் முறை போன்று கிருமியை ஏற்றுக்கொள் வதால் அவர்களுக்குப் பெரியம்மை நோய் வருவதில்லை என்றும் முடிவு செய்தார்.

சோதனை முறையில் 20 குழந்தைகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு பசு அம்மை நோய்க்கிருமிகளைச் சிறியளவில் ஏற்றினார் ஜென்னர். அனைவருக்கும் பசு அம்மை நோய் வந்தது. கைகளில் கொப்பளங்கள் வந்து அவர்கள் பலநாள் கள் பாதிக்கப்பட்டனர். அதன்பின்னர் அனைவருக்கும் பெரியம்மை நோய்க்கிருமியையும் ஏற்றினார் ஜென்னர். அவர்கள் பெரியம்மை நோயால் பாதிக்கப்பட்டார் களேயானால் இறந்து விடுவதற்குக்கூட வாய்ப்பிருந்தது. ஆனால் அவர்களில் ஒருவரைக்கூட பெரியம்மை நோய் அணுகவில்லை.

இவ்வாறு முள்ளைக் கொண்டே முள்ளை எடுப்பதையும், விஷத்தைக் கொண்டே விஷத்தை முறிப்பதையும் கண் டறிந்த ஜென்னர் அதற்கு தடுப்பூசி முறை (vaccination) என்று பெயரிட்டார். 1798 இல் அவரது ஆராய்ச்சியையும் உலகுக்கு வெளிப்படுத்தினார். Vacca என்றால் லத்தினில் பசு என்று பொருள். Vaccinia என்றால் பசு அம்மை நோய் என்று பொருள்.

## கண்டறியாத ஆபத்தான வைரஸ்கள்

# விலங்குகளிடையே லட்சக்கணக்கில்...



தொற்று நோய்களுக்குக் காரணமான வைரஸ் கிருமிகளில் நாம் கண்டறியாதவை ஏராளமாக உள்ளன.

விலங்கினங்களிடையே நாம் இதுவரை கண்டறியாத இலட்சக்கணக்கான கிருமி வகைகள் காணப்படுவதாக புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

மனிதர்களைப் பாதிக்கவல்ல பெரும்பாலான நோய்க் கிருமிகள் விலங்குகளிடமிருந்து வந்தவைதான் என்ற நிலையில், பல்வேறு நோய்க் கிருமிகளை காவக்கூடிய ஒரு விலங்காக நாம் அறிந்துள்ள வௌவால் இனமொன்றை அமெரிக்க மற்றும் பங்களாதேஷ் விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர்.

நாம் இதுவரை அறிந்திராத புதிய அறுபது வகையான கிருமிகள் அந்த வௌவால் இனத்தில் இருப்பதை அவர்கள் கண்டறிந்தனர்.

நோய்க் கிருமிகளைக் காவவல்ல மற்றைய விலங்கினங்களிலும் இப்படி புதிய வகை நோய்க்கிருமிகள் இருப்பதாகக் கணக்கிட்டால் நான் இதுவரை அறிந்திராத மூன்று லட்சத்து இருபதாயிரம் வகை நோய்க் கிருமிகள் விலங்கினங்களிடையே இருப்பதாக விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளனர்.

இந்த நோய்க் கிருமிகளை நாம் அடையாளம் காணுவதென்பது எதிர்காலத்தில் தொற்று நோய்கள் மனிதர் களிடையே பரவுவதைத் தடுக்க உதவியாக இருக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இத்தனைக் கிருமிகளையும் கண்டறிய அறுநூறு கோடி டொலர்கள் செலவாகும் என ஆராய்ச்சிக் குழு தெரிவிக்கிறது. ஆனால் ஒரு தொற்றுநோய் மனிதர்களிடையே பெரிய அளவில் பரவிவிட்டால் அதனைக் கட்டுப்படுத்த இதனைவிட பல மடங்கு அதிகமான தொகை செலவாகும் என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த ஆய்வின் முடிவுகள் எம்பயோ என்ற விஞ்ஞான சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த ஆராய்ச்சியுடன் சம்பந்தப்பட்ட பிரெடிக்ட் என்ற [illegible] மனிதர்களும் விலங்குகளும் நெருங்கி வாழும் இடங்களில் இருந்து 240 புதிய வகை கிருமிகளை இதுவரை கண்டுபிடித்து அடையாளப் படுத்தியுள்ளது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

> “இந்த நோய்க் கிருமிகளை நாம் அடையாளம் காணு வதென்பது எதிர்காலத்தில் தொற்று நோய்கள் மனிதர்களிடையே பரவுவதைத் தடுக்க உதவியாக இருக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இத்தனைக் கிருமிகளைக் கண்டறிய அறுநூறு கோடி டொலர்கள் செலவாகும் என ஆராய்ச்சிக் குழு தெரிவிக்கிறது. ஆனால் ஒரு தொற்றுநோய் மனிதர்களிடையே பெரிய அளவில் பரவிவிட்டாலே அதனைக் கட்டுப்படுத்த இதனைவிட பல மடங்கு அதிகமான தொகை செலவாகும் என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளைத் திறனைப் பாதிக்கும் வறுமை




வறுமையில் சிக்குவோரின் மூளைச் செயற்பாடுகளை பணக்கஷ்டங்கள் ஆட்கொள்கின்றன. வறுமையில் உழல்வது ஒருவரின் மூளைத் திறனைப் பாதிப்பதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இந்தியாவிலும் அமெரிக்காவிலும் நடந்துள்ள இரண்டு ஆய்வுகளின் முடிவுகள் 'சயன்ஸ்' விஞ்ஞான சஞ்சிகையில் வெளியாகியுள்ளன.

முன்னர் வெளியாகியிருந்த தகவல்களின்படி வறுமைக்கும் தவறான முடிவுகளுக்கும் இடையே தொடர்புள்ளதாக கண்டறியப்பட்டது. ஆனால் அதற்கான மூல காரணங்கள் சரியாக தெளிவில்லாமல் இருந்தன.

அமெரிக்கா, பிரிட்டன், கனடா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த குழுவினர் தமது ஆய்வின் ஒருபகுதியாக இந்தியாவில் கரும்பு விவசாயிகளின் வாழ்க்கை வட்டத்தை ஆராய்ந்தனர். அறுவடைக்கு முன்னரான காலத்தில் பயிர்ச்செய்கைக்காகக் கடன்பட்டிருக்கும் விவசாயிகள் அப்போது மிக வறியவர்களாக இருப்பார்கள். அறுவடைக்குப் பின்னர் அதனால் வருமானம் கைக்குக் கிடைத்திருக்காத காலம், வறுமையின் உச்சக் கட்டத்தில் அவர்கள், இருப்பார்கள். அதன்பின்னர் பணம் கைக்குக் கிடைக்கின்ற காலப்பகுதி என இவ்வாறு மூன்று கால கட்டங்கள் ஆய்வுக்கு உட்படுத் தப்பட்டன.

இவ்வாறான விவசாயிகளின் வாழ்க்கை வட்டத்தின் ஒவ்வொரு காலப் பகுதிகளிலும் அவர்களது மூளைத் திறனை பரிசோதிக்கும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அப் பரிசோதனை, அவர்களின் வருமானங்களுக்கு ஏற்ப அவர்களின் மூளைச் செயற்பாடுகள் மாறுபட்டிருந்ததை உறுதிசெய்துள்ள தாக பிரிட்டனின் வோர்விக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவர் ஆனந்தி மணி கூறுகிறார்.

கையில் பணம் இருந்த காலப் பகுதியில் நுண்ணறிவுத் திறனை பரீட்சிக்கும் சோதனைகளில் குறித்த விவசாயிகள் கெட்டிக்காரர்களாக இருந்தனர். போஷாக்கு, சுகாதாரம், உடல்சோர்வு மற்றும் குடும்பப் பொறுப்புகள் போன்ற ஏனைய காரணிகளை இந்த ஆய்வு கணக்கில் எடுக்கவில்லை.

இந்திய ஆய்வு முடிவுகள் அமெரிக்க ஏழைகளிடத்திலும் ஒப்பிட்டு உறுதி செய்யப்பட்டுள்ளன. இந்திய கரும்பு விவசாயி களிடத்தில் கண்டறியப்பட்ட இந்த முடிவுகளை அமெரிக்காவிலும் விஞ்ஞானிகள் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள பணக்காரர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையே ஆய்வு நடத்தப்பட்டது. இருதரப்பிடமும் இலகுவான சிரமமான அனுமானங்களின் அடிப்படையிலான கேள்விகள் கேட்கப்பட்டன.


அங்கும் சாதாரண கேள்விகளின் போது பணக்காரர்களிடத்திலும் ஏழைகளிடத்திலும் பெரிய அளவில் வித்தியாசம் தெரியவில்லை. ஆனால் சிரம்மான கேள்விகளின்போது அமெரிக்க ஏழைகளின் அறிவுத்திறன் குன்றி இருந்தமையை அவதானித்ததாக மருத்துவர் ஆனந்தி மணி கூறினார்.

முடிவில், வறியவர்களின் மூளைச் செயற்பாடுகளை பெரும்பாலும் பணக் கஷ்டங்கள் பற்றிய கவலைகளும் அழுத்தங்களும் ஆக்கிரமித்து விடுகின்றன. புத்திசாலித்தனமான முடிவுகளுக்கு மூளைச் செயற்பாடுகளில் சிறியளவுதான் வாய்ப்புக் கிடைக்கிறது எனக் கண்டறியப்பட்டது.

**சிரமமான கேள்விகளின்போது அமெ ரிக்க ஏழைகளின் அறிவுத்திறன் குன்றி இருந்தமையை அவதானித்ததாக மருத்துவர் ஆனந்தி மணி கூறினார்.**




# மனிதநேயம்




வாழ்க்கையில் மனித நேயம் முக்கியமான ஒன்று என்பதை அனைவரும் அறிவர். ஆனால் மனித நேயம் என்றால் என்ன அதன் இலக்கு என்ன என்பதை சற்று விரிவாக பார்க்கலாம். மனிதன் நேயமானது மனிதன், தான் தேடுகின்ற நிறைவை அல்லது குறிக்கோளை அடைவதற்கான முயற்சிகளை அறிவுடன் செயற்படுத்த உதவுகின்றது என்று கூறினால் மிகையாகாது. இதன் தன்மையானது ஒவ்வொருவரிடத்திலும் மாறுபடும். மேலும் அவை படிப்படியாக காலத்தின் சூழ்நிலைக்கேற்ப மாறு படக்கூடிய இயல்புடையவை எனலாம்.

எதை ஒருவன் நேயமாக கருதுகின்றானோ, அது அவனுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். பொதுவாகப் பார்த்தால் இந்த மனித நேயம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது.

ஒன்று இயல்புடைய நேயம். இவை சொந்த நலனுக்காக விரும்பத்தக்க, ரசிக்கும் தன்மை கொண்ட, இயல்பான நேயமாகும். மற்றொன்று, தூண்டக்கூடிய நேயம். இது மற்றைய நேயங்களை அடைய தூண்டுகோலாய் உள்ளது. உதாரணமாக ஒரு வேலையைத் திறம்படச் செய்து முடிக்க உதவுவது. இவ்வாறான நேயங்களே. இவற்றில் சில இந்த இரண்டு தன்மைகளையும் கொண்டுள்ளன. வாழ்க்கைக்கு தேவையான அன்பு, பாசம், ஆரோக்கியம், குறிக்கோள், வசதி, ஆர்வம், அறிவு, விவேகம், விளையாட்டு, கலை மற்றும் மதம் போன்றவைகள் இந்த இரண்டு தன்மைகளையும் கொண்டிருக்கும்.

அதில் அன்பு மற்றும் பாசம் என்ற நேயம்: மனித உறவில் பெற்றோர் அன்பு, சிநேகித அன்பு, மற்றும் சமுதாயப் பற்று ஆகியவற்றைக் குறிக்கும்.

**ஆரோக்கியம்:** இது உடல் மற்றும் உள்ளம் சார்ந்த ஆரோக்கியத்தைக் குறிக்கும்.

**குறிக்கோள்:** இது வாழ்க்கையில் குறிக்கோளை வெற்றிகரமாக அடைவதற்கு உண்டாகும் விருப்பம் அல்லது ஆர்வத்தை குறிக்கும்.

**வசதி:** இது வாழ்க்கை இன்பமாக வசதியாக அமையத் தேவைப்படும் நேயமாகும்.

**ஆர்வம்:** நல்ல ஆக்கப்பூர்வமான



செயல்களை அல்லது பொருள்களைச் செய்வதற்கு பயன்படுத்த உதவும் நேயமாகும்.

**விவேகம்:** வாழ்க்கையை நேர்மையான வாழ்க்கையாக வாழ்வதற்கு அறிவும் விவேகமும் மிக முக்கிய நேயமாக கருதப்படுகின்றது.

**விளையாட்டு:** இது விருப்பத்துடன் ஆக்கத்திறனுடன் ஈடுபடக் கூடிய செயலாகும்.

**கலை:** அழகு மிகுந்த எல்லா கலைப் பொருள்களையும் ரசிக்கும் நேயமாகும்.

**மதம்:** மனிதன் எப்படி வாழ வேண்டும். எதற்காக வாழ வேண்டும் என்ற தத்துவத்தை உள்ளடக்கிய நேயமாகும்

இவ்வாறான மனித நேயங்கள் ஒருவரின் விருப்பத்தைப் பொறுத்தும் ஆர்வத்தைப் பொறுத்தும் அமைகின்றன. இவைகள் மனிதனால் உருவாக்கப்பட்டு தரம்பிரிக்கப்பட்டு பின்னர் தான் அனுபவிக்கப்படுகின்றன. ஆனால் இன்றைய காலகட்டத்தில் அதன் நிலைமையே வேறாக உள்ளது. மனிதன் மனிதனாகவே மதிக்கப்படுவதில்லை. இதில் எங்கே மனித நேயத்தைப் பற்றி அறிவது? பக்கத்து வீட்டில் வசிப்பவர் யார் என்றே தெரியாத நிலையில், நமக்கேன் வம்பு என்ற தோரணையில் தான் மனித நேயம் வளர்ந்து வருகின்றது. இதில் யாரையும் குறை சொல்லிப் பயனில்லை. அவ்வாறு மனித நேயத்தை எதிர்ப்பார்ப்பவர் தான் அதற்கு தயாராய் இருக்க வேண்டும். குறைந்த பட்சம் குழந்தைகளிடத்திலாவது அதை வளர்க்க வேண்டும்.

ஏனெனில் குழந்தைகளுக்கு இயற்கையிலேயே பிறரை நேசிக்கும், பிறருக்காக வருத்தப்படும் பிறருடன் பகிர்தல் போன்ற இன்றியமையாத உணர்வுகளையும் சிறந்த நற்பண்புகள் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். அவைகளை யாரும் அவர்களுக்குச் சொல்லித் தர வேண்டியதில்லை. ஆனால் பெற்றோர்கள் அல்லது பெரியவர்கள் செய்யும் தவறுகளால் தான் குழந்தைகள் அவர்களிடமிருந்து மனித குல ஏற்றத் தாழ்வுகளை ஏழை, பணக்காரன், உயர்ந்தசாதி, தாழ்ந்த சாதி போன்ற எதிர்மறையான விடயங்களைக் கற்றுக் கொள்கின்றார்கள். பின்னர் எப்படி மனித நேயம் வளரும்? அதை யாரிடம் எதிர்ப்பார்க்க முடியும்?

எனவே மனித நேயத்தை வளர்க்கும் முக்கிய பொறுப்பு ஒவ்வொரு பெற்றோர்களையே சார்ந்தது. ஒவ்வொரு குடும்பமுமே அதற்கு பொறுப்பாகின்றது. குழந்தைகளை இதைச்செய்யாதே, அதைச் செய்யாதே இவனோடு பேசாதே, அவனோடு பழகாதே என்று சொல்லிச் சொல்லி அவை பின்னாளில் ஒட்டு மொத்த சமுதாயத்தைக் கெடுப்பவர்களாய் மாறுவதற்கு வழி ஏற்படுத்தாமல் குழந்தைகளை தன்னிச்சையாக வளரவிட்டாலே போதும். நிச்சயமாக மனித நேயமிக்க, நேயம் மிகுந்த, புதிய சமுதாயத்தை அவர்கள் உருவாக்கி விடுவார்கள் என்பது உறுதி.

**எதை ஒருவன் நேயமாக கருதுகின்றானோ அது அவ னுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். பொதுவாகப் பார்த் தால் இந்த மனித நேயம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களை அதிகமாகத் தாக்கும் கர்ப்பப்பை புற்றுநோய்



பிரிட்டன் மற்றும் இந்தியாவும் கூட்டாக நடத்தும் புற்றுநோய் தொடர்பான 2 நாள்கள் மாநாடு நடைபெற்றது. இந்திய மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த வெளிநாடு நிறுவனங்கள் காட்சிக் கூடங்களை அமைத்திருந்தன. அவற்றில் மருத்துவ கருவிகள், நவீன சிகிச்சை முறைகள் குறித்து விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த மாநாட்டின் சிறப்பு அம்சங்கள் குறித்து மியாட் மருத்துவமனையின் இணை நிர்வாக இயக்குநரும், இந்தோ- பிரிட்டன் ஹெல்த் இனிஷியேட்டிவ் நிறுவுநர் மருத்துவர் பிருத்வி மோகன்தாஸ், லண்டன் பல்கலைக்கழக பேராசிரியர் பிரபு காக்கர் ஆகியோர் கூறுகையில்:-

இரண்டு நாடுகளும் இணைந்து மருத்துவத் துறையில் இணைந்து பணியாற்ற ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக புற்றுநோய் பிரிவில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும், நாளுக்கு நாள் புற்றுநோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வரு கிறது. இதை ஆரம்பத்தில் கண்டறிந்தால் குணப்படுத்தலாம்.

இந்த மாநாட்டில் இந்தியாவைச் சேர்ந்த 55 மருத்துவர்கள், லண்டனைச் சேர்ந்த 20 மருத்துவர்கள் பங்கேற்கின்றனர். இந்தியாவில் உள்ள 16 வகையான புற்றுநோய் குறித்து கலந்தாய்வு நடத்தப்படுகிறது. இந்தியாவில் ஆண்களுக்கு வாய்ப்புற்றுநோயும், பெண்களுக்கு கர்ப்பப்பை புற்றுநோயும் அதிகமாக உள்ளன. ஆண்டுதோறும் 11 இலட்சம் பேர் புற்றுநோயால் பாதிக்கப் படுகின்றனர். புற்றுநோயை கட்டுப்படுத்த விழிப்புணர்வும் மருத்துவ வசதியும் அவசியமாகி வருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.





(C/11890)

வீசா இல்லாமல் படகு மூலம்
அவுஸ்திரேலியாவுக்கு வரும்
எவருமே அங்கு
குடியமர முடியாது

- வீசா இன்றி, படகுகள் மூலம் வரும் புகலிடக் கோரிக்கையாளர்கள், பப்புவா நியூகினி அல்லது நௌறு போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.
- ஆட்கடத்தல்காரர்களின் பொய்யான வாக்குறுதிகளைக் கேட்டு ஏமாற வேண்டாம். நீங்கள் கொள்வனவு செய்வது, அவுஸ்திரேலியாவுக்கான பயணச்சீட்டு அல்ல.
- அகதிகள் அல்லாத அனைத்துப் புகலிடம் கோருவோரும் மீண்டும் இலங்கைக்கே அனுப்பப்படுவர்.

அவுஸ்திரேலியாவுக்கு படகில் போக வேண்டாம்

Australian Government

அவுஸ்திரேலிய அரசாங்கம் விடுக்கும் செய்தி
மேலதிக விபரங்களுக்கு www.australia.gov.au/novisa


Digitized by Noolaham Foundation

# நாய்களைக் கட்டுப்படுத்த நவீன தொழில்நுட்பம்




நன்றாகப் பயிற்றுவிக்கப்பட்ட நாய்களைக் கொண்ட பல்வேறு வேலைகளை செய்விக்க முடியும் என்பது யாவரும் அறிந்ததே.

இந்தநிலையில் தானியங்கி கருவி ('ரிமோட்' கொன்ட்ரோல்) மூலம் நாய்களைக் கட்டுப்படுத்தும் x BuEI Alabama's Auburn பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் தீவிரமாக இறங்கியுள்ளனர். இதற்காக Jeff Miller மற்றும் David Bevly ஆகிய இரு பொறியியலாளர்களால் Microprocessor, Wireless radio, GPS Receiver போன்றவற்றைப் பயன்படுத்தி விசேடமாக வடிவமைக்கப்பட்ட முறைமை ஒன்று உருவாக் கப்பட்டுள்ளது.

இதன்மூலம் தற்போது 87 சதவீதம் சூழல் தொடர்பான ஆய்வுகளை வெற்றிகரமாக மேற்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது என குறித்த ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org